Follow us:
வாரவெளியீடு
# தமிழன்
THAMILAN தமிலன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 05, இதழ் : 27, குரோதி வருடம், மார்கழி மாதம் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
(05.01.2025) ஹிஜ்ரி-1446, ரஜப் - 04, 0115886187 - பக்கங்கள் 20+8+8+8
விலை ரூ.130



## சீன வைரஸ் இங்கும் பரவலாம்
### வெளியானது எச்சரிக்கை

சீனாவில் பரவலடைந்து வருவதாகக் கூறப்படும் வைரஸ் தொற்று நிலைமை இலங்கையிலும் பரவலடையும் எச்சரிக்கை நிலவுவதாக தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்தத் தொற்றுப் பரவல் தொடர்பில் வெள்ளிக் கிழமை ஒருசில தகவல்களை...

02 ஆம் பக்கம்

## நக்கல் நமசிவாயம்




# வடக்கில் மீண்டும் குடியேற்றங்கள்!

## இடம்பெயர்ந்த சிங்கள மக்களை மீளக்குடியமர்த்த விரும்பும் அரசு

வடக்கு மாகாணத்தில் முன்னர் வாழ்ந்த சிங்கள மக்களை மீண்டும் அவர்கள் வாழ்ந்த இடங்களுக்குச் சென்று வதிவதற்கான வசதிகளைச் செய்துகொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது.

இதன்படி மீள்குடியேற விரும்புவோருக்கான வசதிகளை அரசாங்கம் செய்துகொடுக்குமெனத் தெரிகிறது.

1983ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் எவ்வளவு சிங்களவர்கள் எந்தெந்த இடங்களில் வாழ்ந்தார்கள் என்ற ...

02 ஆம் பக்கம்

# உதயமாகிறது புதிய கூட்டணி

## அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் பேச்சு

நா.தினுஷா

நாட்டில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலை இலக்குவைத்து புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைக்க, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த பிரதான அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் தீர்மானித்துள்ளனர்.

சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட புதிய ஜனநாயக முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய கட்சிகளின் தலைமைத்துவச் செயற்பாடுகளால் அதிருப்தியடைந்துள்ள குழுவினர் இணைந்து இந்தப் புதிய கூட்டணியை உருவாக்க ...

02 ஆம் பக்கம்



## விரைவில் கைதாவார் மனுஷ நாணயக்கார

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவை கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் பிரிவு தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனுஷ நாணயக்காரவின் சகோதரரான திசர இரோஷன நாணயக்கார நிதி மோசடி குற்றச்சாட்டில் கடந்த 28ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

02 ஆம் பக்கம்

## சண்டே சாம்பார்



★ இறுக்கப்படும் மஹிந்த இராசதானி

★ மக்கள் அதிருப்தியை சமாளிக்க ஆட்சியாளர்கள் அதிரடி நடவடிக்கை

03 ஆம் பக்கம்




02 ஆம் பக்கம்

" கிளீன் ஸ்ரீலங்கா " நிகழ்ச்சித் திட்டம் சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்துவது தொடர்பானது மட்டுமல்ல. இது முழுமையாக சிதைந்து போயுள்ள சமூகக் கட்டமைப்பினால் அநாதரவான நிலையிலிருக்கும் எமது தாய்நாட்டை மீளமைப்பதற்காக அனைத்துத் துறைகளிலும் செய்யப்படும் தூய்மையாக்கலை காண்பதே எமது நோக்கமாகும்.

ஆனால் இந்த இலங்கையில் இன்று என்ன நடந்துள்ளது? சிறந்ததொரு சுற்றுச்சூழல் கட்டமைப்பு உள்ள நாட்டில் 2023ஆம் ஆண்டு யானை - மனித மோதலால் நூற்று எண்பத்திரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் 2023 ஆம் ஆண்டில் 484 யானைகள் மனிதர்களால் கொல்லப்பட்டுள்ளன. சிறந்த அழகியலுடன் கூடிய சுற்றுச்சூழல் கட்டமைப்பு இருந்தாலும் வருடத்துக்கு 484 யானைகள் இறக்கும் நாடாக இலங்கை காணப்படுகிறது.யானைகளினால் 182 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று" கிளீன் ஸ்ரீலங்கா " நிகழ்ச்சித் திட்ட நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்தார்.




## மனோ கணேசன் - ஜூலி சங் சந்திப்பு



தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசனுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரின் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது.

இனப்பிரச்சினை தீர்வுக்கான...

02 ஆம் பக்கம்

# தேசிய சந்தையில் மருந்துக்குத் தட்டுப்பாடு

## விளக்குகிறார் சுகாதார அமைச்சர்

தேசிய சந்தையில் ஒருசில அத்தியாவசிய மருந்துப்பொருட்களின்மையின் காரணமாகவே மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனவே, தட்டுப்பாடு நிலவும் மருந்து வகைகளை இறக்குமதிசெய்ய கால அவகாசம் தேவைப்படுமென்றும் இறக்குமதி நடவடிக்கைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்...

02 ஆம் பக்கம்

## காட்டு யானைகளை பாதுகாக்க உதவுமாறு இலங்கை மின்சார சபை மக்களிடம் கோரிக்கை

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின்சாரத்தை சட்ட விரோதமாக பயன்படுத்துவதால் நாடு இழக்கும் காட்டு யானை வளத்தைப் பாதுகாப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இலங்கை மின்சார சபை ஊடகப் பேச்சாளர் பொறியியாளர் ஏ.டி.கே.பராக்கிரமசிங்க விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நமது நாட்டின் உயிர்ப் பல்வகைமையின் அடையாளமாக விளங்கும் காட்டு யானைகள், மனிதச் செயற்பாடுகளால் அழியும் அபாயத்தில் உள்ளன.

கணக்கெடுப்புகளின் படி, 2024ஆம் ஆண்டில் மட்டும் இலங்கை மின்சார சபையினால் வழங்கப்படும் மின்சாரம், அனுமதியின்றி வேலிகளில் அல்லது கம்பிகளில் இணைக்கப் பட்டதன் காரணமாக சுமார் 50 யானைகள் இறந்துள்ளதாகப் பதிவாகியுள்ளது.

இந்தச் சட்டவிரோதச் செயல் தொடர்பில் இலங்கை மின்சார சபை ஏற்கனவே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், எமது நாட்டின் காட்டு யானை வளத்தைப் பாதுகாப்பதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றது.

மின் இணைப்பை அனுமதியின்றி வேலிகளில் அல்லது கம்பிகளில் பயன்படுத்துவது தொடர்பான தகவல்கள் இருப்பின் உடனடியாக 0112 118 767 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ அல்லது துரித எண் 1987 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

புராதன காலந்தொட்டு சமய ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் முக்கியத்துவம் பெறுகின்ற உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற, அவர்களால் விரும்பப்படுகின்ற நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்கின்ற யானைகளைப் பாதுகாக்க எங்களுடன் இணையுமாறு உங்களையும் அழைக்கிறோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சபாநாயகரை சந்தித்தார் சீனத் தூதுவர் சென்ஹொங்

02 ஆம் பக்கம்




## கெஹேலியவின் கணக்கு முடக்கம் நீடிப்பு



02 ஆம் பக்கம்

# அரசாங்கம் தடுத்தாலும் போராட்டம் செய்வோம்

## யாழ்ப்பாண மீனவர்கள் சூளுரை



''புதிதாக பதவியேற்றுள்ள அரசு எங்களை தண்ணீர் கொண்டு அடித்தாலும் கட்டை கொண்டு அடித்தாலும் நாங்கள் பயங்கொள்ள மாட்டோம். எமது வளங்கள் அழிக்கப்படுவதற்கு எதிராக யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத் துக்கு முன்னால் போராட்டம் செய்வோம்'' - என யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்கள் சம்மேளனத்தின் உப தலைவர் அந்தோனிப்பிள்ளை பிரான்ஸிஸ் ரட்ணகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சம்மேளனத்தின் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த அரசாங்கத்தின் இறுதி காலகட்டத்தில் இந்திய இழுவைப் படகுகளைக் கட்டாயப்படுத்தி நாங்கள் ஓரளவு தொழில் செய்துகொண்டிருந்தோம். ஆனால், புதிய அரசாங்கம் வந்த பின்னர் நிறைய இழுவைமடி படகுகள் எங்களது வளங்களை அழிக்கின்றன. ஆகையால் எமது தொழிலாளிகளின் வலைகளும் இல்லாமல் போகின்றன.

புதிதாக பதவியேற்றுள்ள கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரனுக்கு நாங்கள் இதனை புதிதாக சொல்லவேண்டிய அவசியமில்லை. கடந்த காலத்தில் நாங்கள் போராட்டத்தை நடத்தியபோது, இந்திய இழுவைப் படகுகள் குறித்து தமது தலைவருக்கு உடனடியாகத் தெரியப்படுத்துவோம், நடவடிக்கை எடுப்போம் என தற்போதைய கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் தெரிவித்தார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் கடற்றொழில் அமைச்சர் புதிதாக பதவியேற்ற பின்னர் இந்த இழுவைப் படகுகளை நிறுத்துமாறு எமது சம்மேளனம் சார்பாக நாங்கள் பல கோரிக்கை கடிதங்களை கையளித்துள்ளோம். இருப்பினும், நெடுந்தீவு தொடக்கம் சுண்டிகுளம் வரையான கடற் பகுதியில் இந்திய இழுவைப் படகுகள் எமது வளங்களை அளிக்கின்றன.

இவற்றை எம்மால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. ஜனாதிபதியும் கடற்றொழில் அமைச்சரும் இதற்கொரு சரியான முடிவை எடுக்காவிட்டால், யாழ்ப்பாணத்திலுள்ள கடற்றொழில் செய்யும் மக்களை இணைத்து நாங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்கு முன்னால் போராட்டமொன்றை முன்னெடுப்போம்.

இப்பொழுது புதிய அரசாங்கமொன்று வந்திருக்கின்றது. நாங்கள் ஆர்ப்பாட்டம் செய்கின்றபோது தண்ணீரால் அடிப்பார்கள், கட்டையால் அடிப்பார்கள். அவற்றையெல்லாம் பற்றி எங்களுக்குப் பயமில்லை. எங்களது பிரச்சினை தீர வேண்டுமென்றால் நாங்கள் போராட்டம் செய்வோம். எனவே, ஜனாதிபதியும் கடற்றொழில் அமைச்சரும் இதற்கொரு சரியான முடிவு கூற வேண்டும் - என்றார்.

# விமல் வீரவங்சவிடம் சி.ஐ.டி. விசாரணை

முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ தொடர்பில் வெளியிடப்பட்ட கருத்து குறித்து நிதி சலவைச் சட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் நிதி விசாரணைப் பிரிவின் முன்னிலையில் வெள்ளிக்கிழமை ஆஜராகினார்.

அவரின் சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில சட்டத்தரணியாக ஆஜராகியிருந்தார்.

தான் இதற்கு முன்னர் வெளியிட்ட கருத்துடன் தொடர்புடைய சகல எழுத்துபூர்வ மான தகவல்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளிடம் ஒப்படைத்ததாகவும் பெசில் ராஜபக்ஷவின் அமெரிக்க சொத்துகள் தொடர்பான தகவல்கள் அந்த ஆவணங்களில் உள்ளடக்கப் பட்டுள்ளதாகவும் விமல் வீரவங்ச இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

அவரின் சொத்துகளின் ஒரு பகுதியை மாத்திரமேதான் முன்வைத்துள்ளதாகவும் ஏனைய சொத்துகள் தொடர்பில் அரசுக்கு சொந்தமான தகவல்களை அமெரிக்கா விலிருந்து மிக விரைவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமெனவும் அவர் சுட்டிக்காட் டினார்.

### சீன...

அறிந்துகொள்ளக்கூடியதாக இருந்ததாகவும் முறையான பரிசோதனைகளின் பின்னர் அது தொடர்பில் ஊடகங்களுக்குத் தகவல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனா தொற்றுப் பரவல் ஏற்பட்டு ஐந்து வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், சீனாவில் மேலும் சில வகையான வைரஸ்களின் பரவல் நிலை உருவாகியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பிரதானமாக Human Metapneumovirus (HMPV) என்று பெயர் குறிப்பிடப்படும் வைரஸின் பரவல் நிலை அதிகரித்துக் காணப்படுவதுடன், அதில் கொரோனா நோயாளர்களும் அடையாளம் காணப்படுவதாகவும் ஷெவெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதே போன்று இன்புளுவென்சா வைரஸின் பரவல் வீதமும் சீனாவில் அதிகரித்துக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த வைரஸ் நிலைமை சீனாவில் விரைவாக பரவலடைந்து வருவதாக தெரிவிக்கப்படுவதுடன், வைரஸ் தொற்று நிலைமையின் காரணமாக நோயாளர்களின் எண்ணிக்கையிலும் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மனோ கணேசன்...

நகர்வு, அதிகாரப்பகிர்வு, மலையக பெருந்தோட்டக் காணி உரிமை, சட்டத்தின் ஆட்சி, பொருளாதார சவால்கள், சர்வதேச நாணய நிதியம் ஆகிய தலைப்புகளில் கலந்துரையாடல் அங்கு இடம்பெற்றதாக மனோ கணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

### கெஹேலிய...

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்குச் சொந்தமான வங்கிக் கணக்குகள் மற்றும் ஆயுள் காப்புறுதித் திட்டங்களைத் தற்காலிகமாக முடக்குமாறு பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவை மேலும் மூன்று மாத காலங்களுக்கு நீடிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை (03) உத்தரவிட்டுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கிணங்க கொழும்பு மேல் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அதன்படி, கெஹேலிய ரம்புக்வெல்ல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்குச் சொந்தமான சுமார் 97 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான வங்கிக் கணக்குகள் மற்றும் ஆயுள் காப்புறுதித் திட்டங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி வரை தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### உதயமாகிறது...

திட்டமிட்டுள்ளதாக அறியமுடிகிறது.

நிமல் லான்சா, திஸ்ஸ அத்தநாயக்க, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், எரான் விக்கிரமரத்ன, சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட தரப்பினரின் பங்குபற்றலுடன் இந்தக் கூட்டணி அமைக்கப்படவுள்ளதுடன், புதிய பெயர் மற்றும் புதிய சின்னத்தில் இந்தக் கூட்டணி உருவாக்கப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலப் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி, கடந்த அரசாங்கத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்துவந்த தரப்பினர், முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட தரப்பினரால் புதிய ஜனநாயக முன்னணி உருவாக்கப்பட்டது. கடந்த அரசாங்கத்தில் முக் கிய அமைச்சுப் பொறுப்புகளை வகித்த பலர் இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கிறார்கள்.

இதற்கிடையில், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி உருவாக்கப்பட்டது. இருந்தபோதும் தேர்தலின் பின்னர் இவ்விரு கூட்டணிகளும் செயலிழந்துள்ள நிலையிலேயே தற்போது புதிய கூட்டணிக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், கடந்த பொதுத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணிக்கு மூன்று ஆசனங்களும் இரு தேசியப்பட்டியல் ஆசனங்களும் கிடைக்கப்பெற்றிருந்தன. தேசியப்பட்டியல் ஆசனங்களைப் பகிர்வதில் புதிய ஜனநாயக முன்னணிக்குள் முரண்பாடு ஏற்பட்ட நிலையில், இந்த விவகாரத்தில் அதிருப்தியடைந்துள்ள பொதுஜன பெரமுனவிலிருந்து விலகிவந்துள்ள தரப்பினர் புதிய அரசியல் கூட்டணியொன்றை அமைக்கும் உத்தேசத்தில் இருக்கிறார்கள்.

அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் கட்சித் தலைமைத்துவத்தின் செயற்பாடுகளில் அந்தக் கட்சியிலிருக்கும் முக்கியஸ்தர்கள் அதிருப்தியடைந்துள்ளதாக அறியமுடிகிறது. இந்த நிலைமையில் ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள அதிருப்தியாளர்களும் இந்தப் புதிய அரசியல் கூட்டணி பேச்சுவார்த்தையில் இணைந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை, கட்சியின் தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினை சுதந்திரக் கட்சிக்குள் நீண்ட நாட்களாக இருந்துவருகின்ற நிலை யில், அந்தக் கட்சிக்குள் இருக்கும் முக்கியஸ் தர்கள் பலர் அதிருப்தி வெளியிட்டு வருகின் றனர். இந்தப் பின்னணியிலேயே எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை இலக்குவைத்து புதிய கூட்டணியொன்றை அமைக்க தீர்மானிக்கப் பட்டுள்ளதுடன், இந்தக் கூட்டணிக்கான பேச்சுவார்த்தைகள் அடுத்தவாரத்தில் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப் படுகிறது. இந்தப் பேச்சுவார்த்தைகளை விரைவாக நிறைவுசெய்து, புதிய கூட்டணி தொடர்பான இறுதி அறிவிப்பு இம்மாத இறுதிக்குள் வெளியாகுமென அரசியல் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### தேசிய...

சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இதேவேளை, சில மருந்துகளை இறக்குமதி செய்யும் செயற்பாடுகளில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தேசிய சந்தையில் மருந்துகள் இருக்குமாக இருந்தால் அவற்றை கொள்வனவுசெய்து வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினர்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மருந்து விவகாரத்தில் நிதி தட்டுப்பாட்டுக்கப்பால் மருந்து இறக்குமதி செய்யும் முறையில் பிரச்சினை தோற்றம் பெற்றுள்ளது. அந்த முறையையே மாற்றியமைக்க வேண்டும். அவ்வாறான முறையொன்று நடைமுறையில் இருக்கும் நிலையில், மருந்து கொள்வனவு நடவடிக்கை களுக்கு விரும்பினால் எவராலும் ஒத்துழைப்பு வழங்க முடியும். அதில் எந்தச் சிக்கலும் இல்லை.

தேசிய சந்தையில் தேவையான மருந்துகள் இருந்தால் அரசாங்கம் தலையிட்டு மருந்துகளை கொள்வனவுசெய்ய நடவடிக்கை எடுக்கும். ஒருசில மருந்துகள் தேசிய சந்தையில் இல்லாமையே தற்போதைய மருந்துத் தட்டுப்பாட்டுப் பிரச்சினைக்கான காரணமாகும். எனவே, அந்த மருந்துகளை வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்ய வேண்டும். இறக்குமதி செய்ய கால அவகாசம் தேவைப்படும். அதுவே தற்போதுள்ள பிரச்சினையாகும் என்றும் சுட்டிக்காட்டினார்.

### சபாநாயகரை...

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங், சபாநாயகர் (வைத்திய கலாநிதி) ஜகத் விக்ரமரத்னவை அண்மையில் (01) பாராளுமன்றத்தில் சந்தித்தார். இச்சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீரவும் கலந்துகொண்டார்.

இதன்போது சீன தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் தலைவர் (சீன பாராளுமன்ற சபாநாயகர்) ஸாவோ லெஜி (Zhao Leji) யின் வாழ்த்துக் கடிதத்தை சீனத் தூதுவர் புதிய சபாநாயகரிடம் கையளித்தார். சீனத் தூதுவர் புதுவருட வாழ்த்துகளைத் தெரிவித்ததுடன், இரு நாடுகளுக்குமிடையிலான நீண்டகால ஒத்துழைப்பை நினைவு கூர்ந்தார். எதிர்காலத்தில், குறிப்பாக, பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் இரண்டு சட்டவாக்க நிறுவனங்களுக்குமிடையேயான உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

பொலனறுவையிலுள்ள சீன – இலங்கை நட்புறவு தேசிய சிறுநீரகவியல் சிறப்பு வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளராக தனது முன்னனுபவத்தைப் பகிர்ந்துகொண்ட சபாநாயகர், இலங்கை மக்களுக்கு மிகவும் நன்மை பயக்கும் சீன அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் நன்றி தெரிவித்தார். இரு பாராளுமன்றங்களுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் இலங்கை - சீன பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தை மீள் புதுப்பிப்பதற்கான ஆர்வத்தையும் சபாநாயகர் வெளிப்படுத்தினார்.

அத்துடன், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீனாவுக்கான முதலாவது விஜயத்துக்கான தயார்படுத்தல் தொடர்பில் குறிப்பிட்ட சீனத் தூதுவர் கீ சென்ஹொங், இந்த வரலாற்று நிகழ்வு இருதரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்தும் - எனத் தெரிவித்தார்.

### விரைவில்...

இவர் பின்லாந்தில் வேலைவாய்ப்பைப் பெற் றுக்கொடுப்பதாகத் தெரிவித்து தனிநபர் களிடமிருந்து 3 பில்லியன் ரூபா வரையில் மோசடி செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த மோசடி செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே, முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவை வும் கைதுசெய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

தற்போது மனுஷ நாணயக்கார வெளிநாடு சென்றுள்ள நிலையில், நாடு திரும்பியவுடன் உடனடியாக அவரை கைதுசெய்ய பாதுகாப்புப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிய முடிகிறது.

### வடக்கில்...

விபரங்கள் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தால் திரட்டப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. ஆளுங்கட்சியின் மேலிட உத்தரவொன்றின் பிரகாரம் இந்தச் செயற்பாடுகள் இடம்பெறுவதாகத் தெரிகிறது.

வடக்கின் காணிகள் வெளியாரால் ஆக்கிரமிக்கப்படுவது குறித்தான சர்ச்சைகள் நீண்டகாலம் நிலவிவரும் நிலையில், அங்கு சிங்கள மீள்குடியேற்றங்களுக்கு அரசாங்கம் தயாராகி வருவது தமிழர்களிடையே சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ளது.






சிவா இராமசாமி
mesivaraj@yahoo.com

# ★ இறுக்கப்படும் மஹிந்த இராசதானி

# ★ மக்கள் அதிருப்தியை சமாளிக்க ஆட்சியாளர்கள் அதிரடி நடவடிக்கை

# ★ எக்னெலிகொட வழக்கில் கோட்டா சிக்கும் நிலைமை

# ★ ஐக்கிய மக்கள் சக்திக்குள் மறுசீரமைப்பு

2025ஆம் ஆண்டின் முதலாவது மாதத்தில் அதிரடி வேலைகளைச் செய்யத் தயாராகி வருகிறது அநுரகுமார திசாநாயக்க அரசாங்கம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் கைதுசெய்யப்படும் வாய்ப்பிருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்தவின் புதல்வர் யோஷித, மஹிந்தவின் மெய்ப்பாதுகாவலர் நெவில் ஆகியோரே கைதுசெய்யப்படும் பட்டியலில் முதலிடத்தில் இருக்கின்றனர். இவர்கள் பல்வேறு மோசடிகள் மற்றும் ஊழல்களில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரபல றக்பி விளையாட்டு வீரர் தாஜுதீனின் மரணம் சம்பந்தமான விசாரணைகளில் பலர் கைது செய்யப்படவுள்ளனர். அவர்களுள் பாதுகாப்பு உயரதிகாரிகளும் அடங்குவதாகச் சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்புவதாகக் கூறி மக்களை ஏமாற்றினார் என்று சொல்லப்படும் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சுற்றுலா சபையில் முறைகேட்டில் ஈடுபட்ட பல அதிகாரிகள் ஆகியோரும் கைது செய்யப்படவுள்ளனர்.

அதேபோன்று, நாட்டின் தேசிய வளங்களைக் கொள்ளையடித்த பத்துக்கும் மேற்பட்ட முக்கியமான நபர்களுக்கு எதிராகவும் போர் விமான பரிவர்த்தனை முறைகேடுகள் தொடர்பான பிரதிவாதிகள் உட்பட பிணைமுறி பரிவர்த்தனையில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு குழு மீதும் சி.ஐ.டியும் இலஞ்ச ஊழல் விசாரணை



ஆணைக்குழுவும் உடனடியாக வழக்குப் பதிவுசெய்யுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்படவுள்ள பிரபல அரசியல்வாதியின் பாரியார் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கத்தின்போது பல்வேறு விசாரணைகள் நடத்தப்பட்ட போதிலும் இந்த விசாரணைகள் முறையாக நடத்தப்படாததால் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்த விசாரணைகள் அனைத்தும் முறையாக நடத்தப்பட்ட பின்னர் அனைத்து சந்தேக நபர்களுக்கு எதிராகவும் சட்டமானது உடனடியாகவும் முறையாகவும் அமுல்படுத்தப்படுமென அரசாங்கத்தின் மூத்த அதிகாரியொருவர் 'தமிழன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரை அது இப்போது மக்களின் விமர்சனங்களுக்கு ஆளாக ஆரம்பித்துள்ளது. அரிசி உட்பட்ட அத்தியாவசியப் பொருட்கள் மீதான விலை அதிகரிப்பு, எரிபொருட்களின் விலை குறைக்கப்படாமை உட்பட்ட காரணங்களால் அரசாங்கத்தின் மீது மக்களின் விமர்சனம் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. கடந்தவாரம் கூட வனவிலங்கு பிரச்சினை முறையாக கையாளப்படவில்லை என்று சாடி அரசியல்வாதியொருவரின் அலுவலகம் மக்களால் முற்றுகையிடப் பட்டது.

வனவிலங்குகளின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கத் தவறியதாக சாடி, அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பாக்ய ஸ்ரீ ஹேரத்தின் அலுவலகத்தை கிராம மக்கள் முற்றுகையிட்டனர். பொலிஸாரின் தலையீட்டால் பதற்ற நிலைமை அங்கு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

காட்டு யானைகளின் தொல்லையால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் அதற்காக நட்டஈடு கோரியும் யானைகளிடமிருந்து பாதுகாப்புக் கோரியும் நீண்ட காலம் வலியுறுத்தல்களை விடுத்தபோதும் அவை கணக்கிற் கொள்ளப்படவில்லையெனக் சாட்டுகின்றனர்.

திரப்பனே பிரதேச செயலாளர் அலுவலகம் முன்பாகவும் ஊர்மக்கள் முன்னதாக ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனையடுத்து மேற்படி எம்.பியின் அலுவலகம் முற்றுகையிடப்பட்டது. எவ்வாறாயினும், இந்தப் போராட்ட இடத்துக்கு விரைந்த பொலிஸார், அறுவர் மட்டும் எம்.பியுடன் பேசுவதற்கு அனுமதி வழங்கினர்.

எவ்வாறாயினும், இது தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ள ஊர்மக்கள், தொடர் போராட்டங்களை நடத்தப் போவதாக எச்சரித்துள்ளனர்.

அதேபோல் தனியார் கம்பனிக்குள் புகுந்த ஆளுங்கட்சி எம்.பியின் செயற்பட்டால் பிங்கிரியவில் பதற்றம் ஏற்பட்டது.

குருநாகல், பிங்கிரியவில் அமைந்துள்ள பென்ஜி ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களுக்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு சந்தர்ப்பம் கோரி, ஆளுங்கட்சியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சென்றதால் அங்கு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

தேசிய மக்கள் சக்தி கட்சியின் எம்.பி. உள்ளிட்ட குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று தொழிற்சாலை ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதியை மாற்றுமாறு நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுத்ததாக அந்த நிறுவனத்தில் போக்குவரத்து வசதிகளை இப்போது மேற்கொண்டுவரும் குழு சுட்டிக்காட்டுவதுடன், மேற்படி எம்.பி. தலைமையிலான குழு தொழிற்சாலை நிர்வாகத்தினரை மிரட்டி பணம் வசூலிக்க வந்ததாகவும் சாடுகிறது.

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்)






தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, ஜனவரி 05, 2025

# ஜனாதிபதியின் சீன விஜயம்!

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய மற்றும் சீன பயணங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் கேள்விக்கணைகளைத் தொடுப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வருகின்றதென அறியமுடிகின்றது.

ஜனாதிபதியின் இந்திய பயணத்தின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடக சந்திப்பை நடத்தி வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெளிவுபடுத்தியிருந்தார்.

இலங்கை அரசாங்க ஊழியர்களுக்கு இந்தியாவில் பயிற்சி உட்பட இரு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மட்டுமே இவ்விஜயத்தின்போது கைச்சாத்திடப்பட்டன என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேபோல எட்கா ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுகளை முன்னெடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டதெனவும் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும், எட்காவுக்கு எதிராக முன்னர் போர்க்கொடி தூக்கியிருந்த ஜே.வி.பியினர் அதனை ஏற்க தயாராகி வருகின்றதென எதிரணிகள் குற்றஞ்சாட்டியுள்ளன. எட்காவை மறைமுகமாக ஏற்கும் வகையிலேயே இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மறுசீரமைப்பதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே எட்கா ஒப்பந்தம் இலங்கை - இந்திய இணைப்புத் திட்டம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கத்திடம் பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பவுள்ளார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டத்தின் 27/2இன்கீழ் அவர் இதுபற்றி கேள்வி எழுப்பக்கூடும். அவ்வாறில்லாவிட்டால் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை முன்வைக்கப்படக்கூடும். பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் இதுபற்றி இறுதி முடிவெடுக்கப்படும்.

இம்மாதம் 12ஆம் திகதியளவில் ஜனாதிபதி சீனாவுக்கு செல்கின்றார். அவ்விஜயம் சம்பந்தமாகவும் கேள்விகள் எழுப்பப்படவுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன. சீனாவுக்கான பயணத்தின்போது முக்கிய பல ஒப்பந்தங்களை ஜனாதிபதி செய்யவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. குறிப்பாக, பாதுகாப்பு ஒத்துழைப்பு, மருத்துவக் கல்வித் துறைகளில் ஒப்பந்தங்கள் செய்யப்படவுள்ளதாக அறியமுடிகின்றது.

சீனாவுடனான பாதுகாப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இலங்கை செய்யுமானால் சீனாவின் ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்புக் கப்பல்கள் இலங்கையின் எந்த துறைமுகங்களுக்கும் தங்குதடையின்றி வரலாம். தனது நடவடிக்கையை மேற்கொள்ளலாம். ஆனால், இந்த ஒப்பந்தத்தை இலங்கை செய்யுமா என்ற கேள்வி எழுகின்றது. ஜனாதிபதி அநுர, இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டபோது, இலங்கை நிலத்தை இந்தியாவுக்கு எதிராக செயற்பட அனுமதிக்கப்போவதில்லையென்று பகிரங்கமாகவே அறிவித்திருந்தார். உண்மையில், நாட்டின் தலைவரொருவர் அப்படியான கருத்தைப் பகிரங்கமாகச் சொல்லவேண்டிய அவசியமில்லை. எந்தவொரு இறையாண்மையுள்ள நாடும் அவசர போர்க்காலத்தைத் தவிர, வேறெந்த காலத்திலும் தனது நாட்டை இன்னொரு நாட்டுக்கு எதிராக பயன்படுத்த அனுமதிக்காது.

ஆனால், இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரிப்பு குறித்தான இந்தியாவின் கரிசனைகளைக் கவனத்திற்கொண்டு நாட்டின் தலைவர் ஒருவருக்குரிய இராஜதந்திர வார்த்தைகளை மீறி அரசியல் கூட்டத்தில் பேசுவதுபோல ஜனாதிபதி டெல்லியில் ஆற்றிய உரையானது, இலங்கையில் சீனா இந்தியாவுக்கு எதிராகச் செயற்பட முனைவதை தானே அறிந்துவைத்திருப்பதை மறைமுகமாக ஒப்புக்கொள்வது போலல்லவா இருக்கிறது. ஜனாதிபதியின் அந்தச் சூட்சும பேச்சின் உள்ளர்த்தத்தை அறியாமலா இருக்கும் புதுடில்லி?

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் சீன விஜயம் புதுடில்லியால் உற்றுநோக்கப்படுவதை மட்டும் தெளிவாக அவதானிக்க முடிகிறது. சிலசமயம் புதுடில்லியில் ஜனாதிபதி வழங்கிய உத்தரவாதம் மீறப்படும் வகையில் சீனாவுடனான உறவு வலுப்படுமாயின், அது பல எதிர்வினைகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடும். கடந்தகால ஆட்சியாளர்கள் பலர் சீனாவையும் இந்தியாவையும் முறையாக கையாளத் தவறியதால் பிற்காலத்தில் பல இன்னல்களை எதிர்கொண்டதைக் காண முடிந்தது. சீனாவுடன் ஒட்டி உறவாடிய கோட்டாபய ராஜபக்ஷ, இறுதிநாளில் ஹெலிகொப்டரில் நாட்டிலிருந்து வெளியேறியபோது அவரின் ஹெலி தரையிறங்குவதற்குக்கூட இந்தியா அனுமதிக்கவில்லை. இந்தியாவுக்கு எதிராக யாரும் இலங்கையில் செயற்பட முடியாது என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு சீனாவை நடுவீட்டுக்குள் வர அனுமதித்தவர் என்பதால் அவருக்கே அந்த நிலை ஏற்பட்டது.

கடந்த ஆண்டு செப்டெம்பரில் சர்வதேச பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான புவியியல் அரசியலில் சிக்கிக்கொள்ள விரும்பவில்லை. இந்தியாவும் சீனாவும் இலங்கையின் நல்ல நண்பர்கள். இரு நாடுகளும் எதிர்காலத்தில் கூட்டுச் சேர்ந்தால் நன்றாக இருக்குமென நம்புகிறேன். மேலும், ஐரோப்பிய ஒன்றியம், ஆபிரிக்க நாடுகளுடனும் நான் நல்லுறவைப் பேண விரும்புகிறேன்" எனத் தெரிவித்திருந்தார் ஜனாதிபதி அநுரகுமார.

நீண்டகாலம் அரசியலிலிருக்கும் பிராந்திய அரசியலை அறிந்து வைத்திருக்கக்கூடிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அந்தளவு தேவையற்ற வகையிலான முடிவுகளை எடுக்க மாட்டார் என்று நம்புவோமாக.

# 2025: பழையன புகுதலும் புதியன கழிதலும்



மீநிலங்கோ தெய்வேந்திரன்

"இலங்கை இவ்வாண்டாவது வழமைக்குத் திரும்புமா?" என்ற வினாவோடே புதிய ஆண்டு பிறந்துள்ளது. ஒருபுறம் பொருளாதார ரீதியில் இலங்கை நெருக்கடியிலிருந்து மீண்டுவிடுமா என்ற தொனியை இக்கேள்வி தருகிறது. மறுபுறம் இலங்கை நன்கறிந்த - பழக்கப்பட்ட வழமையான அரசியலுக்கு இவ்வாண்டு திரும்பிவிடுமா அல்லது மாற்றம் இவ்வாண்டும் தொடருமா என்ற வகையிலும் இக்கேள்வி விளங்கப்படலாம்.

இவ்வாண்டு அரசாங்கம் முன்மொழியவுள்ள வரவு-செலவுத் திட்டம் பல விடயங்களுக்குப் பதிலளிக்கும். சர்வதேச நாணய நிதியத்துடனான இவ்வரசாங்கத்தின் உறவு இலங்கையின் பொருளாதாரத்தை எந்நிலையில் கொண்டு சேர்த்துள்ளது என்பதை மிகத் தெளிவாக விளக்கக்கூடியதாக மார்ச் மாதம் வரவுள்ள வரவு-செலவுத் திட்டம் அமையும். அதேவேளை, இன்னமும் மக்கள் செல்வாக்கு தேசிய மக்கள் சக்திக்கு இருக்கின்றதா, எதிர்க்கட்சிகள் தங்களை மீளமைத்துக் கொண்டுள்ளனவா போன்ற வினாக்களுக்கான பதிலை இவ்வாண்டு நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்ற மகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும்.

முதலாளித்துவ சந்தைப் பொருளாதார ஏற்றுமதி மாதிரியை இலங்கை சவாலுக்குட்படுத்த வேண்டும். ஏனெனில், அதுவே இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படைக் காரணமாகும். சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவுடன், தேசிய மற்றும் சர்வதேச பெருவணிகத்துடன் தொடர்புள்ள மேலாதிக்க அரசியல் உயரடுக்குகள் கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளில் சமூகநல அரசு மாதிரியையும் பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்துவதற்கான முயற்சிகளையும் கைவிட்டன. கடந்தகால சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்கள், மக்களுக்கு உணவளிக்க அரிசி உற்பத்திசெய்யும் விவசாயிகளுக்கான ஆதரவை கைவிடுவதற்கான நிலைமைகளை உருவாக்கியது. இது வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதிக்கு ஆதரவான கொள்கைகளை முன்னிறுத்தியது. மேலும், தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் இன்னும் அதிக கவனம் செலுத்தியதேயொழிய மக்கள் நலன்களில் அல்ல. ஏற்றுமதிகளின் பலன்களை அரசை விடப் பெருமுதலாளிகளே அனுபவிக்கிறார்கள். குறைந்த கூலிக்கு உழைப்புச் சுரண்டப்படுவதை 'ஏற்றுமதியின் பெயரால்' அரசாங்கங்கள் அனுமதித்தன.

அதேபோல அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ள வளைகுடா நாடுகளுக்குத் தொழிலாளர்களை ஏற்றுமதி செய்வதை நாடு நம்பியுள்ளது. டொலர்களைத் திரட்ட, சுற்றுலாத் துறையில் முதலீடுகளுக்கு நிதியளிப்பதன் மூலம் நாடு மேலும் கடன்பட்டது. சுற்றுலா வளர்ச்சியடைந்தது, வளைகுடா மற்றும் பிற நாடுகளுக்குச் சென்ற இலங்கைத் தொழிலாளர்கள் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்தனர். மேற்குலக நாடுகளிலுள்ள பிரதான மத்திய வங்கிகள் முதலீட்டு நிதிகள் மற்றும் வங்கிகளின் நலனுக்காக நிதிச் சந்தைகளுக்குப் பெருமளவிலான பணத்தை உட்செலுத்தியது. பிந்தையது, இலங்கையின் கடன் பத்திரங்களை வாங்கியது. அதேநேரத்தில், ஊழல் அதிகரித்தது, முதலாளித்துவ உயரடுக்குகள் நாட்டின் பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்தாமல் அல்லது தொழில்மயமாக்கப்படாமல் பணக்காரர்களாக வளர்ந்தன.

பின்னர் வெளிப்புற அதிர்ச்சிகள் வந்தன. இது இலங்கையை நொறுக்கியது. 2020-2021இல் கொரோனா பெருந்தொற்று சுற்றுலாவை நிறுத்தியது. உக்ரைனில் ரஷ்யப் படையெடுப்பால் தூண்டப்பட்ட போர் இலங்கையின் எரிபொருள் மற்றும் உணவு இறக்குமதி செலவுகளைக் கணிசமாக அதிகரித்தது. இந்தத் தொடர் நிகழ்வுகள் இலங்கையின் நெருக்கடியை துரிதப்படுத்தின. இது சர்வதேச நாணய நிதியம் மற்றும் பெரு வணிகத்தால் ஊக்குவிக்கப்பட்ட நவ-தாராளவாத முதலாளித்துவத்தின் வெற்றிக் கதைகளாகக் கருதப்படும் நாடுகளில் ஒன்றான இலங்கையை நேரடியாகப் பாதித்தது. இலங்கை அரசாங்கங்கள் மக்களுக்கு சேவை செய்யும் அரசாங்கமாக இருந்திருந்தால், பின்வரும் நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும்.

2020இல் அரசாங்கம் கடன் செலுத்துவதை நிறுத்தியிருக்க வேண்டும். கடனின் நியாயமான அல்லது மோசமான பகுதியைக் கண்டறிந்து அதை நிராகரிக்க மக்கள் பங்களிப்புடன் கடன் தணிக்கையை அரசாங்கம் தொடங்கியிருக்க வேண்டும். ஆட்சியிலிருந்த அரசாங்கம் கடனைத் தொடர்ந்து செலுத்த முயற்சித்தது. ஆனால், இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெய் மற்றும் உணவுப் பொருட்களின் விலை வெடித்தபோது, பணம் செலுத்துவதைத் தொடர முடியாது நாடு வங்குரோத்தானது.

இப்போது சர்வதேச நாணய நிதியத்துடன் மிகக் கடுமையான மக்கள் விரோத நிபந்தனைகளுடன் ஒரு புதிய ஒப்பந்தம் உள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தான் வெற்றிபெற்றால் சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படுமென்று தனது தேர்தல் பிரசாரத்தில் கூறினார். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. அதே மக்கள் விரோத நிபந்தனைகளுடன் அவர் அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ளார். பொருளாதார ரீதியாக எந்தவொரு முற்போக்குத் திட்டங்களையும் அவரால் முன்னெடுக்க முடியவில்லை.

**சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலில் செயற்படுவதென்பது வடக்கே போகும் படகாகின், வாழ்க்கைச் செலவைக் குறைப்பதும் சமூகநலத் திட்டங்களை உறுதிசெய்வதும் தெற்கே போகும் படகாகும். இரண்டு தோணியில் கால்வைப்பதன் ஆபத்துகளை அரசாங்கம் உணரத் தொடங்கியுள்ளது. புதியன நிலைக்குமா, பழையன கழியுமா என்பதை இவ்வாண்டு இலங்கையருக்கு நிச்சயம் உணர்த்தும்.**

இலங்கையை சீரழித்த அதே நவதாராண்மைவாத பொருளாதார மாதிரியையே அவர் முன்னெடுக்கிறார். அவ்வகையில் இந்த அரசாங்கத்திலும் பழையன புகுந்துள்ளன. புதியன கழிந்துள்ளன.

அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவானவுடன் இதே பக்கத்தில் நேபாள உதாரணத்தைச் சுட்டிக்காட்டி ஒரு விடயத்தை எழுதியிருந்தேன். நேபாளத்தில் 2008இல் மாவோவாதிகள் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்தபோதும் அவர்களால் அவர்கள் விரும்பியபடி ஆட்சிசெய்ய இயலவில்லை. நாட்டின் நிர்வாக இயந்திரம் அதற்குத் தடையாக இருந்தது. இதனால் சில ஆண்டுகளிலேயே மக்களின் செல்வாக்கை இழந்து ஆட்சியை மாவோவாதிகள் பறிகொடுத்தார்கள். அதே நிலைமை ஜனாதிபதிக்கும் நிகழலாம் என்பதே அந்த எச்சரிக்கை.

தற்போது, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் புதிய அரசாங்கம், நாட்டை தனது பாணியில் முன்னோக்கிக் கொண்டுசெல்லும் நடவடிக்கையில் அதிகாரவர்க்கத்தின் சோம்பல் மற்றும் அலட்சியத்தின் தன்மையை உணர்கிறது. நிர்வாகத்துறை அதிகாரிகளின் ஒத்துழைப்பின்மை குறித்து ஜனாதிபதி மற்றும் பல அமைச்சர்களின் சமீபத்திய அறிக்கைகள் இந்தப் பிரச்சினையில் அரசாங்கத்தின் விரக்தியை தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன.

விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்த, நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கு அரச நிர்வாகத்துறை பெருந்தடையாக இருப்பதாகவும் குற்றஞ்சாட்டியிருந்தார். கடந்த அரசாங்கத்தின் உயர்மட்ட அரசியல் பிரதிநிதிகளின் ஊழல் நடவடிக்கைகள் மற்றும் குற்றச்செயல்களுக்கு கணிசமான எண்ணிக்கையிலான சிரேஷ்ட அரச அதிகாரிகளும் உடந்தையாக இருந்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார். எவ்வாறாயினும், அந்த அதிகாரிகள் இன்னும் பணியிலும் உயர் பதவிகளிலும் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதேபோன்ற உணர்வுகளை கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி வெளிப்படுத்தினார். தேசிய மக்கள் சக்தியின் கொள்கைகளைப் பாதுகாப்பதற்காக அரச அதிகாரிகளுக்கு எதிராக அரசாங்கம் தற்போது போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

முன்னாள் அரசாங்கங்களின் ஊழல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கேற்ப பணியாற்றப் பழகிவிட்ட அரச அதிகாரிகள், அந்தப் பழைய நடைமுறைகளை அகற்ற இன்னும் தயாராகவில்லை என்று அவர் கூறினார். புதிய அரசாங்கத்தின் ஆணையின் அளவு மற்றும் தன்மையை அவர்கள் உணரவில்லை என்றார்.

இந்தப் பின்புலத்தில் இன்று அரசு எதிர்நோக்கும் பிரதான சவாலையும் நோக்கவேண்டியுள்ளது. அனைத்து உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களும் நாட்டில் போதுமான அரிசி கையிருப்பு இருப்பதாக சுட்டிக்காட்டுகின்றன. ஆனால், சந்தையில் பற்றாக்குறை உள்ளது. பதுக்கலைத் தடுக்க போதுமான சட்டங்கள் உள்ளன. பல தசாப்தங்களாக பிரச்சினையை நன்கு அறிந்த அதிகாரிகளுக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண இயலவில்லை.

மின்சாரம் மற்றும் எரிபொருளின் விலை உயர்வுக்கு பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். வருமான வரி உயர்வைக் கண்டித்து தொழில் வல்லுநர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இருப்பினும், இந்த விலைகள் மற்றும் வரிகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. எனவே, இவ்விடயங்களில் திருத்தங்களைச் செய்வதற்கு அனுமதி இல்லை. வரி ஏய்ப்பு என்பது இலங்கையில் ஒரு பாரிய பிரச்சினையாகும். இது வருமான இலக்குகளைக் கடுமையாகப் பாதிக்கிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை. இந்தச் சிக்கலை தீர்க்க அணுகுமுறை மற்றும் நடைமுறை அணுகுமுறைகள் இரண்டும் தேவை. ஆனால், அதைச் செய்யவியலாமல் அரசாங்கம் தடுமாறுகிறது.

அதிகாரிகள் இயற்கையாகவே நடைமுறையிலுள்ள அமைப்புகளுக்குப் பழகிவிடுகிறார்கள். தற்போதைய அமைப்பு பழைய அமைப்பின் உருவாக்கமாகும். இது மையத்தில் ஊழல் நிறைந்தது. மேலும், காலப்போக்கில், சில அதிகாரிகள் அரசியல்வாதிகளுடனும் தங்களுக்குள்ளும் நெருக்கமாகப் பிணைந்து, மோசடி முறையைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இந்நிலை இந்த அரசாங்கத்திலும் தொடருமாயின் "இலங்கை வழமைக்கும் திரும்பிவிட்டது" என்று கொள்ளலாமா?

கடந்த காலத்தின் எந்த அரசாங்கத்தையும் விட, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் கடந்த ஆண்டு தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதியளித்ததை நிறைவேற்றுகின்றதா என்பதை மக்கள் அவதானிக்கிறார்கள். அது சொன்னதற்கும் உண்மையில் என்ன செய்கிறது என்பதற்கும் இடையில் எந்த உறவும் இல்லையென்றால் அது ஜே.வி.பியின் அரசியலில் பெரும் அழிவை ஏற்படுத்தும். இப்போது, அரசாங்கம் சொன்னதைச் செய்யவேண்டும் என்பதைத் தவிர, வேறு எதையும் மக்கள் எதிர்பார்க்கவில்லை. இது அரசாங்கத்தின் மிகப்பாரிய சவாலாகும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது மக்கள் அதிக எதிர்பார்ப்புகளை வைத்துள்ளனர். மக்கள் புதிய எதிர்பார்ப்புகளை எழுப்பியுள்ளனர். மேலும், புதிய அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி நிறைவேற்றும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். வரலாற்றில் முன்னெப்போதையும் விட, புதிய அரசாங்கத்தின் செயற்பாட்டின் மீது மக்களின் கண்காணிப்புள்ளது. இது நல்லது, மக்களின் தொடர்ச்சியான அரசியல் பங்களிப்பும் கேள்வி கேட்டலும் முக்கியமானது.


அரிசி நெருக்கடி இன்று ஜனாதிபதியின் ஆளும் திறனைக் கேள்விக்குட்படுத்தியுள்ளது. அரிசித் தட்டுப்பாட்டைத் தடுக்க ஜனாதிபதி இரண்டு தடவைகள் விலை உச்சவரம்புகளை விதித்து தனியார் துறைக்கு இறக்குமதி செய்ய அனுமதித்தார். வெளிப்படையாக, இது சந்தை கையாளுதலைக் கட்டுப்படுத்தும் முயற்சியாகும். சந்தைப் பொருளாதாரத்தில் விலைக் கட்டுப்பாடுகள் வேலை செய்யாது. முந்தைய விலைக் கட்டுப்பாட்டு முயற்சிகள் தோல்வியடைந்தன. இன்று அரிசி கிடைக்கிறது. ஆனால், அரசு நிர்ணயித்த விலையில் இல்லை. இது இலங்கையின் பொருளாதாரக் கொள்கையானது மாற்றமடையாது எதுவும் சாத்தியமில்லை என்பதை இன்னொரு தடவை அரசாங்கத்துக்கு உணர்த்தியுள்ளது.

அரிசி நெருக்கடியானது தற்போது அரசாங்கம் எதிர்கொள்ளும் பரந்த நிர்வாக சவால்களைக் கொண்டுள்ளது. பொருளாதார மேலாண்மை, குறிப்பாக, உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்கள், எந்த அரசாங்கத்துக்கும் ஒரு பெரும் சோதனை. பொருளாதார நீதி மற்றும் வெளிப்படைத்தன்மையின் தளத்தில் பிரசாரம் செய்த தேசிய மக்கள் சக்திக்கு இது நெருக்கடியானது. ஏனெனில், வரலாற்று ரீதியாக, இலங்கையில் அரசாங்கங்கள், அரச நிறுவனங்கள் திறமையின்மை மற்றும் தவறான நிர்வாகத்துடன் போராடியுள்ளன. அவ்வகையில் கடந்த கால தவறுகளை மீண்டும் செய்வதைத் தவிர்ப்பது முக்கியமானது. அதனடிப்படை பொருளாதாரக் கொள்கை வகுப்பிலேயே தங்கியுள்ளது. ஏனெனில், திறந்த சந்தைப் பொருளாதாரத்தில் விலை உச்சவரம்புகள் விரும்பிய பலனைத் தராது என்ற பாடத்தை அரசாங்கம் இப்போது கற்றுக்கொண்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலில் செயற்படுவது என்பது வடக்கே போகும் படகாகின், வாழ்க்கைச் செலவைக் குறைப்பதும் சமூகநலத் திட்டங்களை உறுதிசெய்வதும் தெற்கே போகும் படகாகும். இரண்டு தோணியில் கால்வைப்பதன் ஆபத்துகளை அரசாங்கம் உணரத் தொடங்கியுள்ளது. புதியன நிலைக்குமா, பழையன கழியுமா என்பதை இவ்வாண்டு இலங்கையருக்கு நிச்சயம் உணர்த்தும்.

**அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாக தெரிவானவுடன் இதே பக்கத்தில் நேபாள உதாரணத்தைச் சுட்டிக்காட்டி ஒரு விடயத்தை எழுதியிருந்தேன். நேபாளத்தில் 2008இல் மாவோவாதிகள் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்தபோதும் அவர்களால் அவர்கள் விரும்பியபடி ஆட்சிசெய்ய இயலவில்லை. நாட்டின் நிர்வாக இயந்திரம் அதற்குத் தடையாக இருந்தது. இதனால் சில ஆண்டுகளிலேயே மக்களின் செல்வாக்கை இழந்து ஆட்சியை மாவோவாதிகள் பறிகொடுத்தார்கள். அதே நிலைமை ஜனாதிபதிக்கும் நிகழலாம் என்பதே அந்த எச்சரிக்கை.**

காட்டுயானை வளத்தைப் பாதுகாப்போம் – நீங்களும் எம்முடன் இணையுங்கள்....



# சட்டவிரோத மின் வேலிகளை தடுப்போம்

உங்களுக்கு தெரியுமா? 2024ம் ஆண்டில் இதுவரை மட்டும் 50 யானைகள் வரையில் மின்சாரத்தாக்குதலால் உயிரிழந்துள்ளன ...

எமது நாட்டின் ஜீவராசிகளின் பல்வகைத்தன்மையின் அடையாளமாகக் கருதப்படும் காட்டு யானைகளின் வளம் புராதனகாலம் தொட்டு கலாசார ஆன்மீக ரீதியில் தேசிய அடையாளமாக மிக நெருங்கிய தொடர்புடையது.

உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவருவதோடு அன்புக்கும் உள்ளாகும் யானைகள் எமது நாட்டுக்கு பொருளாதார ரீதியிலும் பெருமையான வளமாகும். அவை அழிவதை தடுப்பதற்கு நாம் கைகோர்ப்போம்.

யானைகளின் இந்த அபாயமான விதியை மாற்றுவதற்கு நீங்களும் பங்களிப்பு செய்யலாம்....

Got a Tip?

**0112 118 767**

அழைப்பின் மூலம் தெரிவியுங்கள்.

[இரகசியம் பேணப்படும்]

இமிச மின் விநியோகங்களை வேலிகள், கம்பிகள் அல்லது பொறிகளுடன் இணைப்பதைத் தவிர்க்கவும்.

SHARE

இந்த செய்தியை உங்கள் நண்பர்களுடன் பகிர்ந்து பொது மக்களுக்கு அறிவிப்பதற்கு உதவுங்கள்.

மின்சாரத்துடன் வளமான வாழ்வு...

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

# வர்த்தகர்கள் வரி செலுத்தினால் தேசிய செயற்றிட்டங்களை மேற்கொள்ளலாம்

## அசோக சபுமல் ரன்வல எம்.பி.

(ஹனபி எம்.தாஸீம்)

எமது நாட்டு வரலாற்றிலே பெரும்பாலான வர்த்தகர்கள், தொழிலதிபர்கள் ஆகக் குறைந்தது அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரியைக் கூட சரியான முறையில் செலுத்துவதில்லை. முன்னணி வர்த்தகர்கள் இவ்வாறு வரியை சரியான விதத்தில் செலுத்தினால்தான் சமூகத்துக்கு - பயனாளர்களுக்குப் பயனுள்ள நல்ல தேசிய செயற்றிட்டங்களை எம்மால் மேற்கொள்ள முடியும் - என கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அசோக சபுமல் ரன்வல தெரிவித்தார்.

தெல்கொடை நகரில் இடம்பெற்ற நாட்டின் சகல மாவட்டங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐயாயிரம் மாணவர்களுக்கு இலவச பாடசாலை உபகரணங்கள் மற்றும் பாடசாலை சீருடைத் துணிகள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தெல்கொடை 'ஜயகிரன' நிறுவனத்தின் உரிமையாளரும் பிரபல தொழிலதிபருமான சந்திரசிறி விதானகேயின் தனிப்பட்ட நிதியுதவியில் தொடர்ச்சியாக 25ஆவது வருடமாகவும் இந்த இலவச பாடசாலை உபகரணங்கள் வழங்கும் வைபவம் இடம்பெற்றது.

இன, மத பேதமின்றி சகல இனத்தவர்களுக்கும் இப்பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





இதற்கு மேலதிகமாக வசதி குறைந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்கு உணவுப் பொதிகள் நோய்வாய்ப்பட்டுள்ள முதியவர்களுக்கு பணம் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கு இன்னோரன்ன நிவாரணங்கள் என்பனவும் இதன்போது வழங்கப்பட்டன.

அவர் மேலும் கூறியதாவது;

கடந்த வருடம் (2024) பாடசாலை சீருடைத் துணிகளை வழங்குவதிலும் பாடசாலைப் புத்தகங்கள் வழங்குவதிலும் அரசாங்கத்துக்கு பலர் முட்டுக்கட்டைகளை இட்டனர். சில தீயசக்திகள் பாராளுமன்றத்தில் குழப்பம் விளைவிக்க முயன்றனர். எனினும், ஜனாதிபதியின் தீர்க்கமான முடிவினாலும் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த கொள்கையினாலும் மாணவர்களுக்கு சீருடையும் பாடசாலைப் புத்தகங்களும் வழங்கப்பட்டன. இன்றைய காலகட்டத்தில் பல வர்த்தகர்கள் அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய வரியை செலுத்தாமை பெரிதும் கவலைக்குரிய விடயமாகும்.



கடந்த அரசாங்கம் தமது கட்சி ஆதரவாளர்கள் பலருக்கு வரிச் சலுகைகளை அளித்திருந்தது. இவை தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளன. இது தொடர்பாக இந்த அரசாங்கம் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்துள்ளது. சமூக சேவையாளர் சந்திரசிறி விதானகே போன்ற நேர்மையான வர்த்தகர்கள் அரசாங்கத்துக்கு செலுத்த வேண்டிய வரியை முறையாக செலுத்தி தமது இலாபத்தில் ஒரு பங்கை கடந்த இருபத்தைந்து வருட காலமாக வறிய குடும்பங்களின் நலனுக்காக வாரி வழங்குவது மெச்சத்தக்கதாகும்.



ஜனாதிபதி அநுரகுமாரவின் தலைமையிலான அரசாங்கத்துக்குத் தெளிவான கல்விக் கொள்கை உள்ளது.

எமது அரசாங்கம் கல்வியில் ஊழல் ஊடுருவ ஒருபோதும் இடமளிக்காது.

தகுதியானவர்களுக்கு பொருத்தமான அந்தஸ்தை வழங்கும்.

குற்றவாளிகள் பாரபட்சமின்றி சட்டத்துக்கு முன் நிறுத்தப்படுவார்கள்.

சட்டத்துக்கமைவாக செயற்படுபவர்கள் ஒருபோதும் அஞ்சத்தேவையில்லை - என்றார்.

---

## (03 ஆம் பக்க சாம்பார் தொடர்ச்சி....)

பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் அரச நிறுவனங்களின் பிரச்சினை யென்றால் தலையிடுவது பிரச்சினையல்ல. என்றாலும் தனியார் நிறுவனப் போக்கு வரத்து வசதி விவகாரத்தில் தலையிடுவது ஏற்றுக்கொள்ள முடியாததென மேலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

தொழிற்சாலை ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதிகளை வழங்கும் தரப்பினர் அங்கு வந்து எம்.பி. உள்ளிட்டோரை தடுத்து நிறுத்தி கேள்வி யெழுப்பியதால் பதற்ற நிலைமை ஏற்பட்டது. தொழிற்சாலையில் போக்குவரத்து வசதிகள் செய்து தருவதில் தாமதம் ஏற்படுவதாகக் கிடைத்த முறைப்பாட்டின்பேரில் ஆலோசிக்கச் சென்றதாக எம்.பி. தலைமையிலான குழுவினர் இதன்போது தெரிவித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் பிங்கிரிய தொகுதியின் அமைப்பாளர் விஜேசிறி பஸ்நாயக்க எம்.பி. இவ்வாறு நடந்துகொண்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவு செய்திருந்தார். எவ்வாறாயினும், இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இப்படியான சம்பவங்களால் ஆட்சி மீதான மக்களின் வெறுப்பு அதிகரித்து வருவதை உணர்ந்த ஆளுங்கட்சியின் உயர்மட்ட அரசியல்வாதிகள் இந்த விடயங்களால் மக்கள் மேலும் விசனப்பட்டுவிடக் கூடாதென்பதால் மக்களின் கவனத்தை திசைதிருப்ப நடவடிக்கை எடுக்க முயல்கின்றனர். அதன் வெளிப்பாடே மேற்படி கைதுகள் இடம்பெறுவதற்கான முயற்சி என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை அதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஒரு சவால் அல்ல. சஜித் ஒரு பலவீனமான தலைவர் என்ற வகையில்தான் அவர்கள் கருதுகின்றனர். இப்போது கூட பொருட் களுக்குத் தட்டுப்பாடு, வனவிலங்கு பிரச்சினை, விவசாயிகள் பாதிப்பு என்ற விடயங்களில் மக்கள் சார்பில் எதிர்க்கட்சி வீதிக்கு இறங்கவில்லை. அரசாங்கத்துக்கு எதிராக வெறும் வாய் வார்த்தைகளை சஜித் வீசுகிறாரொழிய நடவடிக்கையில் ஒன்றுமில்லை. அதனால் இந்த நிலைமை மேலும் தீவிரமாகினால் ராஜபக்ஷக்கள் மீண்டும் தலைதூக்கிவிடுவார்கள் என்று ஆளுங்கட்சியின் மேலிடம் கருதுகிறது. அதனால்தான் அரசியலைப்பற்றியே சிந்திக்காமல் ராஜபக்ஷக்களை வழக்கு, நீதிமன்றம் என்று அலையவிடுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

உடல்நிலை தளர்ந்தாலும் மஹிந்த ராஜபக்ஷ இன்னமும் தனது அரசியல் ஆலோசனைகளை கட்சிக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார். எனவே, அவருக்கு நெருக்கமானவர்களை உள்ளே தள்ளினால் உடல், மனதளவில் அவர் சரிந்துவிடுவார் என்று கணக்குப் போடுகிறது ஆளுங்கட்சி. இந்தச் சர்ச்சையில் சிக்கினால் நாமல் ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலமும் வீழ்ச்சியை நோக்கிச் சென்றுவிடும் என்பதால் ஒரே கல்லில் பல மாங்காய்களை வீழ்த்துவது ஆட்சியாளர்களின் திட்டமாக இருக்கிறது. தாஜுதீனின் கொலை வழக்கு விடயத்தில் காவல் துறையின் மூத்த அதிகாரி ஷானி அபேசேகர அனைத்து விடயங்களையும் அறிந்து வைத்திருக்கிறார் என்பதால் அதிரடி கைதுகள் தொடரும் நிலைமை இருக்கிறது.

நிதி துஷ்பிரயோகம் செய்த விவகாரங்கள் சம்பந்தமாகவே ஷிரந்தி ராஜபக்ஷவிடம் விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக உள்ளகத் தகவல்கள் சொல்கின்றன.

### வெளியாகி வரும் பரபரப்புத் தகவல்கள்

பிரபல சிங்கள ஊடகவியலாளரான பிரகீத் எக்னெலிகொட (Prageeth Ekneligoda) இராணுவத்தினரால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் கண்கண்ட சாட்சியொருவர் பரபரப்புத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

சிங்கள மொழி யூடியூப் ஊடகவியலாளரான சுதந்த திலகசிறியின் சுதா கிரியேசன்ஸ் (SUDA CREATION) சேனலில் கடந்த ஞாயிறு (29) மாலை நடைபெற்ற கலந்துரையாடலொன்றின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த நிகழ்ச்சியில் தற்போதைக்கு வெளிநாட்டில் வதியும் இலங்கைக் கடற்படையின் முன்னாள் சிப்பாய் என்று தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் ஒருவர் கலந்துகொண்டிருந்தார். இவர் முன்னர் கடற்படையின் மெக்கானிக்கல் பிரிவில் சிப்பாயாக கடமையாற்றிய பிரியசாந்த என்று அடையாளப்படுத்தப்படுகின்றது.

கடற்படைச் சிப்பாய் பிரியசாந்தவின் தகவல்களின் பிரகாரம் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு, மட்டக்களப்பின் எருமைத் தீவில் படுகொலைசெய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார்.

பிரகீத் எக்னெலிகொடவைக் கடத்திச் சென்ற குழுவில் எதிர்பாராதவிதமாக தானும் இணைக்கப்பட்டிருந்ததாகவும் அவரைக் கடத்திச் சென்றபோது அவர் ஊடகவியலாளர் என்பதோ பிரகீத் எக்னெலிகொட என்பதோ தனக்குத் தெரிந்திருக்கவில்லை என்றும் குறித்த சிப்பாய் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பின் எருமைத் தீவுக்கு கொண்டுசெல்லப்பட்ட பிரகீத் எக்னெலிகொடவின் தலையில் மூன்று துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டு அவர் படுகொலைசெய்யப்பட்டதாகவும் கோட்டாபய விடுத்த உத்தரவின் பேரிலேயே குறித்த படுகொலை நடத்தப்பட்டதாக அதற்குப் பொறுப்பாக இருந்த உயரதிகாரி தன்னிடம் தெரிவித்ததாகவும் கடற்படைச் சிப்பாய் பிரியசாந்த தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

பிரகீத் எக்னெலிகொடவின் தலையில் துப்பாக்கிச்சூடு நடத்திய ரில்வான் எனப்படும் கொலையாளியும் பின்னொரு காலத்தில் மர்மமான முறையில் வாகன விபத்தொன்றில் கொல்லப்பட்டதாகவும் பிரியசாந்த தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் கடத்திச் செல்லப்பட்டு காணாமல்போகச் செய்யப்பட்டதாக நம்பப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் சம்பவத்தில், அவர் படுகொலை செய்யப்பட்டதாக நம்பகமான ஒரு தகவல் முதற்றடவையாக கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இது தொடர்பில் விசாரணைக்கு அழைக்கப்படுவாரென தெரிவிக்கப்படுகிறது.

### சி.ஐ.டியை நாடும் அரசியல்வாதிகள்

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு மாதமும் சில நாட்களுமான நிலையில், ஆளுங்கட்சியின் பல மக்கள் பிரதிநிதிகள் தங்களுக்கு நடந்ததாகக் கூறப்படும் தவறான செயல்களுக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் காவல் துறையின் உதவியை நாட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

குற்றச்செயல்கள், அநீதிகள் மற்றும் சதிகளுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்தவர்களில் நான்கு அரசாங்க அமைச்சர்கள் மற்றும் இரண்டு பெண் பாராளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவர்.

### 'கலாநிதி' பதவியை உருவாக்கியவர் யார்?

பாராளுமன்ற இணையதளத்தில் அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பெயருக்கு முன்னால் 'கலாநிதி' என்று பயன்படுத்தப்பட்டு பின்னர் அது நீக்கப்பட்டது. அந்த அறிவிப்பை வெளியிட்டது தாங்கள் செய்த தவறு என பாராளுமன்ற தகவல் தொடர்பு பிரிவு அறிவித்தது. ஆனால், அதில் திருப்தியடையாத நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, இது தொடர்பில் ஆராயுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

"என் பெயருக்கு முன்னால் நான் டாக்டர் என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதில்லை. அப்படி ஒரு விசிட்டிங் கார்ட் கூட செய்ததில்லை. நான் நிரப்பிய பயோடேட்டாவில் அதை தெளிவாகக் குறிப்பிட்டேன். அங்கும் டாக்டர் தலைப்பு இல்லை. அப்படியானால், எப்போது 'கலாநிதி' என்ற வார்த்தை எப்படி வந்தது? இந்த நேரத்தில், ஒட்டுமொத்தமாக என்னை அல்லது எனது அரசியல் பிரசாரத்தை யாரோ இழிவுபடுத்த முயற்சிக்கிறார்களா என்ற சந்தேகத்தை எந்தவொரு நியாயமான நபருக்கும் எழுப்பும். நம்பகத்தன்மையைக் குலைக்கும் வகையில் பொய்யான தரவுகள் உள்ளிடப்பட்டுள்ளதாக எவருக்கும் நியாயமான சந்தேகம் உள்ளது" என அமைச்சர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்த பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். இதன்படி, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். முன்னாள் சபாநாயகரின் கலாநிதி பட்டம் குறித்து சமூகத்தில் பேசப்பட்டு வரும் வேளையில் அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார இந்தச் சம்பவத்தை எதிர்நோக்க நேர்ந்தமை விசேட அம்சமாகும்.

### அமைச்சர் பெயரில் பண மோசடி

கைத்தொழில், தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி டிசம்பர் 24ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்தார்.

எனது நண்பரென அடையாளப்படுத்திக் கொண்ட ஒரு நபர் அல்லது சில நபர்கள் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை இலக்கு வைத்து சமூக பராமரிப்பு சேவை களுக்காக பணம் பெறுவதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. இவ்வாறான பணக்குற்றங்கள் இடம்பெறுவதாகக் கேள்விப்பட்டுள்ளோம்.

எமது பெயர் பயன்படுத்தப்படுமாயின், இது தொடர்பில் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்ததன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அமைச்சர் தெரிவித்தார். அடையாளத்தைப் பயன்படுத்தி இவ்வாறு ஏமாற்றுபவர்கள் தொடர்பில் தகவல் இருந்தால் தெரிவிக்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### அமைச்சரின் பெயரை விற்று 17 கடவுச்சீட்டுகள் தயாரிப்பு

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதியமைச்சர் சுனில் வட்டகல, தான் பதவியேற்ற நாளில் தன்னை ஏமாற்றிய நபரொருவர் தொடர்பில் பதில் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

"நான் பதவியேற்ற அன்று டை கோர்ட் அணிந்த நபர் என்னை வழிநடத்தினார். "வாருங்கள் அமைச்சரே, இங்கே பாஸ்போர்ட்களைப் பார்க்கலாம். அமைச்சர்கள் கூட இங்கு வந்ததில்லை" என்று அங்கு வந்திருந்த நபரொருவர் என்னிடம் கூறினார். அவரை அமைச்சின் அதிகாரி என்று நினைத்தேன். அவர் ஜனாதிபதி செயலகத்திலிருந்து வந்ததாக அமைச்சின் அதிகாரிகளிடம் கூறியுள்ளார். அதன்பிறகு, நான் அமைச்சுக்கு வந்த பின்பே சம்பந்தப்பட்ட நபர் 17 கடவுச்சீட்டுகளை செய்துகொண்டு தப்பிச் சென்றுள்ளமை எனக்குத் தெரியவந்தது'' - என பிரதியமைச்சர் சுனில் தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார்.

குறித்த நபரை உடனடியாக கைதுசெய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சுனில் வட்டகல பதில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவித்துள்ளார்.

### கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன எம்.பியும் சி.ஐ.டியில் முறைப்பாடு

தன்னையும் மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினரையும் உள்ளடக்கிய பொய்யான மற்றும் தீங்கிழைக்கும் பேஸ்புக் பதிவுகள் மற்றும் செய்திகளால் தம் மீதான நற்பெயருக்கும் மக்கள் நம்பிக்கைக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன தனது பேஸ்புக் கணக்கில் பதிவுசெய்துள்ளார். "அரசியலிலிருந்து பெண்களை இப்படி கீழ்த்தரமான முறைகளால் அகற்ற முற்பட்டால், நாங்கள் அவர்களுக்கு சொல்கிறோம் - இன்னும் கடினமாக முயற்சி செய்யுங்கள். கூட்டு இயக்கத்திலிருந்து உருவான அரசை இதுபோன்ற தோல்வியுற்ற தந்திரங்களால் கவிழ்க்க நினைத்தால், உங்கள் வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்யவேண்டி வரும்'' - என அந்தக் குறிப்பில் எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

தமக்கு எதிராக பொய்யான மற்றும் தீங்கிழைக்கும் பிரசாரங்களை மேற்கொள்ளும் குழுக்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை எடுக்குமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் பாராளுமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிலந்தி கொட்டாச்சி மீது சமூக ஊடகங்களில் அவதூறு பரப்பிய குற்றச்சாட்டில் மில்லேனிய பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ரவீந்திர நம்முனி கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப் பட்டார்.

### பாதுகாப்புத் துறையில் அதிரடி மாற்றங்கள்

தேசிய புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய கடந்த புதன்கிழமை (01) தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

மேஜர் ஜெனரல் ருவான் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தாவிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டதை யடுத்து, மேஜர் ஜெனரல் வணிகசூரிய ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையிலுள்ள பாதுகாப்பு அமைச்சில் அவரது அலுவலகத்தில் தனது கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றுள்ளார்.

தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவராக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் ருவான் குலதுங்க ஓய்வுபெற்றதையடுத்து, வெற்றிடமான தேசிய புலனாய்வுப் பிரிவின் பிரதானி பதவிக்கு மேஜர் ஜெனரல் ருவான் வணிகசூரிய நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோவும் புதிய கடற்படைத் தளபதியாக ரியர் அட்மிரல் காஞ்சன பானகொடவும் கடந்த வாரம் நியமிக்கப்பட்டனர். விமானப்படைக்கும் புதிய தளபதி நியமனம் பெறவுள்ளார். தேசிய புலனாய்வுத் துறைக்குப் புலனாய்வு சேவையில் அல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது குறித்து சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன.

அதேபோல் பாதுகாப்புத் துறையில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள், நியமனங்கள் தொடர்பில் அதிருப்தி வெளிவந்துகொண்டிருக்கிறது.

### ஐக்கிய மக்கள் சக்திக்குள் சர்ச்சை

ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசி சின்னத்துக்குப் பதில் மாற்றுச் சின்னமொன்றை பயன்படுத்துவது தொடர்பில் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது தொடக்கம், இதுவரை போட்டியிட்ட எந்தவொரு தேர்தலிலும் கட்சி குறிப்பிடத்தக்களவில் வாக்குகளைப் பெற்றிருக்கவில்லை.

அதற்குப் பதிலாக ஒவ்வொரு தேர்தலிலும் கட்சியின் வாக்கு எண்ணிக்கை குறைந்துகொண்டே போகின்றது. செல்வாக்கும் வீழ்ச்சியடைகின்றது என்று குறித்த முக்கியஸ்தர்கள் கட்சித் தலைமைக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடக்கம் கட்சிக்கு புதியதொரு சின்னம் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## சர்வஜன அதிகாரம்

සර්වජන බලය • SARVAJANA BALAYA

**தொழில்முனைவான அரசாங்கத்தின் ஊடாக மகிழ்ச்சிமிகு தேசத்தினை உருவாக்க விரும்பும் தேசாபிமானிகளுக்கு ஓர் அழைப்பு...**

# கிராமங்களையும் தேசத்தையும் வெல்லும் பயணத்தில் இணையுங்கள்

## மாகாணசபைத் தேர்தல் - 2025

## வேட்பாளராவதற்கு உங்களுக்கும் ஓர் வாய்ப்பு

2025 மாகாணசபைத் தேர்தலுக்கான சர்வஜன அதிகாரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், அத் தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையோரைத் தெரிவுசெய்ய, இலங்கையின் சகல மாவட்டங்களிலிருந்தும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன!

நீங்கள் ஏற்கனவே வாக்காளராக பதிவுசெய்யப்பட்டிருக்கும் பெயர்ப்பட்டியலுக்கான மாவட்டத்தின் நிரந்தரப் பதிவாளர் எனின், கீழ்காணும் தகவல்கள் உட்படும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் இவ் விண்ணப்பத்தை நிரப்பி, எமக்கு அனுப்பி வைக்கவும்.

01. முழுப்பெயர்
02. நிரந்தர முகவரி
03. பிறந்த திகதி
04. தொலைபேசி இலக்கம் (நிரந்தர/கையடக்க)
05. மாவட்டம்
06. உங்களுக்குரித்தான மாகாண சபை
07. தேர்தல் தொகுதி (ஆசனம்)
08. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்
09. அரசியல் செயற்பாடுகள் மற்றும் சமூகநல சேவைகள் பற்றிய விபரங்கள்

**மேற்கண்ட விபரங்கள் அடங்கிய உங்களது விண்ணப்பங்களை, 2025 ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்**
**+94 770 139 139** WhatsApp செய்யுங்கள். அல்லது,
**பொதுச் செயலாளர், சர்வஜன அதிகாரம், இல.11, பார்க் அவென்யூ, கொழும்பு 08**
எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது **connect@sarvajanabalaya.com**
எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

sarvajanabalaya.com

**தொழில்முனைவான அரசாங்கம் - மகிழ்ச்சிமிகுந்த தேசம்**

# முஸ்லிம் அரசியலின் நிலைமாறு காலமும் சேகு இஸ்ஸதீனும்

பாகம்: 03

கங்கத்தியப்பா

விடுதலைப் புலிகள் இரண்டாம் கட்டமாகவும் அனுப்பிவைத்த மரணதண்டனைப் பிரகடனத்தையும் கூட கையோடு வாங்கி தத்தம் பொக்கற்றுக்குள் வைத்துக்கொண்டு, கிழக்குக்கான உள்ளூராட்சிமன்றத் தேர்தலை முகங்கொள்ளும் உறுதியான தீர்மானத்தை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எடுத்தது. தலைவர் அஷ்ரப் கம்பீரமாக அந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு பக்கபலமாக இருந்தவர் சேகு இஸ்ஸதீன் அவர்களேயாவார். அவ்வாறே அந்தத் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் மாகாணம் எங்கணும் தாக்கல், செய்யப்பட்டு 'தராசு' சின்னத்தில் போட்டியிடுவதாகவும் கட்சியால் இறுதியான தீர்மானம் எடுக்கப்பட்டுவிட்டது.

எனினும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தன்னை ஓர் அரசியல் கட்சியாக பிரகடனம் செய்த கையோடு வேட்புமனு கோரப்பட்டு முடிந்திருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலானது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அரிச்சுவடி எழுதப்பட்ட காலத்திலேயே ஒத்திவைக்கப்படும் கட்டத்துக்கே வந்துசேர்ந்துவிட்டது.

நெஞ்சுக்கு நேரே மரணம் திணிக்கப்பட்டிருந்தபோதிலும்கூட மிகுந்த மனப் போராட்டத்துக்கு மத்தியிலேயே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலை எதிர்கொள்ளத் தைரியப்பட்டது. மரண அச்சுறுத்தல் விடுத்தவர்கள் வெறுமனே சாதாரணமானவர்கள் அல்லர். அவர்கள் இன்னொரு சமூகத்தின் உரிமையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினை என்பதை ஆய்ந்து ஓய்ந்து பாராமல் எழுந்தமானமாக இம்முடிவுகளை அச்சமின்றி எடுப்பவர்கள். அதன் விளைவுகளைப்பற்றி அவர்கள் கிஞ்சித்தும் கவலைப்படுவதில்லை என்பதே அவர்களின் வரலாறு.

இது இன்னொரு சமூகத்தின் இருப்போடும் சுதந்திரத்தோடும் சம்பந்தப்பட்டது என்றபோதிலும் கூட புலிகள் தாம் எடுத்த முடிவிலிருந்து எள்ளளவும் பின்வாங்கப் போவதில்லை. எனினும், இத்தேர்தல் நடைபெற்றுவிடக் கூடாது என்பதில் மக்கள் பலரும் அக்கறை கொண்டிருந்தனர் என்பதே அன்றைய நிலைவரத்தின் மறுபக்கமாகும்.

இதற்கிடையில் இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் செய்திருந்த விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஓர் அரசியல் கட்சிக்கான அங்கீகாரமும் அதற்குக் கிடைத்துவிட்டது. மேலும், கட்சிக்கென அங்கீகரிக்கப்பட்டிருந்த சின்னம் 'மரம்' ஆகும். இதனால், சாண் ஏற முழம் சறுக்கும் வளர்ச்சி நிறுத்தப்பட்டு கட்சியின் வளர்ச்சி துரிதமான ஒரு நேர் திசையில் செல்ல ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கருத்துச்சொல்ல அனுமதிக்கப்படாத ஒரு சமூகத்தின் குரல் இப்போது சர்வதேசம் எங்கும் மதிப்பார்ந்த குரலாக மாறிவிட்டது. சந்திப்பதற்கு மறுப்புத் தெரிவித்த வெளிநாடுகளின் இராஜதந்திரிகள் போட்டி போட்டுக்கொண்டு அஷ்ரப்பை சந்திக்க நேரம் ஒதுக்கித்தருமாறு வினயமாக வேண்டுகோள் விடுக்கும் அதிசயம் நிகழ்கின்றது.

இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இந்தியாவின் தலைசிறந்த இராஜதந்திரி ஜே.என்.தீக்ஷித்தின் மனமாற்றமாகும். இலங்கையின் இனப்பிரச்சினையில் இரண்டு பக்கங்களாலும் அதிகம் விமர்சிக்கப்பட்ட அவர் ஆரம்ப காலங்களில் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைப் பீடங்களை தான் ஊதித் தள்ளும் சுங்கானின் புகையின் அளவுக்கும் கூட இலங்கை முஸ்லிம்களைச் சிறிதும் கண்டுகொள்ளவில்லை. சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கவும் இல்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான கையோடுதான் மேற்படி புத்தம் புதிய சமன்பாடுகள் இனத்துவ அரசியலில் தோன்றத் தொடங்கின. தீக்ஷித்தின் இந்த நிலைமாற்றம் சடுதியான அல்லது பதற்றமான ஒரு சூழலில் ஏற்பட்டதல்ல.

இதேவேளை, அந்த ஒப்பந்தத்தை கிட்டத்தட்ட எல்லா இன மக்களும் எல்லா அரசியல் கட்சிகளும் எதிர்க்கத் தொடங்கிவிட்டனர். சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள், தமிழ் மக்களில் பெரும்பாலானோர் எனப் பல்வேறு கோணங்களிலிருந்தும் எதிர்ப்பு வலுவடைந்துவிட்டன. ஐ.தே.கவின் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்தனவையும் காமினி திசாநாயக்க போன்ற அவரின் நெஞ்சுக்கு நெருக்கமான சிலரையும் தவிர, மற்றெல்லோருமே இதனை மிக வன்மத்துடன் எதிர்த்தனர்.

குறிப்பாக, ஐ.தே.கவின் பிரதமர் ஆர்.பிரேமதாச, லலித் அத்துலத்முதலி முதலிய அனைவரும் இந்த வகையறாக்களுள் அடக்கம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முழுவதுமாக எதிர்த்தது. ஜே.வி.பியினர் இன்னொரு படி மேலேபோய் இலங்கை எங்கணும் வன்முறையைத் தூண்டிவிட்டனர். இந்த வன்முறைக்கு ஆர்.பிரேமதாசவின் அந்தரங்க ஆதரவும் இருந்ததாக ஜே.ஆருக்கு ஒரு சந்தேகமும் இருந்தது.

மேலும், ஊடகங்கள் எல்லாமே இந்த ஒப்பந்தத்தை தாறுமாறாக எதிர்த்தன. அரச ஊடகங்கள் மாத்திரம் ஏனோதானோவென அமைதி காத்தன. இடதுசாரிகளும் எதிர்த்தனர். மொத்தமாக வடக்கு, கிழக்கிலும் அதன் சூழலிலும் பயங்கர யுத்தம்; தெற்கில் பயங்கரக் கலகம். மொத்தத்தில் ஹனுமார் இட்ட தீ நாடெங்கிலும் மீண்டும் எரிந்தது.

இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும், அதில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ அவர்களின் பங்கை கொடுத்தாக வேண்டும் என்றெல்லாம் மானசீகமாக விரும்பிய Lanka Guardian மாசிகையின் ஆசிரியர் மேவின் டி. சில்வா போன்ற சில மனிதாபிமானிகள் மாத்திரமே தங்களது ஆதரவுகளை வெளிப்படையாக வழங்கினர். இவை உறுதியான ஆதரவாக இருந்திட்டபோதிலும் உதிரியான ஆதரவுதான் என்பதால் அது எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

இந்த நேரத்தில் தங்களது இராஜதந்திரம் உயிர் பிழைக்க இந்தியாவுக்கு சில உதவிக் கரங்கள் தேவைப்பட்டன. அதனால் அஷ்ரப்பை தீக்ஷித் நாடினார். அஷ்ரப்பை நேரடியாக நாடிச்செல்வதில் தீக்ஷித் தரப்பினருக்கு இரண்டு வித்தியாசமான சங்கடங்கள் காணப்பட்டன.

***முதலாவது, இந்திய - இலங்கை ஒப்பந்தம் முஸ்லிம்களுக்கான அடிமைச் சாசனமென ஏற்கனவே அஷ்ரப் தன் உறுதியான நிலைப்பாட்டை அறிக்கை செய்திருந்தார். இந்தக் காட்டமான நிலைப்பாடானது இந்தியத் தரப்பினரை பல வகைகளிலும் கிலிகொள்ளச் செய்திருந்தது.***

***இரண்டாவது, இந்த ஒப்பந்தத்துக்கு முன்னரேயே வடக்கு, கிழக்கு வாழ் முஸ்லிம் சமூகத்தின் தெட்டத்தெளிவான நிலைப்பாட்டை அஷ்ரப் மிக வெளிப்படையாகவே பிரதிபலித்திருந்தார். அதாவது, வடக்குடன் கிழக்கு இணைக்கப்படக் கூடாது என்றும் ஆனால், இணைத்துத்தான் ஆகவேண்டுமெனில், முஸ்லிம்கள் வாழும் இடங்களை ஒன்றிணைத்த முஸ்லிம் அலகு ஒன்று ஏற்படுத்தப்படல் வேண்டும் என்பதும் அவர்களின் நிலைப்பாடாகும். ஆரம்பத்தில் எம்.ஐ.எம்.முஹைதீன் இதற்கான வரைபையும் கீறியிருந்தார். ஆகவே, இது கிட்டத்தட்ட இலங்கை முஸ்லிம்கள் அனைவரினதும் நிலைப்பாடாக மாற்றம் பெற்றுவிட்டது.***


ஆனால், இந்த நிலைப்பாடானது இந்தியாவின் புவியியல் ஸ்திரப்பாட்டைத் தகர்க்கும் கண்ணிவெடி என்பது றோவின் ஸ்திரமான நிலைப்பாடாக இருந்தது.

***ஈழம் தனிநாடாகப் பிரிந்தால் தமிழகம் தனியாகப் பிரிந்து சென்று ஈழமும் தமிழகமும் இணைந்து 'அகன்ற தமிழ் ஈழம்' என்ற தனிப் பிராந்தியம் உருவாகும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஏற்கனவே சர்வதேச ஈழ அபிமானிகளினதும் செயற்பாட்டாளர்களினதும் கொள்கை வகுப்பாளர்களினதும் தூர நோக்கில் அகன்ற தமிழ் ஈழமும் உள்ளடக்கப்பட்டிருந்தமை றோவினருக்கு பால பாடமாகும். ஆகவே, தமிழ் ஈழக்கனவுக்கு இலங்கையின் பேரினவாதத்தையும் விட இந்தியாவின் ஸ்திரப்பாட்டில் குறியாயுள்ள 'றோ'வினர்தான் 'நம்பர் வண்' எதிரிகளாவர்.***


றோவின் நிலைப்பாடு இவ்வாறு தெட்டத்தெளிவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் இன்னொரு பேரிடியை 'முஸ்லிம் மாகாணம்' என்ற பெயரில் உருவாக்குதல் புண்ணில் புளி பட்ட ஒரு நடவடிக்கையேயாகும்.

***ஏற்கனவே அஷ்ரப் எனப்படும் நபரின் Bio Data றோவுக்கு அத்துப்படியாகும். அதிலும் அவர் இலங்கை இஸ்லாமியப் பயிற்சி மன்றத்தாலும் அதனூடாக இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியாலும் கருத்தியல் ரீதியான வளர்ச்சியைப் பெற்றவர் என்பதும் அல்லாமா இக்பால், செய்யித் அபுல் அஃலா மௌதூதி ஆகியோர் தம் கோட்பாடுகளில் பற்றுறுதி மிக்கவர் என்பதும் அவர்கள் சேகரித்து எடுத்த தகவலாகும். கிட்டத்தட்ட அவர் ஓர் இஸ்லாமிய தீவிரவாதத்தை முன்மொழியும் அடிப்படைவாதி என்பதே அவர்களின் மௌனமான பிரகடனமுமாக இருந்தது.***

அத்தகைய ஒருவரின் தலைமையின்கீழ் அதிகாரக் கட்டமைப்புடன் கூடிய ஒரு புவியியல் அலகை முஸ்லிம்களுக்காக உருவாக்கிக்கொடுப்பது முஸ்லிம் நாடுகளின் குவிமையமாக அப்பிராந்தியத்தை மாற்றியமைக்கும் செயற்பாடு







என்று றோ நம்புவதில் வியப்பில்லை. ஆகவே, நிபந்தனையுடன் கூடிய வடக்கு - கிழக்கு இணைப்பு எனும் கோட்பாட்டின் அரிச்சுவடியே 'மழைக்கு ஒதுங்கி பீலியின் கீழ் நிற்கும்' செயற்பாடாக மாறிவிடும் என்றே இந்திய மேலாதிக்கத்தின் றோவுக்குத் தோன்றியிருந்தது.

இந்தக் காரணங்கள்தான் தீக்ஷித் முஸ்லிம் காங்கிரஸுடன் பேசுவதைத் தள்ளிப் போட்டமை என்பது பலரும் அறிந்ததே. ஆனாலும் தற்போதைக்கு முஸ்லிம் அரசியல் செயற்பாட்டாளர்களை தங்கள் வழிக்கு இழுத்துக்கொள்வதே அவர்களுக்குள்ள மிக அவசியமானதும் மிகவும் கிட்டியதுமான படித்தரமாகும். இதனால்தான் அஷ்ரப்பை தீக்ஷித் நாட விரும்பினார்.

இதற்கு இன்னொரு சந்தர்ப்ப நிர்ப்பந்தமும் இருந்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தமானது வடக்கு, கிழக்குக்கான மகாண அரசின் இடைக்கால நிர்வாக சபையொன்றை நிறுவுவது பற்றி சிந்திக்கத் தொடங்கிற்று. இதற்கான முன்மொழிவுகளும் உறுப்பினர்களுக்கான பரிந்துரைகளும் நியமனங்களும் செய்யப்பட்டுக்கொண்டிருந்தன. முன்மொழியப்பட்ட ஏழு உறுப்பினர்களுள் முஸ்லிம் உறுப்பினராக சம்மாந்துறையைச் சேர்ந்த ஏ.எஸ்.முஹம்மட் ஹாஜியார் என்பவரையும் புலிகள் பரிந்துரைத்தனர்.

***இடையில் ஏற்பட்ட தகராறொன்றினால் தீக்ஷித்தின் காய்நகர்த்தல் ஸ்தம்பித்துப் போயிற்று. ஆக, இலங்கை - இந்திய ஒப்பந்தம் (இடைக்கால நிர்வாகம் தொடர்பில்) தன்னுடைய முதலாவது சரிவைக் காணத்தொடங்கிற்று. இதற்கான மாற்றுவழி பற்றி தீக்ஷித் சிந்திக்கத் தொடங்கினார். அதன் மாற்றுப் பாதையின் ஓர் உப வழியே முஸ்லிம்களிடம் பேசுவதாகும்.***

தீக்ஷித் சந்தித்துக்கொண்டிருந்த சங்கிலித் தொடரான தோல்விகள் பிரச்சினைகளுக்கான தீர்வைக் காண்பதற்கான வழிவகைகளை தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தது. புலமையாளர்களின் Problem Solving Methodology பின்வரும் படிமுறைகளை அதன் விஞ்ஞான ரீதியான செயற்பாடாகக் குறிப்பிடுகின்றது.

***பிரச்சினை -> அதற்கான திட்டவட்டமான தீர்வு -> தீர்வுக்கான தடைகள் -> தடைகளுக்கான விலைகள்.***

தீக்ஷித் தன் இலக்கின் முன்னாலுள்ள தடைக்கான விலையாக சேகு இஸ்ஸதீன் எனும் மந்திரக்காயைக் கண்டுபிடித்தார். அதற்காக சில 'ஹிக்மத்'களை தீக்ஷித் கையாண்டு இருக்கவும் கூடும். இஸ்ஸதீன் தொடர்புகொள்ளப்படுவதற்கான லிங்க் பற்றி யாரும் இன்றுவரை அறிந்திருக்கவில்லை. ஏனெனில், இலங்கை முஸ்லிம்களை இந்திய மேலாதிக்கத் தரப்பினர் தலிபானிய அல்லது காஷ்மீரிய நோக்கிலேயே பார்த்தனர். அதுபோல கிழக்கில் அப்போது மேலாதிக்கம் செலுத்திய TELO, EPRLF, PLOTE ஆகிய இயக்கங்களானவை முஸ்லிம்களுக்கு எதிரான முகாமில் வைத்தே கணிக்கப்பட்டிருந்தன. அவை Pro Indian இயக்கங்கள் என முத்திரை குத்தப்பட்டிருந்தமையால் முஸ்லிம்களுக்கான தனியான அரசியல் கட்சியானது தான் பிறந்த நோக்கத்தை துறந்துவிட்டு இந்திய விஸ்தரிப்புவாதத்தின் 'வழிகாட்டலை' தொடர்வது என்பது கற்பனையும் பண்ணிப் பார்க்கத்தக்கதாக இருந்திருக்கவில்லை. அதனால்தான் முஸ்லிம் வெகுசனத்தின் ஆழ்மனதில் இந்தியா தொடர்பானதும் அதன் வழி நடக்கும் இயக்கங்கள் தொடர்பானதும் எண்ணப்பாங்கில் மாற்றம் நிகழ வாய்ப்பிருக்கவில்லை.

என்றபோதிலும் கூட இதுவே வடக்கு - கிழக்கின் இணைப்பு என்ற கோட்பாட்டின் முஸ்லிம்கள் கொண்டிருந்த கருத்தியலின் போக்கில் திடீர் மாற்றமொன்று நிகழ்ந்த காலகட்டம் என்பதே யதார்த்தமாகும்.

***தீக்ஷித் விரித்த கருத்தியல் வலையால் சேகு இஸ்ஸதீன் சிந்தனையில் ஓர் மடை மாற்றம் நிகழத் தொடங்கிற்று. இந்த மடை மாற்றம் இலங்கை அரசியலின் 13ஆவது திருத்தத்தின் பின்னர் அஷ்ரப்பும் தீக்ஷித்தும் சந்திக்கவேண்டிய அவசியப்பாட்டை உருவாக்கிற்று. இது முஸ்லிம் அரசியல் கருத்தியலின் நிலைமாறு காலத்தை மற்றுமொரு படித்தரத்தை நோக்கி நகர்த்திற்று. இந்தக் கருத்தியல் மாற்றம் முஸ்லிம்கள் மத்தியில் எத்தகைய நேர் - எதிர் தாக்கத்தை ஏற்படுத்தினாலும் அந்தச் சந்தர்ப்பத்துக்கான மூளைப்பலம் சேகு இஸ்ஸதீனுக்கு உரியதே என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.***

தீக்ஷித்தைப் பொறுத்தவரையில் அஷ்ரப் குழுவினருக்கிடையிலான அவரின் சந்திப்பு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுலாக்கம் செய்வதிலுள்ள தடைகளைக் களைதல் என்பதை அடிப்படையாகக்கொண்டிருந்ததை படம் கீறி யாரும் நிரூபிக்கத் தேவையில்லை. ஆனால், அதற்குள் நிர்வாக ரீதியிலான பிரச்சினைகள் தமிழ் மக்களைப்போலவே முஸ்லிம்களுக்கும் இருக்கின்றன என்பது நிரூபிக்கப்பட்டாக வேண்டும் என்பதே அஷ்ரப்பின் நிலைப்பாடு.

அந்த எடுகோளை இந்தியா உட்பட ஏனைய தரப்புகளை (குறிப்பாக பத்மநாபாவை) ஏற்றுக்கொள்ளச் செய்வதில் ஏற்பட்ட முன்னேற்றத்தில் அஷ்ரப் அவர்களின் மதிநுட்பத்துக்கு ஒப்பாரும் மிக்காரும் இருந்திருக்கவில்லை என்பது இந்தப் பரிமாற்றங்களில் ஊடாடியவர்களுக்கு உறுதியாகத் தெரிந்தது. முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை உட்புகுத்துவதில் அஷ்ரப் தன் புலமையையும் இராஜதந்திரத்தையும் தனக்கிருந்த charisma வையும் சம்பூரணமாகப் பிரயோகித்தமைதான் அவருக்கிருந்த சமூக அக்கறையினதும் ராஜவசியத்தினதும் பிரதிபலிப்பாகும்.

எது எப்படியிருந்தாலும் தீக்ஷித்தின் அடுத்த இலக்கு இணைக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்தி முடிப்பதிலேயே குறியாக இருந்தது. இந்தக் கட்டத்தில் மீண்டும் புலிகளின் வன்முறை பயங்கரமாக முடுக்கிவிடப்பட்டிருந்தது. இத்தகைய பாதுகாப்புச் சூழலில் கூட இந்தியாவுக்கு தன்னுடைய Prestige பற்றிய கவலை மட்டுமே இருந்தது. இதற்காக எத்தனை பேரின் உயிரையாயினும் இழக்க இந்தியா பின்னிற்கவில்லை. அது இந்தியக் குடிமக்களான IPKF ஆக இருந்தாலுமே.

இந்த சரிக்குச் சரியான முரண்பாடுகள் தீயாகக் கொதித்துக்கொண்டிருந்தாலும் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடத்துவதில் இந்தியா குறியாக இருந்தது. இலங்கை மக்களின் இந்தத் தீவிரமான மனோநிலையில் ஒரு திடீர் மாற்றத்தை உருவாக்க இந்தியா, ஓர் உளவியல் பரிகாரத்தை பரீட்சார்த்தமாகச் செய்தது. அதாவது, எங்கு இனப்பிரச்சினைக்கான தீர்வாக மாகாண சபை அவசியப்பட்டதோ அங்கே அதனை நடத்தாமல் இலங்கையின் தென் பிராந்தியத்தில் அதனை நடத்துவதாக இரண்டு அரசாங்கங்களும் தீர்மானம் செய்தன.

பெரும்பான்மைச் சமூக மக்களின் மனங்களில் தேர்தல் காய்ச்சல் மூலம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கான ஒரு சாதகமான சூழலை உருவாக்க இரண்டு அரசாங்கங்களும் பாடுபட்டன. இதன் அமுலாக்கத்தின் பின்னர் வடக்கு, கிழக்கில் புலிகளின் எதிர்ப்பலைக்கு முகங்கொடுக்கும் மனோநிலை விதைக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இதற்கு எதிரான கருத்தியலே வடக்கு, கிழக்கில் மனித மனங்களில் புரையோடிக்காணப்பட்டது.

தமிழ் மக்களிடமே தேர்தலுக்கு எதிரான கருத்தியல் உரம் பெற்றிருக்கையில் முஸ்லிம் மக்களிடம் இதுபற்றி நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத நிலைமையே காணப்பட்டது. அஷ்ரப்பிடமும் இந்த நெருப்பை இலகுவில் பற்றவைக்க முடியாதென்ற உளவியல் இந்தியாவுக்குத் தெளிவாகத் தெரிந்தது. இதனால் மீண்டும் சேகு இஸ்ஸதீன் அணுகப்பட்டார்.

சேகு இஸ்ஸதீன் வித்தியாசமாகச் சிந்திப்பதில் அல்லது மாற்றி யோசிப்பதில் வல்லவர். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் இந்தியாவைப் பகைத்துக்கொள்வதன் ஆபத்து பற்றி அவர் மேலும் மேலும் சிந்தித்தார். அதிலும் தத்துவார்த்த முதிர்ச்சி பெறாத (Philosophical Immeture) ஆயுதம் தாங்கிய இயக்கங்களால் முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்படுகின்ற வகைதொகையற்ற வன்முறைகளை நிறுத்தி முஸ்லிம்களைப் பாதுகாக்கும் வரன்முறைகளை அவர் ஆராய்ந்தார்.

அப்போதைய கணிப்பின்படி IPKF வடக்கு, கிழக்கு மாகாண அரசை நிறுவி அதற்கான 'ஸ்திரமான பாதுகாப்பு ஒழுங்குகளை' உறுதிபட நிறுவியதன் பின்னரேயே வடக்கு, கிழக்கு மாநிலத்தை விட்டு வெளியேறவேண்டி ஏற்படுமென EPRLF தரப்பினரைப்போல சேகு இஸ்ஸதீனும் நம்பினார்.

(ஆனால், தெற்காசியாவின் குடலேறக் கொழுத்த இராஜதந்திரிகளின் வரைபை இராஜதந்திர புலமைத்துவ வெளிச்சமே பீச்சப்படாமல் இருந்த ஆர்.பிரேமதாச சில மாதத் துளிகளுக்குள் வெளியேற்றினார் என்பது வேறுகதை).

அதனால் வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டேயாகவேண்டும் என்ற நிலைப்பாட்டை சேகு இஸ்ஸதீன் எடுத்தார். ஆரம்பத்தில் அஷ்ரப் இதற்கு உடன்பாடு தெரிவிக்காமற்போனாலும் பின்வரும் காரணங்களால் இணக்கம் தெரிவித்தார்.

முதலாவது காரணம், EPRLF, TELO, PLOTE ஆகிய இயக்கங்களின் தத்துவார்த்த முதிர்ச்சிபெறாத (Philosophical Immeture) ஆயுதம் தாங்கிய (சாரன் அணிந்த) போராளிகளும் அவர்களின் கூற்றுகளை நம்பி முஸ்லிம்கள்பால் மேலாதிக்கம் செய்ய நினைக்கும் IPKF இராணுவத்தினரும் மற்றும் கிழக்கில் ஒழித்து வாழும் புலிகளும் முஸ்லிம்களைக் குதறிக்கொண்டிருக்கும் ஆபத்திலிருந்து தற்காலிகமாகவேனும் உடனடியான நிவாரணம் ஒன்றைப் பெறல்.

இரண்டாவது காரணம், தற்போது உறுதிப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் வடக்கு, கிழக்கின் அரசியல் அதிகாரத்தில் முஸ்லிம்களின் நியாயமான பங்கு காணாமல்போனால் அதற்குரிய மக்களின் கேள்விகணைக்குக்குப் பதில் சொல்லவேண்டிய தார்மீகப் பொறுப்பு முஸ்லிம் காங்கிரஸையே சார்ந்ததாக அமைந்துவிடும். ஏனெனில் முஸ்லிம் அரசியல் என்ற கோட்பாட்டை முன்னெடுத்துள்ளவர்கள் அவர்களேயாவர்.

மூன்றாவது காரணம், முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதித்துவ அரசியலில் இன்னும் B Team ஒன்றை உருவாக்கவில்லை. அதாவது ஏனைய மாகாணங்களில் உருவாக்கப்பட்டிருப்பதுபோன்றே வடக்கு, கிழக்கிலும் இரண்டாம் நிலைத் தலைமைத்துவங்கள் அவசியம் உருவாக்கப்படல் வேண்டும்.

இதனை ஒத்த இன்னும் பல அவசியப்பாடு வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் காணப்பட்டது.

அதனால் இதிலுள்ள உயிராபத்துகளும் அது ஏற்பட்டால் அதற்கு முழுப் பொறுப்பையும் தானே ஏற்கவேண்டி வரும் என்ற நியாயமான அச்சம் அஷ்ரப் அவர்களை உருக்கி எடுத்தாலும் இந்த யுத்த காலத்தில் உயிர்ப்பயம் பற்றிய பீதிக்கு ஆகலும் முக்கியத்துவம் கொடுக்க முடியாது என்ற நியாயவாதமே சரியாகப்பட்டது. இந்த முடிவுக்கு அஷ்ரப் வர சேகு இஸ்ஸதீனே முக்கிய காரணமாகும். ஆனாலும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களின் உயிர்களை வீணே பலியிட விரும்பாது மாகாண சபைத் தேர்தல்களுக்கான சட்டவிதிகளிலுள்ள சாதகத் தன்மைகளை ஹிக்மத்தாகப் பாவித்தே தனது வேட்பாளர்களை நியமித்து 17 இருக்கைகளை வென்றெடுத்தது.

ஆனால், இதில் இலங்கையின் எந்தக் கட்சியும் போட்டியிட முன்வரவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும். ஆளும் கட்சியாகிய ஐ.தே.க. மாத்திரமே தவிர்க்க முடியாமல் வேட்பாளர்களை நியமித்தது. வேறு கட்சிகள் போட்டியிடாமல் இருந்ததால் சர்வதேசத்தின் முன்னிலையில் இந்தியாவின் மூக்குடைபட்டுப்போக இருந்த நிலையை முஸ்லிம் காங்கிரஸே பாதுகாத்துக் கொடுத்தது.

இதற்கான பிரதியுபகாரம் முஸ்லிம் சமூகத்துக்கும் அவர்களின் அரசியற் கட்சிக்கும் கிடைத்ததுவா என்பதே அப்போது முஸ்லிம் காங்கிரஸ் மீது தொடுக்கப்பட்ட கருத்தியல் யுத்தமாகும்.

# தமிழர்களின் அரசியல் சாசனமும் அபிலாஷைகளும்

**அக்கினியான்**

தமிழ் மக்களின் அபிலாஷைகளை தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் தீர்த்துவைக்கும் என்ற மிகுந்த எதிர்பார்ப்புக் கொண்டவர்களாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் காத்திருக்கிறார்கள் என்ற விடயம் அம்மாகான மக்களோடு உரையாடுகிறபோதுதான் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

கடந்த 75 வருடங்களாக மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தமிழ் மக்களை நம்பவைத்து கழுத்தறுத்துவிட்டன என்ற விரக்தியிலிருக்கும் மக்கள், தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றத்தை அதிகமாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பது சொல்லாமலேயே புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. சுதந்திரத்துக்குப் பின் நாம் ஆதரித்த - ஆதரிக்காத அனைத்து ஆட்சியாளர்களும் தங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்ற விரக்தியை தமிழ் மக்கள் கடந்த தேர்தலில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

விரும்பியோ விரும்பாமலோ வடக்கு, கிழக்கு மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பி இம்முறை தேசிய மக்கள் சக்தியை ஆதரித்திருப்பது வரலாற்றில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் என்று கூறுவதைவிட ஒருவித புரட்சிகரமான திருப்பம் என்றே கூறவேண்டும். பாரம்பரியமாக நம்பி வாக்களிக்கும் பிரதேச கட்சிகளை ஓரங்கட்டிவிட்டு என்றுமே ஆட்சிபீடம் ஏறாத கட்சியான தேசிய மக்கள் சக்தியை ஆதரித்து வாக்களித்து அதன் மகத்தான வெற்றியில் வடக்கு, கிழக்கு மக்களும் பங்கெடுத்திருக்கிறார்கள் என்பது ஆச்சரியப்படுகிற விடயந்தான்.

தேசிய மக்கள் சக்தியும் அதன் தலைவராகிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனது வெற்றியை உறுதிப்படுத்திய பின் வெளியிட்ட முதலாவது சத்தியப்பிரமாணம் - ''இந்த நாட்டின் அரசியல் சாசனத்தை புதிதாக வரைந்து சகல மக்களையும் சமமாக மதிக்கும் தேசிய ஜனநாயக சம நிலையை கொண்டுவருவேன்'' எனக் கூறியிருக்கும் நிலையில், பிறந்திருக்கும் புதிய ஆண்டில் புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் முயற்சிகள் ஆரம்பமாக இருக்கிறதென்பது பல எதிர்பார்ப்புகளை நினைவுபடுத்துவதாக அமைகிறது.

புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்குரிய அரிய சந்தர்ப்பமொன்று அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ளது. புதிய யாப்பை நிறைவேற்றுவதற்குரிய பொறுப்பை ஜனாதிபதி நிறைவேற்றுவாரானால் வரலாற்றில் அவர் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படுவாரென நீதியான சமுதாயத்துக்கான தேசிய இயக்கம் கூறியிருப்பதை இங்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் புதிய அரசியல் சாசன மொன்றை எதற்காக எதிர்பார்க்கிறார்கள், அதனால் ஏற்படப்போகிற நன்மை என்ன என்பது பற்றி அவர்கள் ஆழமாக சிந்திக்காமல் இந்த எதிர்பார்ப்பைக் கொண்டவராக இருக்க முடியாது. கடந்த 75 வருடங்களுக்கும் மேலாக புரையோடிப்போய் தீர்க்கப்படாது காணப்படும் தேசிய பிரச்சினையான இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழி புதிய அரசியல் சாசனமொன்றை வரைந்து அதனூடாக தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாஷைகள் தீர்த்து வைக்கப்படவேண்டுமென்பதில் அதிக எதிர்பார்ப்புக் கொண்டவர்களாக அவர்கள் போராடி வந்திருக்கிறார்களென்பது உலகறிந்த விடயம்.

காலத்துக்குக் காலம் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகள், போராட்டங்கள், இராஜதந்திர முயற்சிகள் அனைத்துமே செப்படி வித்தைகளாகவும் ஏமாற்று நாடகங்களாகவும் இருந்துவந்த நிலையில், புதிய பாதையொன்றைத் தேடும் நிலையிலேயே தேசிய மக்கள் சக்தியின் மீது நம்பிக்கை வைத்து அவர்களுக்கு வாக்களித்து அவர்கள் மீது இமாலய கனவு கொண்டவர்களாக தமிழ் மக்கள் தங்கள் கனவு இவர்களாலாவது நிறைவேறுமா என்று எதிர்பார்ப்பதைக் கேள்வியுறுகிறோம்.



வடக்கு, கிழக்கு மக்களின் அபிலாஷைகள் என்பது அபிவிருத்தியோ அல்லது பாதை திறப்புகளோ, வேலை வாய்ப்புகளோ பட்டங்களோ பதவி உயர்வுகளோ அல்ல என்பதும் சுயநிர்ணய அடிப்படையில் சுதந்திரமாகவும் தேசிய தரத்துடனும் இந்த நாட்டு பெரும்பான்மை மக்களான சிங்கள மக்கள் என்ன உரிமைகளை அனுபவிக்கிறார்களோ அந்த உரிமைகளையும் சுதந்திரத்தையும் தாங்களும் அனுபவிக்கவேண்டுமென்ற அபிலாஷைகளைத் தவிர, வேறு எதுவுமில்லை என்பதை தந்தை செல்வா தொடக்கம் அண்மையில்



மரணித்துப்போன மூத்த தலைவர் இரா. சம்பந்தன் வரையுள்ள தலைவர்கள் தென்னிலங்கை மக்களுக்கும் அவர்தம் தலைமைகளுக்கும் மிகக் கச்சிதமாக தெரிவித்து வந்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் உரிமைகளைப் பெறுவதாயின் அதை சிங்கள மக்களின் ஆதரவுடன் அரசியல் சாசனத்தின்வழி உறுதிப்படுத்தி நிரந்தரமான தீர்வைப் பெறவேண்டு மென்பதே தமிழ் மக்களின் அபிலாஷை களாகும்.

தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்திசெய்யும் வகையில், ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பு முயற்சிகளை மேற்கொண்டால் அதற்குத் தங்கள் முழுமையான ஒத்துழைப்பைத் தரத் தயாராக இருப்பதாக தமிழரசுக் கட்சியின் ஊடகப்பேச்சாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய எம்.ஏ.சுமந்திரன் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நேரிய உரிமையை மிக தெளிவுபட வெளிப்படுத் தியிருந்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் செயற்பாடுகள் காலதாமதமின்றி எடுக்கப்படுவது அவசியமானது என்றும் அதில் தமிழ்பேசும் மக்களுக்கான அரசியல் அபிலாஷைகளை பூர்த்திசெய்யும் அதிகாரப்பகிர்வுடன் கூடிய தீர்வு உள்ளடக்கப்பட வேண்டுமென மிகக் கச்சிதமாக கூறியிருந்தார். சுமந்திரன் அவ்வாறு கூறியமைக்கான காரணங்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட அனுபவங்களின் முடிவையும் முயற்சியையும் அவர் நன்கு அறிந்ததன் காரணமாகவே இவ்வாறு அழுத்தந்திருத்தமாக அரச தரப்பினருக்கு ஆலோசனை நல்கும் தன்மையுடன் கூறியிருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஏனெனில், கடந்த காலங்களில் தமிழ் மக்கள் அடைந்த ஏமாற்றங்களும் தோல்விகளும் அறியப்பட்ட விடயங்களே.



1970ஆம் ஆண்டு பலத்த செல்வாக்குடன் தேசிய ஆட்சியொன்றை அமைத்துக்கொண்ட முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க புதிய அரசியல் சாசனமொன்றை உருவாக்கி நாட்டைப் புதிய குடியரசு நாடாக பிரகடனப்படுத்தினார். இந்த சாசனம் வரையப்பட்டபோது ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியினர் தங்களது முழுமையான ஆதரவை வழங்கினார்கள். கொல்வின் ஆர். டி சில்வா தலைமையில் வரையப்பட்ட இச்சாசனத்தில் சிறுபான்மையினரான தமிழர்கள், மலையகத்தார் மற்றும் முஸ்லிம்கள் ஆகியோருக்கு சோல்பரி யாப்பின் மூலம் வழங்கப்பட்ட 29 ஷரத்து செனட் சபை ஆகிய பாதுகாப்பு அரண்கள் திட்டமிட்டு நீக்கப்பட்டன.

இந்த சாசனத்தில் சிங்களம் மட்டும் அரசகரும மொழி உறுதியளிக்கப்பட்டு பௌத்த மதத்துக்கு அரச அந்தஸ்து வழங்கப்பட்டது. இலங்கை தொடர்பாக பிரித்தானிய சாம்ராச்சியத்துக்கு இருந்த அதிகாரங்கள் மீளப் பெறப்பட்டன. தமிழ்ப்பேசும் மக்களின் அடிப்படை உரிமைகள் சிலவற்றையாவது புதிய அரசியலமைப்பில் இடம்பெறச் செய்யவேண்டும் என்ற கோதாவில் தந்தை செல்வா தலைமையிலான குழு பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க, அரசியல் திட்ட அமைச்சர் கொல்வின் ஆர்.டி.சில்வா மற்றும் சுதந்திரக் கட்சியின் பிரதான அமைச்சர்களோடு பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தும் எதுவித பயனும் கிடைக்காத காரணத்தினாலேயே அரசியல் சாசன குழுவிலிருந்து விலத்தினோமென தந்தை செல்வா தனது வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார். ஏற்கனவே பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்டு அதன் ஈரம் உலர்வதற்கு முன்பே இந்த அரசியல் சாசன சம்பவம் தமிழர்களுக்கு நடந்தது.

1978ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்தன அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட சோஷலிச யாப்பில் தமிழ் மக்கள் பிரதிநிதிகளையோ மக்களையோ கலந்துரையாடாமல் தன்னிச்சைப்போக்கில் நடைமுறைப்படுத்திய முன்னாள் ஜனாதிபதி, போர் என்றால் போர், சமாதானமென்றால் சமாதானமென்ற நாஷீச கொள்கையைக் கடைப்பிடித்தார். சுமார் 10 ஆண்டுகளுக்குப்பின் கொண்டுவரப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தமும் 13ஆவது திருத்தமும் தமிழர்களின் அபிலாஷைகளுக்குத் தீனி போட வில்லை. 1994ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகா பண்டாரநாயக்க, நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதாக்குவேன், தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணுவேன்'' எனக் கூறி 2000ஆம் ஆண்டளவில் பல விடயங்களை உள்ளடக்கிய வகையில் அனைத்து கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் தயாரித்த சட்டமூல வரைபை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை. ஜனாதிபதி முறைமையில் அவரது பதவிக்காலம் முடியும்வரை முடிவுறாத வகையில் செயற்படுவதற்குரிய ஏற்பாடுகள் காணப்படாமை, அதற்குரிய காரணங்களாகும்.

யுத்தம் முடிந்தவுடன் சமாதான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் இந்தியா வலியுறுத்தி வந்தது. ஆனால், இந்தியாவின் அழுத்தங்களுக்குக்கூட அன்றைய




அரசாங்கமானது செவிசாய்க்கவில்லை. ஆனாலும் 2011/2012 வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அன்றைய அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. 18 சுற்றுப்பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோதும் அதில் காணப்பட்ட இணக்கங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்நிலையில், பேச்சுவார்த்தை மேசையிலிருந்து தன்னிச்சையாக அரசாங்கம் இறங்கியது



மாத்திரமல்ல, தமிழர்களுக்குத் தீர்வு வழங்கத் தயாராக இருக்கிறோம், அவர்களின் அபிலாஷைகள் பூர்த்திசெய்யப்படுமென்று வாக்குறுதி நல்கிய அன்றைய அரசாங்கம், தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றிக் கொண்டது.

2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் பதவியேற்றதையடுத்து புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கான முயற்சிகள் இடம்பெற்றன. தெற்கின் பிரதான இரு கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சியும் இணைந்து ஆட்சியமைத்ததனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண முடியும் என்ற நம்பிக்கை தமிழ்த் தரப்பினரிடம் காணப்பட்டது.

அன்றைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து இதற்கான நடவடிக்கையை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை உருவாகியிருந்தது. இதற்கிணங்க புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான முயற்சி இடம்பெற்றதுடன், அரசியல் தீர்வு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.



ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளும் வகையில் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால், இந்த முயற்சி இறுதியில் இடைநடுவில் கைவிடப்பட்டது. பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியதைப்போலவோ இல்லை, பழைய குருடி கதவைத் திறவடி என கூறியதைப்போலவோ தமிழ் மக்கள் சொல்லி வைத்தாற்போல் ஏமாற்றப்பட்டார்கள். இவ்வாறு இது நடக்கும், பிரதமர் ரணிலை நம்ப முடியாது, அந்த ஏமாற்றுவித்தைக்காரனை நம்பி தமிழ்த் தலைமைகள் பொங்கலுக்குத் தீர்வு, தீபாவளிக்குத் தீர்வு வருகிறது என சொல்லி ஏமாந்தார்களே தவிர, எந்தக் காரியமும் நடைபெறவில்லை.

காலஞ்சென்ற சோபித தேரர் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை இரத்துச்செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தார். புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கு மக்கள் விடுதலை முன்னணியின் முன்னிலையில் இருந்தவாறு ஒத்துழைப்பு வழங்கியது. ஆனால், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒருசிலரை மாத்திரம் உள்ளடக்கியவகையில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக முன்னெடுத்த நடவடிக்கைகள் தோல்வியடைந்து போனதை மறந்துவிட முடியாது.

எனவேதான் தேசிய மக்கள் சக்தி தற்போது புதிய சாசனத்தை உருவாக்க முயற்சிகளை மேற்கொள்ளவிருப்பது சந்தோஷம் தருகிற விடயமென வடக்கு, கிழக்கு தமிழர்கள் நம்புகிறார்கள்.

புதிய அரசியல் சாசனத்தில் தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்க்கும் அபிலாஷைகள்தான் என்ன என்பதற்கான விளக்கத்தை தமிழ்த் தலைமைகள் மீள பதிவு செய்யவேண்டிய அவசியத்தில் உள்ளனர் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

வடக்கு, கிழக்கு தமிழ்ப்பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்திசெய்யக்கூடிய வகையில் தீர்வுத்திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென்ற கோரிக்கை தமிழ் மக்களால் நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, 2016ஆம் ஆண்டு தமிழ் மக்கள் பேரவையால் முன்வைக்கப்பட்ட முன்வரைபு இதற்கு உதாரணமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென அண்மையில் இந்தியப் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்ட வரைபை தரமுயலுகிறேன்.

அரசியல் தீர்வு ஒற்றையாட்சிக்கு உட்பட்டதாக இருந்துவிடாமல் இருக்கவேண்டும்.

குறித்த அரசியல் தீர்வானது தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் சுயாதீனத்துடனும் வாழக்கூடிய வழிவகை கொண்டதாக இருக்கவேண்டும்.

இலங்கையின் அரசியல் தன்மை இலங்கை ஒரு பல்தேசிய - பல்கலாசாரத் தன்மை - பல்மொழித்துவ - பல்மத அரசாக இருக்கவேண்டும்.

சிங்களவர்கள், தமிழர்கள், மலையகத்தவர், முஸ்லிம்கள் மற்றும் ஏனைய சமூகங்கள் பல்தேசிய உரிமைக்கு உரியதாக மதிக்கப்படவேண்டும்.

1978 வரையப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ்த் தேசத்தின் பாரம்பரிய தாயகமாக இருக்கவேண்டும். தமிழ் மக்கள் பாரதீனப்படுத்த முடியாத சுயநிர்ணய உரிமையைக்கொண்ட மக்கள் கூட்டமாகவும் தமது சுயநிர்ணய உரிமையை ஏற்று அங்கீகரிக்குமிடத்து பிளவுபடாத ஒற்றுமையான இலங்கை அரசுக்கு தமிழ் மக்கள் தமது பற்றுதியை வெளிப்படுத்தும் வாய்ப்பு அளிக்கப்படவேண்டும்.

சமஷ்டி அரசின் இறைமையையும் அதன் அங்கத்துவ மக்கள் கூட்டங்களின் இறைமை மூலம் உதயப்படுவதாகவும் இருக்கவேண்டும். மத்தியினதும் மாநிலத்தினதும் அதியுயர் சட்டமும் அத்திபாரமுகமாக அரசியலமைப்பு இருக்கும். மத்தியினதும் மாநிலத்தினதும் அனைத்து செயற்பாடுகளும் அரசியலமைப்போடு இயைந்ததாக இருக்கவேண்டும்.

இலங்கை ஒரு மதச்சார்பற்ற குடியரசாக இருக்கும். அரசு அனைவரது விரும்பிய மதத்தைப் பின்பற்றுவதற்கான உரிமையை மதிப்பதோடு எல்லா மதங்களையும் சரிசமமாக மதித்தல்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியன அரசின் உத்தியோக மொழியாக இருக்கும். வடக்கு, கிழக்கில் தமிழும் ஏனைய இடங்களில் சிங்களமும் நீதிமன்ற மொழியாகவும் பொது ஆவணங்களின் மொழியாகவும் இருக்கும்.

# கற்பனைக் குதிரைக்கு வயது 75!

**கருணாகரன்**

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு இது 75ஆவது ஆண்டு. ஆனால், 75 ஆண்டு (பவள விழா) கொண்டாட்டங்களை நடத்த முடியாத அளவுக்குக் கட்சி பலவீனப்பட்டுள்ளது. கட்சிக்குள் உள்மோதல்கள் வலுப்பெற்றுள்ளன. இதனால் கட்சி நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறி இறங்கிக்கொண்டிருக்கிறது. பல வழக்குகள். மேலும் வழக்குகள் தொடரப்படக்கூடும் என்றே தெரிகிறது.

கட்சியின் முக்கியஸ்தர்களான அரியநேத்திரன், கே.வி.தவராஜா, சசிகலா ரவிராஜ், சரவணபவன் உள்ளிட்ட பலர் தகுதிநிலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். சிவமோகன் இடைநிறுத்தப்பட்டுள்ளார். இந்தக் காய் வெட்டும் களையெடுப்பும் நிற்கப்போவதில்லை. மேலும் தொடரக்கூடிய வாய்ப்புகளே அதிகமுண்டு.

அணி இரண்டாகினால், பிளவும் பிரிவும் காய் வெட்டும் களையெடுப்பும் சாதாரணமாகி விடும். அதற்கான நியாயங்களும் நியாயப்படுத்தல்களும் தானாகவே உருவாகிக்கொள்ளும்.

கடந்த வாரம் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நடந்தபோது கட்சியின் ஒரு தரப்பினர், மத்திய செயற்குழுவை நோக்கிக் கேள்விகளை எழுப்பிய - குற்றச்சாட்டுகளை எழுப்பிய பதாகைகளை கூட்டம் நடந்த மண்டபத்தின் வாசலில் கட்டியிருந்தனர். இது கட்சியின் உள் நிலைமையை - அதனுடைய உள் விரிசல்களை மேலும் விளக்குகிறது. அடுத்து வரப்போகிற உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மாகாண சபைகளுக்கான தேர்தலில் இந்த விரிசல் மேலும் வலுப்பெறவே வாய்ப்புண்டு.

இதையெல்லாம் மேலும் வளரவிடாமல் சீராக்கலாம் என்ற நம்பிக்கையில் மாவை சேனாதிராஜாவைத் தூக்கிவிட்டு, பதில் தலைவராக சீ.வி.கே.சிவஞானத்தைத் தலைவராக்கியுள்ளது கட்சி. மாவையின் தலைமைக்காலத்தில்தான் கட்சி மிக மோசமான அளவுக்கு உள்வெடிப்புகளைக் கண்டது. அவரை நீக்கிவிட்டுச் சிவஞானத்தை நியமித்திருப்பதன் மூலம் அந்த வெடிப்புகளை ஒட்டிச் சீராக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆனால், அது சிரமமான காரியம்.

அதைப் பற்றிக் கீழே பார்க்கலாம்.

இப்பொழுது தலைமைப் பதவியிலிருந்து கழற்றிவிடப்பட்ட சேனாதிராஜாவுக்குப் பெருந்தலைவர், அரசியல் குழுத் தலைவர் என்றெல்லாம் ஓர் அலங்காரத் தலைப்பாகையைக் கட்டிவிட்டிருக்கிறார்கள். சம்பந்தன் இருந்தபோதும் அவருக்கு இத்தகையதொரு மதிப்பு வாய்ந்த இடமளிக்கப்பட்டிருந்தது உண்மையே. அதைப்போல சேனாதிராஜாவுக்கும் அத்தகைய இடமளிக்கப்பட்டுள்ளது என்று இதற்கான நியாயம் சொல்லப்பட்டுள்ளது.

சம்பந்தனுக்கு வழங்கப்பட்ட இடமும் மதிப்பும் சேனாராஜாவுக்குக் கிடைக்கப்போவதில்லை. அதை யாரும் வழங்கப்போவதுமில்லை. அதுமட்டுமல்ல, தமிழ் மக்களின் அரசியல் வெற்றிகளைச் சாதிக்க முடியாது விட்டாலும், கட்சியைப் பொறுத்தவரையில் சிறு துரும்பையும் இரும்பாக்கக்கூடிய வல்லமை சம்பந்தனுக்கிருந்தது. இரும்பையும் சிறு துரும்பாக்கும் ஆளே சேனாதிராஜா. ஆகவே, சேனாதிராஜா இனி செல்லாக்காசாக்கப்பட்ட சேனாதிராஜாவாகவே இருக்கப் போகிறார்.

இப்படிச் சமாளிப்புகள், குழிவெட்டுதல்களோடுதான் கட்சி பயணிக்கவேண்டியுள்ளது. அதாவது, அறுவைசிகிச்சை செய்து தன்னைச் சீராக்கிக்கொள்வதற்கு அது இன்னும் தயாராகவில்லை. அதைச் செய்வதற்கு அதற்கு முடியாது. தமிழரசுக் கட்சியின் குணாம்சமே – இயல்பே – வரலாறே – இதுதான். பழைய குப்பைகூளங்களை யெல்லாம் சேர்த்து வைத்துக்கொள்வது. அதைக் கூட்டித் துப்புரவு செய்வதற்கு அது ஒருபோதுமே முன்வருவதில்லை. கட்சியின் தளர்வை மட்டுமல்ல, அதனுடைய அரசியல் கொள்கை, அதற்கான நடைமுறைகள் போன்றவற்றைக் கூட அது புத்தாக்கம் செய்வதில்லை. சமகால நிலவரங்கள் என்ன என்றே கட்சிக்குத் தெரியாது. கட்சிக்குத் தெரியாது என்றால், அதிலே உள்ளவர்களுக்கு இதைப்பற்றிப் புரியாது என்பதால்தான் அவர்கள் 1960, 70களின் அரசியலைத் தூக்கிக்கொண்டு நிற்கிறார்கள். காலங்கடந்த அரசியலை - தோற்றுப்போன அரசியலை - சாத்தியப்படுத்த முடியாத அரசியலைக் காவிக்கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் தமிழரசுக் கட்சியால் அது முன்மொழிந்த சமஷ்டியை 75 ஆண்டுகளாகப் பெற முடியாமலுள்ளது.

அதுமட்டுமல்ல, தமிழரசுக் கட்சி தொடங்கப்பட்டபோது ஈழத்தமிழர்களிருந்த சமூக – அரசியல் பலம் இப்போதில்லை. இப்பொழுது மிகப் பாதகமான நிலையிலேயே ஈழத் தமிழ்ச்சமூகம் உள்ளது. இதற்கான பொறுப்பை தமிழரசுக் கட்சி ஏற்க வேண்டும். அந்தப் பொறுப்பேற்றல் என்பது, தமிழரசுக் கட்சியின் பொறுப்புக் கூறலிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அந்தப் பொறுப்புக் கூறுதல் என்பது, அது 'தமிழர்களுக்குத் தமிழரசு – தனியரசு' என்று உருவாக்கப்பட்ட எண்ணக்கருவிலிருந்து தொடர்ந்து வந்த விளைவுகளுக்கானது என்ற அடிப்படையில் அமையும். இதற்கு அதுவும் (தமிழரசுக் கட்சி) அதனுடைய ஆதரவாளர்களும் தம்மை சுயவிமர்சனம் செய்துகொள்வது அவசியம். அத்துடன், கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலத்தைப் பற்றிய தயக்கமின்றிய அரசியல் ஆய்வுக்குத் தயாராக வேண்டும்.

அதைச் செய்யாத வரையில் தமிழரசுக் கட்சியால் நீதிமன்ற வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வந்தாலும் மீள முடியாது. சேனாதிராஜாவுக்குப் பதிலாக சிவஞானத்தை மாற்றினாலும் புதிதாக எதுவும் நிகழாது. மோதகத்துக்கும் கொழுக்கட்டைக்கும் ஏதாவது வித்தியாசமிருக்கா? அப்படித்தான் இதுவும்.

இந்நிலையில்தான் புதிய – பதில் – தலைவரான சி.வி.கே.சிவஞானத்தை வைத்துக்கொண்டு கட்சியை முன்னகர்த்தலாம் என்று கட்சி யோசிக்கிறது. இதை விட, சிவஞானமோ சுமந்திரனை ஆதரிப்பவர். சுமந்திரன் வழிமுறையில் சிந்திப்பவர். ஆகவே, கட்சிக்குள் சுமந்திரனின் செல்வாக்கு நீடிக்கவும் பலமடையவுமே வாய்ப்புண்டு. இதை உறுதிப்படுத்துவதைப்போலவே, ''தமிழரசுக் கட்சியின் பேச்சாளராக சுமந்திரனே இருப்பார்'' என்று சிவஞானம் சொல்லியிருப்பதைப் புரிந்துகொள்ளலாம். அதுமட்டுமல்ல, சுமந்திரன் கடந்த தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதால், ''அவர் இனி குரல் தர வல்லவரல்ல. அவருடைய சிறகுகள் அறுக்கப்பட்டுவிட்டன. அவருடைய பற்கள் பிடுங்கப்பட்டாயிற்று'' என்றொரு தோற்றப்பாட்டை உருவாக்கும் விதமாக கடந்த சில நாட்களுக்கு முன்பு, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ஸ்ரீநேசன் ஓர் ஊடகச் சந்திப்பை நடத்தியிருந்தார். அதற்குப் பதிலடியாக, மறுத்தானாகவே சிவஞானத்தின் இந்த அறிவிப்புள்ளது.

ஸ்ரீநேசன், மாவை சேனாதிராஜா போன்றவர்கள் சிறிதரனின் ஆதரவாளர்கள் – அணியினர். அவர்கள் இப்பொழுது பின்தள்ளப்பட்டுள்ளனர். பாராளுமன்றத்திலும் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் என்ற அடிப்படையிலும் சிறிதரன், ஸ்ரீநேசன் போன்றவர்கள் தாம் பலமானவர்கள் எனக் கருதலாம். அது எந்தளவுக்கு நிரூபிக்கப்படும் பலமாக இருக்கும் என்பதை எதிர்வரும் காலம்தான் தீர்மானிக்க முடியும். இப்போதைய சூழலில் சிவஞானம், சாணக்கியன், சுமந்திரன் ஆகியோரே முன்னிலையைக் கொண்டுள்ளனர். பாராளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரன், தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற அணியின் பேச்சாளர் ஸ்ரீநேசன் என்றெல்லாம் வெளியே சொல்லிக் கொண்டிருந்தாலும் சாணக்கியனோடும் சிவஞானத்தோடும் இணைநிலைப் பயணியாக சுமந்திரனே களமாடக்கூடிய வாய்ப்புகள் அதிகமுண்டு. தேர்தலுக்குப் பின்னர் நான்கு ஐந்து அரசியல் சந்திப்புகளை சுமந்திரன் + சாணக்கியன் அணி சாத்தியப்படுத்தியுள்ளது. இது மேலும் தொடரும்.

இந்தச் சூழலில்தான் கடந்த மாதம் நடந்த இன்னொரு மத்திய செயற்குழுக் கூட்டத்தில் மாவையைத் தலைவராக ஏற்கத் தேவையில்லை என்று துணிகரமாக சாணக்கியன் அணி சொன்னது. இல்லை, அவரை வைத்தே கூட்டத்தை நடத்த வேண்டும் என்ற சிவமோகன் அணி இப்பொழுது வெளித்தள்ளப்பட்டுள்ளது.

உள்ளே இப்படி ஏராளம் கசப்புகளும் இடைவெளிகளும் உள்ளபோதும் வெளியே பேசும்போது தமிழரசுக் கட்சிதான் தமிழர்களுடைய பேராதரவைப் பெற்ற ஒரே கட்சி என்ற பெருமிதங்களை அதனுடைய உறுப்பினர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். இதற்கு வாய்ப்பாக கடந்த (2024 நவம்பரில்) பாராளுமன்றத் தேர்தலில் ஏனைய தமிழ்க்கட்சிகளையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டுத் தமிழரசுக் கட்சியே வெற்றியைப் பெற்றுள்ளது. அதற்கு எட்டு ஆசனங்கள் கிடைத்துள்ளன. இதன் மூலம் பாராளுமன்றத்தில் அது மூன்றாவது செல்வாக்குள்ள – அதிக உறுப்பினர்களைக் கொண்ட – கட்சியாக உள்ளது.

## அப்படியானால் எத்தகைய முடிவுக்கு மக்கள் வர முடியும்?

கட்சியின் அரசியல் கொள்கை – அரசியல் நிலைப்பாடு பழையது. சாத்தியக் குறைவானது. தோற்றுப்போனது. கட்சிக்குள் அணிமோதல், அதன் விளைவான குழிபறிப்புகள், வழக்குகள் என்றெல்லாம் இருந்தாலும் அதையெல்லாம் கடந்து தமிழரசுக் கட்சியைத்தானே மக்கள் அங்கீகரித்திருக்கிறார்கள். அதற்குத்தானே ஆதரவு கிடைத்துள்ளது என்ற கேள்வி இந்த இடத்தில் எழும்.

இதற்கான வரலாற்றுக் காரணங்களையும் சமகால நிலவரங்களையும் நாம் இணைத்துப் பார்க்க வேண்டும்.

தமிழரசுக் கட்சி வெற்றியடைந்திருப்பதும் அதுவே பாராளுமன்றத்தில் மூன்றாவது இடத்தில் இருப்பதும் அதையே மக்கள் அங்கீகரித்திருப்பதையும் ஓர் அரசியல் வெற்றியாக நாம் கொள்ள முடியாது. ஆனால், கட்சி அப்படித்தான் கருதும். அப்படித்தான் தன்னை நிரூபித்து, பிறரைக் கருத வைக்கும்.

அது கட்சியினுடைய தேவை.

கட்சிக்கு வெளியே அரசியலைப் பகுத்துப் பார்க்க விரும்புவோருக்கும் உண்மையை அறிய வேண்டியவர்களுக்கும் கட்சியின் கருதுகோளைத் தூக்கிச் சுமக்கவேண்டிய அவசியமில்லை. அப்படி இருக்கவும் கூடாது.

1972 இல் தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாகச் செயலிப்புக்குப் போனது. அதற்கு முன்பே, அதனுடைய இயலாமையைக் குறித்து தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகரான எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பகிரங்கமாகச் சொல்லிவிட்டார் – ''தமிழ் மக்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று.

அதற்குப் பிறகு அடுத்த நிலையிலிருந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அதை தமிழர் விடுதலைக் கூட்டணியாக உருவமாற்றம் செய்தார். அதற்காக அவர் எதிரணியாக இருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸோடு – ஜீ.ஜீ.பொன்னம்பலத்தோடு கூட்டுச் சேர்ந்தார். 1977இல் தமிழர் விடுதலைக் கூட்டணி புதிய லேபிளில் வெற்றியைப் பெற்றது. ஆனாலும் அதனால் தொடர்ந்து அரசியல் அரங்கில் நின்றுபிடிக்க முடியவில்லை. அதனுடைய கொழும்பு மைய அரசியலும் நடைமுறைச் சாத்தியமற்ற கற்பனைக் கோட்பாடுகளும் அதனை வெளிறச் செய்தன.

1977க்குப் பிறகு எழுச்சியடைந்த ஈழ விடுதலை இயக்கங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியை முற்றாகவே நிராகரித்தன. அதனோடு இலங்கை தமிழரசுக் கட்சியும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸும் தமிழ்ப் பிராந்தியத்தை விட்டே வெளியேறி விட்டன.

அதாவது, 1977இல் அமிர்தலிங்கத்தால் தமிழரசுக் கட்சியை மீளுயிர்ப்புச் செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சியும் தோற்றது. இறுதியில் 1989இல் அமிர்தலிங்கமும் விடுதலைப் புலிகளால் கொழும்பில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். தமிழ் அரசியல் தலைவர் ஒருவர் கொழும்பில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டதன் அரசியல் சேதியை தமிழ் மக்கள் கவனத்திலெடுத்துப் பார்க்க வேண்டும். இந்தக் கட்டுரை அந்தக் கொலையின் சரி, தவறுகளைப் பற்றி இங்கே பேசவில்லை. அது தனியாகப் பேசப்பட வேண்டியது. ஆனால், அன்று தமிழ்ப் பிரதேசத்தை விட்டுக் கொழும்பிலும் இந்தியாவிலுமே தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவை தளமிட்டிருந்தன.

2000இல் புலிகள் – இலங்கை அரசுக்கு இடையில் நடந்த பேச்சுவார்த்தையோடு உருவாகிய விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட மறைமுகமான சர்வதேச நெருக்குவாரம், தவிர்க்க முடியாமல் ஏனைய அரசியல் தரப்புகளோடு உடன்பாட்டுக்குச் செல்ல வேண்டிய நிலையை உருவாக்கியது. அதற்காக எதிர்த்தரப்பிலிருந்த – ஒரு காலத்தில் புறமொதுக்கியிருந்த – அரசியல் கட்சிகளைத் தூசி தட்டி எடுக்க வைத்தது.

இந்த அரசியல் சூழல் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாய்ப்பைக் கொடுத்தது. ஜனநாயக வழிமுறையிலான தேர்தலொன்றில் புலிகள் தமக்குள்ள ஆதரவை நிரூபித்துக் காட்ட வேண்டுமென்ற நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தைப் பயன்படுத்துவதற்கு புலிகள் முன்வந்தனர். முதற்றடவை அது சாத்தியமாகினாலும் தொடர்ந்து ஆனந்தசங்கரியின் இயல்பினால் அதைத் தக்கவைக்க முடியவில்லை. அப்பொழுது கூட்டணியின் தலைமைப் பொறுப்பில் ஆனந்த சங்கரியே இருந்தார். ஆனந்த சங்கரியின் உணர்ச்சிவசப்பட்ட போக்கு, அந்த வாய்ப்பை தமிழரசுக் கட்சியின் அடையாளத்தோடிருந்த சம்பந்தனுக்குக் கிடைத்தது. சம்பந்தன் அதைப் பயன்படுத்திக்கொண்டார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)







எம்.எஸ்.அமீர் ஹுசைன்



# கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத் திட்டமும் பொருளாதார அபிவிருத்தியும்

சோதனைகள் நிறைந்ததாக அமைந்த 2024ஆம் ஆண்டு விடைபெற்று 2025ஆம் ஆண்டு புதிய எதிர்பார்ப்புகளோடு மலர்ந்திருக்கின்றது. மக்கள் கடந்துபோன முன்னைய வருடத்தில் அடைய முடியாமல் போன அபிலாஷைகளை மலரும் புது வருடத்திலாவது அடைந்துகொள்ள வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொள்வதும் அதற்கான திட்டங்களை வகுப்பதும் இயல்பாக நடை பெறுகின்றது. அதேபோன்று தான் பதவியில் இருக்கின்ற அரசு, நாட்டுக்கும் மக்களுக்கும் ஆற்ற வேண்டிய தேவைகள், பணிகள் தொடர்பாக திட்டமிடல்களை முன்வைப்பதோடு உரிய இலக்கை அடைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை பொதுவான செயற்பாடுகளாகும். அந்த வகையில் பதவியில் இருப்பது இன்னும் முதிர்ச்சியடையாத புதிய ஆட்சியாகும். பதவிக்கு வந்து இரண்டே மாதங்கள்தான் ஆகின்றன.

இந்நிலையில், இவ்வருடம் அமுல்படுத்தப்படவுள்ள கிளீன் ஸ்ரீ லங்கா (தூய்மையான இலங்கை ) என்ற வேலைத் திட்டம் பற்றி 2025 ஜனவரி 01ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு விளக்கமளித்துள்ளார். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஒட்டுமொத்த அரசியல் முகச் சாயலையும் மாற்றியமைத்து புதிய அரசில் கலாசாரம் உருவாக்கப்படும். ஊழல் இல்லை, சட்டத்தின் ஆட்சி நிலவும், அதிகார துஷ்பிரயோகம் இல்லை, ஒரு சமூகம் இன்னொரு சமூகத்தை அடக்கி ஒடுக்கி மேலாதிக்கம் செலுத்தும் நிலை இல்லை உட்பட முன்னைய ஆட்சி காலப்பகுதிகளில் இந்த நாட்டில் இருக்காத இன்னும் பல நல்ல விடயங்கள் ஏற்படுத்தப்பட்டு புதிய தேசம் கட்டியெழுப்பப்படும். இத்திட்டத்துக்கு ஒத்துழைக்கத் தவறினால் அதற்கு எதிராக சட்டத்தைப் பயன்படுத்த வேண்டிவரும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு கடந்துபோன இரண்டு மாத காலப்பகுதிக்குள் சாதித்தவை என்ன என்பதை விட மலரும் 2025ஆம் ஆண்டு புது வருடத்தில் இந்நாட்டை பொருளாதார சுபீட்சமும் அபிவிருத்தியும் கொண்ட நாடாக மலரச் செய்தல், மக்களது வாழ்க்கைச் சுமையைக்குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல், அரசியல் ரீதியாகக் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வைத்து ஸ்திரமான ஆட்சியை நிலை நிறுத்துதல் போன்றவை அரசாங்கத்தின் முன்னுள்ள பிரதான எதிர்பார்ப்புகளாகும்.

ஏற்கனவே இந்த அரசு பதவிக்கு வர முன்னர் மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளில் இவை பிரதான அம்சங்களாகும். ஏற்கனவே நாடு 70 வருடங்களாக நாசமாக்கப்பட்டு பொருளாதார ரீதியாக பின்னடைவுகளையும் இழப்புகளையும் சந்தித்துள்ள நாடு என்பது இந்த ஆட்சியில் அதிகாரத்தைப் பெற்றுள்ள அனைத்து தரப்பினர்களதும் குற்றச்சாட்டாகும். அதனால் கடந்த 70 வருடங்களாக இந்த நாட்டில் மேலாதிக்கம் செலுத்திய ஊழல், மோசடிகளை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கைகளை எடுத்தல், கடந்த ஆட்சி காலப்பகுதியில் சொல்லப்பட்ட ஊழல்கள், சூறையாடல்களில் ஈடுபட்டு அரச நிதி, சொத்துகளைக் கையாடல் செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல் என்பன அரசின் முன்னுள்ள பிரதான சவால்களாகும்.

இந்த ஆட்சி மலர்ந்த நாளிலிருந்து முகங்கொடுத்துவரும் பிரதான சவாலாக அமைவது மக்கள் எதிர்நோக்குகின்ற வாழ்க்கைச் செலவு உயர்வை குறைப்பதற்கான நிவாரண நடவடிக்கைகளை எடுப்பது அரசாங்கத்தின் தலையாய கடப்பாடாகும். ஆனாலும் இந்த வருடத்தில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள், அரசியலமைப்புக்கான திருத்தம் என்பன அரசாங்கத்தால் முகங்கொடுக்க இருக்கின்ற ஏனைய சவால்களாகும். நாட்டின் நிதி நிலைமை மிகவும் மோசமான நிலையில் இருந்துவருகின்ற நிலையில் உள்நாட்டு வருமானங்கள் அடிமட்டத்தில் இருக்கின்ற நிலையில் சர்வதேச நாணய நிதியத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மூன்றாம் கட்ட கடனை மாத்திரம் நம்பி திட்டங்களை முன்மொழிய முடியாத நிலையில் பொருளாதார நெருக்கடி தொடர்கின்றதால் இந்த நெருக்கடியைச் சமாளிக்கத் தீர்வு காணவேண்டி இருக்கின்றது.

அவ்வாறே ஏற்கனவே பொதுத் தேர்தல் காலப்பகுதியில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் பிரதானமாக அமைந்தவை பின்போடப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஏப்ரலில் நடத்துவது என்ற விடயமாகும். அத்துடன், கடந்த 06 வருடங்களுக்கும் மேலாக பின்போடப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலையும் நடத்துவதென்று வாக்குறுதி வழங்கப்பட்டு அதனை மக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர். 2025 ஏப்ரலில் நடைபெறவிருக்கின்ற வரவு-செலவுத் திட்டத்தின் பின்னர் இந்தத் தேர்தல்களுக்கான நாள் குறிக்கப்பட வேண்டும். அதன்படி இவ்வருடமும் இரண்டு தேர்தல்கள் நடக்கும் என்ற நிலை காணப்படுவதால் 2025ஆம் ஆண்டும் 2024ஆம் ஆண்டைப்போல் ஒரு தேர்தல் ஆண்டாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. அவ்வாறான எதிர்பார்ப்பு நிலவக் காரணம், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காலங்களில் இந்த இரண்டு தேர்தல்களையும் நடத்துவோம் என்ற வாக்குறுதியை ஜனாதிபதி வழங்கியிருக்கின்றார். அவ்வாறு செய்யத் தவறினால் அரசாங்கம் அரசியல் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடலாம். இதற்கிடையில் தற்போது அத்தியாவசிய உணவுப் பொருட்களில் ஒன்றான அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்தத் தட்டுப்பாட்டை சமாளிக்க இறக்குமதிக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியும் உள்நாட்டில் அரிசித் தட்டுப்பாட்டை தீர்க்க சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

அத்துடன், நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் கிடைத்து பாராளுமன்றத்தில் 158 ஆசனங்கள் உள்ளன. இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நடைமுறையில் இருந்துவருகின்ற அரசியலமைப்பை மாற்றியமைத்து மூன்றாவது குடியரசு யாப்பை வரைய வேண்டும் என்பது அரசின் எதிர்பார்ப்பாகும். புதிய அரசியல் யாப்பு வரும்போது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்டு வெஸ்மினிஸ்டர் முறைமையிலான பாராளுமன்றத்துக்குப் பொறுப்பு சொல்லக்கூடிய பிரதமர் பதவியைக்கொண்ட பாராளுமன்ற நிர்வாக முறைமை ஏற்படுத்தப்பட திட்டமிடப்பட்டிருக்கின்றது. அதுவும் ஓரளவுக்காவது நிறைவேற்றிக் காரத்தைக்கொண்ட பிரதமர் பதவியாகும்.

இவ்வாறு பார்க்கின்றபோது மலர்ந்துள்ள 2025ஆம் ஆண்டு இந்த அரசுக்குப் பல வழிகளில் சோதனைகளும் சவால்களும் நிறைந்த ஆண்டாக அமையவிருக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை. மக்கள் நாளுக்கு நாள் எதிர்நோக்குகின்ற வாழ்க்கைச் செலவு உயர்வும் முக்கிய பிரச்சினையாக இருந்து வருகின்றது. மெய் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் பல குடும்பங்கள் பொருளாதாரக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றன. ஏற்கனவே வறுமையில் வாடும் 30 இலட்சம் குடும்பங்கள் அளவில் அஸ்வெசும நிவாரண உதவிகளைப் பெறுகின்றன. ஆனால், பாதிக்கப்பட்டிருப்பது நடுத்தர வகுப்பிலுள்ள குடும்பங்களாகும். ஆதலால் அரசின் கவனம் மற்றும் பெப்ரவரி மாதம் சமர்ப்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கின்ற வரவு-செலவுத் திட்டம் இத்தகைய பிரச்சினைகளுக்கு நிவாரணங்களை முன்வைப்பதாக அமைய வேண்டும்.

எப்படியோ ஒரு பலமான வெளிநாட்டுக் கொள்கை மற்றும் சர்வதேச உறவைக் கட்டியெழுப்புவதற்கான தந்திரோபாயங்கள் இந்தச் சவால்களை இலகுவாக வெற்றிகொள்ள கைகொடுக்கும் வழிமுறைகளாகும். அதேபோன்று உள்நாட்டில் முன்னெடுக்கப்படுகின்ற ஆக்கபூர்வமான செயற்திறன்கொண்ட அரசியல் வியூகங்கள், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் என்பன அரசாங்கம் எதிர்நோக்குகின்ற ஏனைய சவால்களை இலகுவாக வெற்றிகொள்ள கைகொடுக்கும் உபாய மார்க்கங்களாகும்.

எவ்வாறாயினும் அரசாங்கம் பதவிக்கு வந்து ஒரு வருட காலப் பகுதிக்குள் அனைத்தையும் சாதிக்க முடியாது. அதனால் மக்கள் மத்தியிலிருந்து முழுமையான அர்ப்பணிப்பும் ஆதரவும் ஒத்துழைப்பும் பலமானதாகத் தேவைப்படுகின்றது. இந்த அனைத்தும் ஒன்றாக இணைந்ததால் அரசியல் நெருக்கடிகள் எதுவும் இல்லாமல் நாட்டில் அமைதி, சமாதானம், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்பன பலமடைந்ததாக இருக்குமாயின், மலர்ந்துள்ள 2025ஆம் ஆண்டு புது வருடம் இந்நாட்டுக்கு சுபீட்சம் நிறைந்த ஆண்டாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. அதனூடாகவே கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத் திட்டமும் சாத்தியமானதாக அமையும்.

# வாரிசு அரசியலால் பா.ம.கவில் பூகம்பம்

## ராமதாஸ் பிடிவாதம்: அன்புமணி வெளிநடப்பு!

ரமணி

தமிழகத்தின் மிகப் பிரமாதமான சாதி கட்சியாக இருந்த பாட்டாளி மக்கள் கட்சி இன்று தேடுவாரற்ற கட்சியாக இருக்கிறது. கருணாநிதியும் ஜெயலலிதாவும் பாட்டாளி மக்கள் கட்சியுடன் தேர்தல் கூட்டணி வைப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தனர். முதலில் ராமதாஸை அழைத்துப் பேசி அவர் விரும்பிய தொகுதிகளைக் கொடுத்த பின்னரே மற்றைய கட்சிகளுடன் கூட்டணிப் பேச்சு வார்த்தை நடத்துவார்கள். அந்த நிலை இன்று இல்லை. ராமதாஸ் கேட்டதை எடப்பாடி கொடுப்பதில்லை. ராமதாஸுடன் கூட்டணி வைக்க ஸ்டாலின் விரும்பவில்லை.

ராமதாஸ், அன்புமணி ஆகிய இருவருக்குமிடையே நீறு பூத்த நெருப்பாக இருந்த மோதல் பகிரங்கமாகிவிட்டது.

விழுப்புரம் மாவட்டம், பட்டானூரில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் பா.ம.கவின் புத்தாண்டு சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனத் தலைவர் டாக்டர் ராமதாஸ், தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். அப்போது பொதுக்குழுக் கூட்டத்தில் டாக்டர் ராமதாஸ் பேசியபோது, முகுந்தன் என்பவரை மாநில இளைஞர் சங்கத் தலைவராக நியமிப்பதாக அறிவித்தார்.

அப்போது டாக்டர் ராமதாஸுக்கு அருகே அமர்ந்திருந்த அன்புமணி ராமதாஸ் குறுக்கிட்டு மைக்கை கையில் எடுத்து, "கட்சிக்கு வந்து 4 மாதங்களேயான முகுந்தனுக்குப் பதவியா? அவருக்கெல்லாம் என்ன அனுபவம் இருக்கிறது?" என மேடையிலேயே பகிரங்கமாக எதிர்த்துப் பேசியதால் பரபரப்பு ஏற்பட்டது.




இதனை சற்றும் எதிர்பார்க்காத டாக்டர் ராமதாஸ் ஆவேசமாகி, "இது நான் உருவாக்கிய கட்சி. இங்கு நான் சொல்வதைத்தான் எல்லோரும் கேட்க வேண்டும். நான் சொல்பவர்கள்தான் கட்சியில் இருக்கவேண்டும். நான் சொல்வதைக் கேட்கவில்லையென்றால் கட்சியை விட்டுப் போங்க" என்று கூறினார். இதனால் ஆத்திரமடைந்த டாக்டர் அன்புமணி மேடையிலேயே "நான் பனையூரில் கட்சி அலுவலகம் அமைத்துள்ளேன். விருப்பமுள்ளவர்கள் அங்கு வந்து என்னைச் சந்திக்கலாம்" என்று கூறி மைக்கை வீசிவிட்டு கோபத்துடன் மண்டபத்தை விட்டு வெளியேறினார்.

இந்தச் சம்பவம் கட்சி வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதன்பின்னர் திண்டிவனம், தைலாபுரம் தோட்டத்தில் பா.ம.க. நிறுவுனர் ராமதாஸை பா.ம.க. தலைவர் அன்புமணி கடந்த 29ஆம் திகதி நேரில் சந்தித்துப் பேசினார்.

இருவரும் ஒரே இடத்தில் இருந்தபோதும் அன்புமணியின் பக்கம் ராமதாஸ் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவருடைய கோபம் இன்னமும் தணியவில்லை.

அதன்பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அன்புமணி பேசுகையில், "பா.ம.க. ஒரு ஜனநாயக அமைப்பு. பா.ம.கவின் உட்கட்சிப் பிரச்சினை. பொதுக்குழுவில் காரசார விவாதம் நடப்பது சகஜமானது. எல்லாக் கட்சியிலும் நடப்பதுபோலத்தான் நடந்தது" - என்றார்.

இளைஞர் சங்கத் தலைவராக முகுந்தன் அறிவிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக செய்தியாளர்கள் திரும்பத் திரும்ப கேட்டதற்கு, "அது எங்களது உட்கட்சிப் பிரச்சினை. அதுகுறித்து நீங்கள் கவலைப்படத் தேவையில்லை" என்று மட்டும் கூறிவிட்டுக் கிளம்பினார் அன்புமணி ராமதாஸ்.

அதன்பின்னர், தாத்தா டாக்டர் ராமதாஸை தனது குடும்பத்தோடு போய் பார்த்த முகுந்தன், "தாத்தா எனக்கு இப்போது எந்தப் பொறுப்பும் வேண்டாம். மாமாவுக்கு (டாக்டர் அன்புமணி) ஆட்சேபனை இருப்பதால் நான் எந்தப் பொறுப்பையும் வகிக்க விரும்ப வில்லை. ஊடகப் பிரிவு பொறுப்பும் கூட வேண்டாம். வெறும் தொண்டனாக இருந்து கொள்கிறேன். சிறிது காலத்துக்குப் பிறகு நீங்கள் ஏதாவது பொறுப்பு கொடுத்தால் அதை ஏற்க நான் தயார். இப்போது எதுவும் வேண்டாம்" என்று கூறிவிட்டார்.



இந்நிலையில், பா.ம.க. இளைஞரணித் தலைவராக முகுந்தன் நியமிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் நிறுவுனர் ராமதாஸ் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். பா.ம.க. பொதுக்குழுவில் அறிவித்தபடி முகுந்தனிடம் நியமனக் கடிதத்தை வழங்கிவிட்டதாகவும் தற்போது அவர் தெரிவித்துள்ளார். மேலும் பொதுக்குழுவில் ஏற்பட்ட பிரச்சினை சரியாகி விட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி சேர ராமதாஸ் விரும்பினார். ஆனால், பாரதீய ஜனதாவின் பக்கம் அன்புமணி கையைக் காட்டினார். இதனால் இருவருக்கும் இடையே மனக்கசப்பு நீடித்தது. இருவரும் பெரிதுபடுத்தாமல் காலத்தைக் கடத்தினர். வாரிசு அரசியலென ஏனைய கட்சிகளைக் குற்றஞ்சாட்டிக்கொண்டு தனது வாரிசுக்கு முன்னுரிமை கொடுத்ததை அன்புமணி பகிரங்கமாகக் கண்டித்தார்.

வயது முதிர்வு காரணமாகக் கட்சியை அன்புமணியிடம் ஒப்படைத்துவிட்டு ராமதாஸ் ஒதுங்கினார். ராமதாஸைப்போன்று அன்புமணி சுறுசுறுப்பாகச் செயற்படவில்லை. அதிக அதிகாரங்கள் இருந்தும் அன்புமணியால் பெரியளவிலான வெற்றிகளைப் பெற முடியவில்லை.

டாக்டர் ராமதாஸ் இருந்தபோது கட்சி எப்படி ஆக்ரோஷமாக இருந்ததோ, அதே அளவிலான செயற்பாடுகள் அன்புமணி தலைமையில் இல்லை என்பது டாக்டர் ராமதாஸுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்ததாகத் தெரிகிறது.

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவராக இருந்துவந்த ஜி.கே.மணியை அந்தப் பொறுப்பிலிருந்து நீக்கி அவரை கௌரவத் தலைவராக மாற்றியபோதும் கூட கட்சிக்குள் முணுமுணுப்பு எழுந்தது. அன்புமணி ராமதாஸ் தலைவரான பிறகு பா.ம.க. அடுத்தடுத்து பல தோல்விகளைச் சந்தித்தது. கட்சியின் வாக்கு வங்கியும் சரிந்தது, தங்களைத் தேடி கூட்டணி கட்சிகள் வந்த நிலை மாறி, தாங்கள் வெற்றி பெற பெரிய கட்சிகளின் கூட்டணியைத் தேடிப் போக வேண்டிய நிலை உருவானது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி வைக்க ராமதாஸ் தொடர்ந்து வலியுறுத்தினார். ஆனால், பா.ஜ.க. பக்கம் போக வேண்டும் என்பதில் பிடிவாதமாக அன்புமணி இருந்தார். இவர்கள் இருவருக்கும் இடையேயான குழப்பம் காரணமாகத்தான் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் இணையப்போவதாக முடிவுசெய்து, தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை அனைத்தும் இறுதிசெய்யப்போகும் கட்டத்தில் கடைசி நிமிடத்தில் பா.ஜ.க. கூட்டணிக்கு, பா.ம.க. செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாக சொல்லப்படுகிறது.

பாரதீய ஜனதாக் கூட்டணிக்குச் சென்ற பிறகு எதிர்பார்த்தபடி பெரியளவில் முன்னேற்றம், பலன்கள் எதுவும் கட்சிக்கு ஏற்படாததால் டாக்டர் ராமதாஸ் கடும் அதிருப்தியடைந்தார்.

இந்த நிலையில்தான் எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணிக்கு திரும்ப ராமதாஸ் முடிவு செய்துள்ளதாகவும் இதற்கு அன்புமணி ராமதாஸ் ஒப்புக்கொள்ளாமல் போனதே இந்த மோதலுக்குக் காரணமென்றும் சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல, தற்போது ராமதாஸின் பேரனான முகுந்தனுக்கு கட்சியில் மாநில இளைஞரணித் தலைவர் பதவி கொடுத்தால் கட்சி மெல்ல மெல்ல முகுந்தனின் பக்கம் சென்றுவிடும். இதனால் அன்புமணியின் பதவிக்கு சிக்கல் ஏற்பட்டு விடலாம் என்பதனாலும் முகுந்தனை கட்சியில் முன்னிலைப்படுத்துவதை அன்புமணி விரும்பவில்லை.

தற்போது அடங்கியிருக்கும் தந்தைக்கும் மகனுக்குமான பிரச்சினை தேர்தல் நெருங்குகையில் பூகம்பமாக வெடித்துக் கிளம்பும் அபாயம் உள்ளது.

உமர் அலி உஸ்மான்

# 'கிளீன் ஸ்ரீ லங்கா' அநுர அரசுக்கு சாதகமா? சாபமா?

உலகம் பூராகவும் பல்வேறு நாடுகளிலும் பல்வேறு அரசியல் தளம்பல்கள், பொருளாதார நெருக்கடிகள், உள்நாட்டு யுத்தங்கள், மனித உரிமை மீறல்கள், நிலம், நீருக்கான சண்டைகள், ஆணவக் கொலைகள் எனப் பல்வேறு துயரங்களைத் தாங்கிக்கொண்டு உலகம் 2025 எனும் புத்தாண்டைச் சந்தித்திருக்கிறது. இந்தப் புத்தாண்டிலிருந்து இலங்கையும் தூய இலங்கை (Clean Sri lanaka) தேசிய வேலைத்திட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது.

சமூக மற்றும் சுற்றாடல் மாற்றத்தை ஏற்படுத்தி சிறந்த தூய்மையான நாட்டை உருவாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்படும் 'கிளீன் ஸ்ரீ லங்கா' வேலைத்திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் கடந்த புதன்கிழமை (01) ஜனாதிபதி செயலகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதேவேளை, 'கிளீன் ஸ்ரீ லங்கா' வேலைத்திட்டம் தெடர்பான இணையதளமும் cleansrilanka.gov.lk இதன்போது அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியில் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை என்பதால் 18 பேர்கொண்ட இந்தச் செயலணியில் ஒரு சிறுபான்மைப் பிரதிநிதியை கூட உள்ளடக்க முடியாதா எனக் கேள்விகள் தொடர்ந்தும் எழுப்பப்பட்டு வருகின்றன.

இந்தக் கேள்விகள் எழக் காரணம் 'கிளீன் ஸ்ரீ லங்கா' திட்டம் என்பது வெறுமனே நாட்டைச் சுத்தமாக்கும் திட்டம் மாத்திரமல்ல என்றும் அது ஒட்டுமொத்தமாக நாட்டு மக்களின் மனநிலை, அவர்களது கருத்துகள் மற்றும் எண்ணங்களை மாற்றும் திட்டமென ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் மேடைகளில் கூறியிருந்தார். இதனை அடிப்படையாகக்கொண்டு சிங்களம், தமிழ், முஸ்லிம் மற்றும் ஏனைய இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகள் இத்திட்டத்தில் உள்வாங்கப்படும் பட்சத்தில் இங்கு அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் பங்களிப்பு அவசியமென சமூக வலைத்தளங்களில் கருத்துகள் பகிரப்பட்டு வருகின்றன.

இந்த விடயங்களின் ஒரு முக்கிய அங்கமாக ஜனாதிபதி செயலணியில் சிறுபான்மையினர் இல்லை என்பது தொடர்பில் சிறுபான்மை அரசியலின் மூத்த அரசியல் தலைவர்களில் ஒருவரான முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வருத்தம் வெளியிட்டிருந்தார். 'கிளீன் ஸ்ரீ லங்கா' வேலைத்திட்டத்தை வரவேற்பதாகக் கூறிய ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, இவ்வாறான செயலணிகளில் இலங்கையின் பல்லினத்தன்மை அவசியமென வலியுறுத்தினார். கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியில் சிறுபான்மை இனத்தவர்களின் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லையெனச் சுட்டிக்காட்டி அவர் ஜனாதிபதிக்கு கடிதமும் எழுதியிருந்தார்.

ஜனாதிபதியால் அமைக்கப்பட்டுள்ள 18 பேர் அடங்கிய இக்குழுவில் சிறுபான்மை இன மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் யாரும் உள்ளடக்கப்படவில்லை யென்பது சிறுபான்மையின மக்களின் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டதுபோன்று குரல்கள் எழுந்த வண்ணமுள்ளன.

'கிளீன் ஸ்ரீ லங்கா' ஆணைக்குழுவில் தமிழ் பேசுபவர்கள் யாரும் இல்லையென இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் கூட தமது வருத்தமான கருத்தைப் பதிந்துள்ளார். இந்த விடயம் தொடர்பில் அவர், "பல்லின சமூகங்கள் உள்ள இலங்கையில் தமிழ் பேசும் சமூகத்தவர்கள் இடம்பெறாத நிலைப்பாடு குறித்த சமூகத்தவர் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறுதான் கடந்த பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் காலத்தில் கோட்டாபய ஜனாதிபதியால் அமைக்கப்பட்ட தொல்லியல் ஆணைக்குழு என்கின்ற தமிழ் பேசும் மக்களுக்குத் தொல்லைகள் கொடுத்த ஆணைக்குழுவிலும் தமிழ் பேசும் பிரதிநிதிகள் இடம்பெறவில்லை.

அந்த பொதுஜன பெரமுன அரசும் தொல்லியல் ஆணைக்குழுவும் இனமத அடிப்படைவாத அடிப்படையில்தான் அமைந்திருந்தது. அதன் செயற்பாடுகளான தொல்லியல் இடங்களை இனங்காணும் செயற்பாடுகள் மற்றும் பௌத்த விகாரைகளை அமைக்கும் செயற்பாடுகளும் அடிப்படைவாத செயற்பாடுகளாகவே இருந்தன. தற்போதைய தேசிய மக்கள் சக்தியால் அமைக்கப்பட்ட கிளீன் ஸ்ரீ லங்கா ஆணைக்குழுவில் தமிழ் பேசுனர் இடம்பெறாத நிலைமையும் சந்தேகத்தைத் தருகின்றன" என்றார்.

இந்த விடயமே இப்போது இலங்கையிலுள்ள தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் எண்ணமாக உள்ளது. 18 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் இந்த ஆணைக்குழுவில் அல்லது செயலணியில் தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் சார்பில் தலா ஒருவரையாவது நியமித்திருக்க வேண்டும். அதை நடைமுறைப்படுத்தாத இந்த அரசாங்கத்தின் திட்டங்கள் மீது மக்கள் சந்தேகம் கொள்வது நியாயமானதே.

இது விடயமாக எழுந்த குரலுக்கு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா பதவிக்கு சிறுபான்மை பிரதிநிதியொருவரின் பெயரைக் கூட பரிந்துரைக்காத ஐக்கிய மக்கள் சக்திக்கு கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தில் சிறுபான்மையினர் உள்வாங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு தகுதியில்லையென அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ பதிலளித்திருப்பது இந்தச் செயலணியில் சிறுபான்மைப் பிரதிநிதிகள் தவிர்க்கப்பட்டமைக்குப் போதியளவில் நியாயமான காரணங்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.

கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்காக 18 பேரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புப் படை உள்ளிட்ட துறையுடன் தொடர்புடையோர் அக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனவரியில் இக்குழுவின் சில வேலைத்திட்டங்கள் ஆரம்பமாகும். ஓரிரு மாதங்களுக்கு அல்லது ஒரு வருடத்துக்கு மாத்திரமன்றி ஜனாதிபதியின் கண்காணிப்பின்கீழ் நீண்டகால வேலைத்திட்டமாக இதனை முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

'கிளீன் ஸ்ரீ லங்கா' என்ற வேலைத்திட்டம் அனைத்து இலங்கையர் களுக்குமானது. எனவே, இதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் மதம் அல்லது இனங்களுக்கு முக்கியத்துவ மளிப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. அந்த அடிப்படையில் இதற்கான குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை. இந்த வேலைத் திட்டத்தில் எவருக்கும் இணைய முடியும். இந்த விடயத்தில் எதற்காக இனம் மற்றும் மதத்தை ஐக்கிய மக்கள் சக்தி முன்னிலைப்படுத்துகிறதென்பது எமக்குத் தெரியாது.

பாராளுமன்றத்தில் பிரதம கொறடாவாக சிறுபான்மை இனத்தவர் ஒருவரது பெயரைப் பரிந்துரைக்காத ஐக்கிய மக்கள் சக்தி எவ்வாறு அரசாங்கத்தின் மீது இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைக்க முடியும்? அக்கட்சிக்கு இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைக்க தகுதியில்லை என்று கூறியுள்ளார்.

அவரின் இந்தக் கூற்றின் மூலம் தமிழர், முஸ்லிம்கள், மலையக மக்கள் ஆகியோர் இலங்கையர்கள் இல்லையா என்ற கேள்வி அழுத்தமாக எழுகிறது. இதனொரு படி மேலே சென்று, "சிறுபான்மையின மக்கள், இரண்டாந்தரப் பிரஜைகள் என இந்நாட்டில் எவரும் இல்லை. அனைவரும் இலங்கையர்கள். அனைவருக்கும் சம உரிமைகள் உள்ளன. தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் சம உரிமையை மக்கள் உணரும் வகையில் ஏற்பாடுகள் இடம்பெறும்" என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்த கருத்தும் இங்கு சிறுபான்மை மக்கள் ஆழமாக சிந்திக்க வேண்டிய கருத்தாக அமைந்துள்ளது.






CLEAN SRI LANKA
SOCIALLY · ENVIRONMENTALLY · ETHICALLY

"இந்நாட்டில் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை அரசியல் சக்திகளே சீர்குலைத்துள்ளன. சிறுபான்மையினர், அவர்கள், இவர்கள் எனக் கூறும் சொல்லாடலையே நாம் நிறுத்த வேண்டும். நாம் அனைவரும் இலங்கைப் பிரஜைகள். தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் இந்நாட்டிலுள்ள எவருக்கும் இரண்டாந்தரப் பிரஜை என்ற உணர்வு, நிலை வராது. தமது இனம், மதம், மொழி, வாழும் பகுதி, பாலினம் மற்றும் கலாசாரம் என்பவற்றால் எவரும் இரண்டாந்தரப் பிரஜைகள் ஆகிவிட முடியாது. சம உரிமை என்பது பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கலாசா ரீதியாகவும் என அனைத்து வகையிலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வடக்கில் வாழும் சிங்கள மக்களுக்கோ அல்லது தெற்கில் வாழும் தமிழ் மக்களுக்கோ வேறுபாடு இருக்க முடியாது. இப்படியொரு நாட்டை உருவாக்க வேண்டுமெனில் இதுவரை காலமும் எமது நாட்டில் இந்தப் பிளவுகள் ஏற்படுத் தப்பட்டுள்ளன என்பதை ஏற்கவேண்டும். அவற்றை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். சம உரிமை யென்பது சொல்லளவில் மட்டும் இருந்து பயனில்லை. தமக்கு சம உரிமை கிடைக்கப் பெறுகின்றது என்பதை மக்கள் உணர வேண்டும்" – என்ற பிரதமரின் கருத்து நேரடியாக இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களின் மனங்களில் ஆழமான கேள்விகளை எழுப்பிக்கொண்டே இருக்கிறது.


The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka
EXTRAORDINARY
PART I : SECTION (I) — GENERAL
Proclamations & C., by the President
PRESIDENTIAL DIRECTIVE

அமைச்ச ரவையில்முஸ்லிம்கள் இல்லை. பிரதி அமைச்சுப் பதவிகளில் கூட உப்பு சப்பு இல்லாத ஒரு நிலை, அமைச்சு செயலாளர் நியமனத்தில் கூட பாரபட்சம், கிழக்கு ஆளுநர் பதவியில் பராமுகம், சபாநாயகர் நியமனத்தில் நடந்த விடயங்கள், கிழக்கு திணைக்களப் பதவிகளில் முஸ்லிம்களுக்கு அநியாயம் என்று பட்டியல் நீண்டுகொண்டே செல்லும் நிலையில் இப்போது 'கிளீன் ஸ்ரீ லங்கா'வும் இணைந்துள்ளது.

இந்த அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் நாம் இலங்கையர்கள் என்ற கொள்கையை முன்வைக்கிறார்கள். ஆனால், அந்த நாம் இலங்கையர்களில் தமிழர்கள், முஸ்லிம்கள் இல்லாது போவதுதான் வேடிக்கை. பரிதாபம்.

வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய நான்கு திசைகளையும் இணைத்து அனைத்து மக்களின் நம்பிக்கையையும் பெற்று 2024ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்க எம்மால் முடிந்தது. அதற்கிணங்க, மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த ஆட்சியொன்றை உருவாக்கும் நோக்கில் அன்றிருந்த அரசியல் கலாசாரத்தில் பாரிய மாற்றத்தை மேற்கொண்டு, மக்கள் ஆணையின் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் தற்போது துரிதமாக செயற்பட்டு வருகின்றோம் எனக் கூறும் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கத்தின் இலட்சணத்தையும் போக்கையும் நிலைக்கண்ணாடி முன் நிறுத்தி சுய பரிசோதனை செய்துகொள்ளவேண்டி இருக்கிறது.

கிராமிய வறுமையை ஒழித்தல் 'கிளீன் ஸ்ரீ லங்கா' (தூய இலங்கை) திட்டம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவை நாட்டின் முன்னணி அபிவிருத்தித் தேவைகளாக நாம் அடையாளம் கண்டுள்ளோம். அந்தப் பின்னணியில் சமூக சுற்றாடல் மற்றும் நெறிமுறை புத்தெழுச்சியின் ஊடாக சமூகத்தை மேலும் மேம்பட்ட நிலைக்கு உயர்த்தும் நோக்கில் "கிளீன் ஸ்ரீ லங்கா" வேலைத்திட்டம் புத்தாண்டு உதயத்துடன் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது எனக் கூறும் ஜனாதிபதி, அந்தத் திட்டம் முழுமையாக வெற்றிபெற தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளாரா என்ற கேள்விக்கும் பதில் தேட வேண்டியுள்ளது.

இந்தப் பரிமாற்ற ரீதியான அபிவிருத்திச் செயற்பாடுகளினூடாக நாடென்ற ரீதியில் 2024ஆம் ஆண்டில் நாம் அடைந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை மேலும் உறுதிப்படுத்த இருக்கிறோம். அனைவருக்கும் "வளமான நாடு – அழகான வாழ்வை" பெற்றுக்கொடுப்பதற்காக புதிய மனப்பாங்குகளை மேம்படுத்தி, புதிய உறுதிப்பாடுகளை மனதில் கொண்டு சகோதரத்துவத்துடன் முன்னோக்கி வருவதற்கு 2025 புதுவருட உதயத்துடன் சிறந்த வாய்ப்பு உருவாகியிருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன் என்ற ஜனாதிபதியின் நம்பிக்கை மீது வடக்கு, கிழக்கு, மலையகத்தில் ஓட்டை விழ தொடங்கியிருப்பதை அவர் அறிந்துகொள்ளும் நேரம் கனிந்துள்ளது.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் நேய அரசாங்கத்தை உருவாக்கி, அனைத்து மக்களும் ஒன்றிணைந்த அபிவிருத்தியடைந்த இலங்கை பற்றிய கனவை நனவாக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. விட்டுக்கொடுக்க முடியாத இந்தப் பாரிய பொறுப்பு நம் அனைவரின் தோள்களிலும் சுமத்தப் பட்டுள்ளது. அந்தப் பொறுப்பு குறித்து எங்களுக்கு நல்ல புரிதல் உள்ளது.

இந்த நூற்றாண்டில் தவறவிட்ட சாதனைகளை மீண்டும் நாட்டுக்கு வென்று கொடுக்கவும் மக்களின் கனவுகளை நனவாக்கவும் 2025ஆம் ஆண்டு புத்தாண்டில் மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் அர்ப்பணிக்க நடவடிக்கை எடுப்போம் என்ற ஜனாதிபதியின் கூற்று மெய்ப்பிக்கப்பட அவர்களின் வார்த்தைகளில் இருக்கும் சமூக நல்லிணக்கம் செயலிலும் மலர வேண்டியிருக்கிறது.

திசைகாட்டி மீதான சிறுபான்மையின மக்களின் நம்பிக்கை சரிய ஆரம்பித்திருப்பது இந்தப் புத்தாண்டின் முதல் செய்தி என்பதை ஜனாதிபதியும் அநுர அரசும் உணர வேண்டியிருக்கிறது.

இம்தியாஸ் ஹசன்

# போராட்டத்திலிருந்து வலிமைக்கு இலங்கை பயணிக்கவேண்டிய பாதை

"இந்தியப் பெருங்கடலின் முத்து" என்று அடிக்கடி வர்ணிக்கப்படும் தேசமான இலங்கைத் தீவு, சமீபத்திய தசாப் தங்களில் கொந்தளிப்பான காலங்களை எதிர்கொண்டுள்ளது. அரசியல் அமைதியின்மை, பொருளாதார நெருக் கடிகள் மற்றும் ஆழமாக வேரூன்றிய இனப் பதற்றங்கள் ஆகியவை அதன் முன்னேற்றத்துக்கு நீண்ட காலமாக தடையாக இருந்து வருகின்றன. எவ்வாறா யினும், நாட்டின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்ட அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையில் இலங்கை ஒரு புதிய பாதையை முன்னோக்கி நகரத் தொடங்கியுள்ளது.

**சவால்கள் நிறைந்த பாதை, ஆனால், வளர்ச்சி மற்றும் ஒற்றுமைக்கான மகத்தான வாய்ப்புகள்**

அநுரவின் அண்மைய இந்திய விஜயம் இலங்கையின் போராட்டத்திலிருந்து வலிமைக்கான பயணத்தில் ஒரு முக்கிய தருணத்தைக் குறிக்கிறது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விஜயமானது இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது மட்டுமன்றி, உலக அரங்கில் சீர்திருத்தம் மற்றும் மீள்திறன் கொண்ட இலங்கையின் திறனை வெளிப்படுத்த வலிகோலும் என்ற நம்பிக்கையும் பிறந்துள்ளது. இந்தப் புதிய தலைமையின் கீழ் இலங்கை எவ்வாறு மீட்சி, நல்லிணக்கம் மற்றும் நிலையான அபிவிருத்தியை நோக்கி தனது பாதையில் பயணிக்கிறது என்பதை ஆராய்வோம்.

**பொருளாதார மறுமலர்ச்சி: நெருக்கடியை நேருக்கு நேர் சமாளித்தல்**

பதவியேற்றதும் ஜனாதிபதி அநுரவின் முக்கியமான சவால்களில் ஒன்று இலங்கையின் மோசமான பொருளாதார நிலைமையாகும். பல ஆண்டுகளாக தவறான நிர்வாகம், இலஞ்சம், ஊழல், தேசிய வளங்களைக் கையாண்ட முறை, அதிகப்படியான கடன் மற்றும் கொவிட்-19 தொற்றுநோய் ஆகியவை நாட்டைச் சரிவின் விளிம்பில் கொண்டுசென்றன. பணவீக்கம் உயர்ந்தது. அடிப்படைப் பொருட்கள் பற்றாக்குறையாக இருந்தன.

அரசு நிறுவனங்களின் மீது மக்களின் நம்பிக்கை மிகக் குறைவாக இருந்தது. எவ்வாறாயினும், அநுரவின் நிர்வாகம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த உடனடி மற்றும் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராகி வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியம் (IMF) போன்ற சர்வதேச அமைப்புகளிடமிருந்து உதவியைப் பெறும் போது நாட்டின் கடனை மறுகட்டமைப்பதில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண் டும் என்ற விடயத்தில் கண்ணும் கருத்து மாக இருப்பதை தொடர்ந்து அறிவித்து வருகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கள் பெரும்பாலும் கடுமையான நிபந்தனை களுடன் வந்தாலும் அநுரவின் அரசாங்கம் இந்த நிதியைப் பயன்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறலை வலியுறுத்தி அவை மக்களுக்கு நேரடியாகப் பயனளிக்கும் என்பதை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

விவசாயம் மற்றும் சுற்றுலா போன்ற முக்கிய தொழில்களை புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. விவசாயிகளுக்கு மானியங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வழங்குவதன் மூலம், உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கிடையில், சுற்றுலாப் பிரசாரங்கள் இலங்கையின் வளமான கலாசார பாரம்பரியம், அழகிய கடற்கரைகள் மற்றும் தனித்துவமான வனவிலங்குகளை சர்வதேச பார்வையாளர்களை ஈர்ப்பதில் கவனஞ்செலுத்த தயாராகி வருகிறது.

**இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துதல்**

அநுரவின் அண்மைய இந்திய விஜயம் இலங்கையின் வெளியுறவுக்கொள்கையை மறு வரையறை செய்வதில் ஒரு முக்கியமான படியாகும். இலங்கையின் நெருங்கிய அண்டைநாடாகவும் நீண்டகால நட்பு நாடாகவுமுள்ள இந்தியா, பிராந்தியத்தின் புவிசார் அரசியலில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த விஜயத்தின்போது மின் உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் வர்த்தகம் ஆகியவற்றில் பரஸ்பர ஒத்துழைப்பை அநுர வலியுறுத்தியதாக அறிய முடிகிறது.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்களில் கையெழுத் திடப்பட்டுள்ளதா என்பது பற்றி தெளி வின்மை காணப்படுகின்றது. எட்கா ஒப்பந்தம் தொடர்பாக கலந்துரையா டப்பட்டுள்ளதாக ஊடக சந்திப்பின்போது வெளிநாட்டு அமைச்சர் கூறியிருந்தார். இது இரு நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கான படிகற்களாகப் பார்க்கப்படுகின்றபோதிலும் அநுரவின் அரசாங்கம் இவ்விடயத்தில் சற்றுத் தயக்கம் காட்டுகின்றது. மேலும், இந்த விஜயம் ஒரு கலாசார பரிணாமத்தையும் கொண்டிருந்தது. சுற்றுலா ஊக்குவிப்பு போன்ற முயற்சிகள் இரு நாடுகளுக்கு இடையேயான பிணைப்பை ஆழப்படுத்த முன்மொழியப்பட்டது.

**இன நல்லிணக்கம்: ஒற்றுமையை நோக்கி ஒரு படி**

இலங்கையின் வரலாறு இன மோதல்களால் - குறிப்பாக, சிங்களப் பெரும்பான்மையினருக்கும் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினருக்குமிடையில் சிதைந்துள்ளது. அநுரவின் நிர்வாகம் நல்லிணக்கத்தை தனது ஆளுகையின் அடிக்கல்லாக முதன்மைப்படுத்தியுள்ளது. சிறுபான்மைச் சமூகங்களின் குறைகளை உணர்ந்து, காணி உரிமைகள், அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் கலாசாரப் பாதுகாப்பு போன்ற நீண்டகால பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை ஸ்தாபித்து கடந்தகால அட்டூழி யங்கள் பற்றிய உண்மையை வெளிக் கொணர்வதையும் சமூகங்களிடையே குணப்படுத்துதலை வளர்ப்பதையும் முன்னிலைப்படுத்த தயாராக வேண்டும். வரலாற்று ரீதியாக ஒதுக்கப்பட்ட பிரதேசங்களில் குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கில் சமமான அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் கொள்கைகளையும் காலதாமதமின்றி அரசாங்கம் அறிமுகப்படுத்துவது அவசியமாகும்.

**சீர்திருத்த ஆளுகை: பொறுப்புக்கூறலின் புதிய சகாப்தம்**

இலங்கையின் அரசியல் நிலப்பரப்பில் ஊழலும் உறவுமுறை ஆட்சியும் நீண்டகாலமாக அரங்கேறிவந்தது. இதனால் நாடு பல பின்னடைவுகளைச் சந்தித்தது. அநுரவின் தலைமைத்துவம் பெரும்பாலும் இந்தத் தீமைகளைக் கலைந்து ஒரு வெளிப்படையான அரசாங்கத்தை ஸ்தாபிப்பதாக அளித்த வாக்குறுதியால் நாடு உந்தப்பட்டது. அரசாங்கம் பதவி யேற்றது முதல் சுதந்திரமான ஊழல் ஒழிப்பு, ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை செயற் படுத்தியுள்ளது. ஊழல் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் மீதான உயர் மட்ட விசாரணைகள், யாரும் சட்டத்துக் கப்பாற்பட்டவர்கள் அல்ல என்ற செய்தியை சொல்லியுள்ளது.

கூடுதலாக, அநுரவின் நிர்வாகம் அதி காரப் பரவலாக்கத்துக்கு முன்னுரிமை அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளூர் அரசாங்கங்கள் தங்கள் சமூகங் களின் தேவைகளுக்கேற்ப முடிவுகளை எடுக்க அதிகாரமளிக்கவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகும். இம்முயற்சி வெற்றியளிக்குமாயின் செயற்றிறனை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கையையும் அதிகரிக்கும்

**முன்னாலுள்ள சவால்கள்: சாலை எளிதானதல்ல**

இலங்கையின் பொருளாதார மீட்சியானது பலவீனமானது. மேலும் ஏற்ற இறக்கமான அத்தியாவசியப் பொருட்களின் விலை கள் மற்றும் எண்ணெய் விலைகள், வேலை யின்மை, இறக்குமதியில் தங்கியிருத்தல், ஏற்றுமதிக்கான உலக சந்தையிலுள்ள சவால்கள் இன்னும் புவிசார் அரசியல் பதற் றங்கள் போன்ற உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகள் நாட்டின் முன்னேற்றத்தைப் பாதிக்கலாம்.

மேலும், இனங்களுக்கிடையேயான நம்பிக்கைகளை உருவாக்கல் மற்றும் நிலையான ஒற்றுமையை அடைவதற்கான நேரம், பொறுமை மற்றும் தொடர்ச்சியான உரையாடல் போன்றவை மேற்கொள்ளாமை போன்றவையும் தாக்கத்தை ஏற்படுத்தும். அரசியல் எதிர்ப்பும் ஒரு குறிப்பிடத்தக்க தடையாகவுள்ளது. அநுரவின் நிர்வாகத்தின் கொள்கைகள் அதீத இலட்சியம் கொண் டவை என்றும் அவை நீண்ட காலத்துக்கு நிலையானதாக இருக்காது என்றும் அநுரவின் விமர்சகர்கள் வாதிடுகின்றனர். மக்களின் ஆதரவைப் பேணுகையில் இந்தக் கவலைகளைத் தீர்ப்பது அரசாங்கத்தின் வெற்றிக்கு முக்கியமானதாக இருக்கும்.

**குடிமக்களின் பங்கு: ஒரு கூட்டு முயற்சி**

இலங்கையை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கத்தால் மாத்திரம் முடியாது எனவும் நானொரு மந்திரவாதியல்ல என்றும் அநுர பல தடவைகள் வலியுறுத்தியுள்ளார். இந்த மாற்றமான பயணத்தில் குடிமக்கள் செயலில் பங்கு வகிக்க வேண்டும். சமூக அபிவிருத்தித் திட்டங்களில் பங்கேற் பதன் மூலமோ உள்ளூர் வர்த்தகங்களை ஆதரிப்பதன் மூலமோ அல்லது தலைவர் களை பொறுப்புக்கூற வைப்பதன் மூலமோ நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஒவ்வொரு இலங்கையருக்கும் பங்குண்டு. குடிமக்களை ஈடுபடுத்துவதற்காக அரசாங்கம் பல முன்முயற்சிகளைத் தொடங்கியுள்ளது. இதில் குடிமைப் பொறுப்பு குறித்த கல்விப் பிரசாரங்கள் மற்றும் கொள்கைகள் குறித்த பொதுக் கருத்துக்கான தளங்கள் ஆகியவை அடங்கும். இந்த முயற்சிகள் இலங்கையர்களிடையே ஒரு சிறந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றி ணைந்து செயற்படும்போது அவர்களுக்குள் உரிமை மற்றும் பெருமை உணர்வை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

முடிவாக ஒரு நம்பிக்கையான எதிர் காலம், போராட்டத்திலிருந்து வலிமைக் கான இலங்கையின் பயணம் வெகு தொலை வில் உள்ளது. ஆனால், அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையின் செயற்பாடு கள் நம்பிக்கையை அளிக்கிறது. பொருளாதார சவால்களை எதிர்கொள்வதன் மூலமும் நல்லிணக்கத்தை வளர்ப்பதன் மூலமும் நிர்வாகத்தை சீர்திருத்துவதன் மூலமும் நாடு பிரகாசமான எதிர்காலத்துக்கான அடித்தளத்தை அமைக்கும் என்பதை முழுமனதுடன் எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கியமான வளமான மற்றும் நிலையான இலங்கை பற்றிய அநுரவின் பார்வை, மாற்றத்துக்காக நீண்டகாலமாக ஏங்கிக்கொண்டிருக்கும் குடிமக்களுடன் எதிரொலிக்கிறது. தடைகள் எஞ்சியிருந்தாலும் அரசாங்கம் மற்றும் அதன் மக்களின் கூட்டு முயற்சிகள் இலங்கையை பிராந்தியத்தில் பின்னடைவு மற்றும் முன்னேற்றத்தின் கலங்கரை விளக்கமாக மாற்ற முடியும். இலங்கை முன்னோக்கிச் செல்லும்போது அதன் போராட்டங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் சந்தேகத்துக்கிடமின்றி வழிகாட்டும் வெளிச்சமாக இருக்கும். உறுதியும் ஒற்றுமையும் தொலைநோக்குப் பார்வையும் கொண்ட தலைமைத்துவத்தால் "இந்தியப் பெருங்கடலின் முத்து" மீண்டும் உலக அரங்கில் பிரகாசிக்க முடியும்.



# “தேசிய அபிவிருத்தியின் நன்மைகள் காணாத மலையகம்”



சந்தனம் சத்தியநாதன்

ஒரு நாட்டின் அபிவிருத்தியெனக் கருதப்படுவது யாதெனில், அந்நாட்டின் தேவைகள் அனைத்தும் முழுமையாக நிறைவடைந் திருப்பதுடன், அந்நாட்டின் மக்கள் பூரண சுதந்திரத்துடன் அவர்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள் என்பதாகும். அதாவது, நாட்டின் வாழ்வாதாரம், சுதந்திரம் மற்றும் சுயகௌரவம் என்பன அந்நாட்டின்



அபிவிருத்தி நிலையைத் தீர்மானிக்கின்றன என்பதை கருத்திற்கொள்ள முடியும். அபிவிருத்தி என்பதை இப்படியும் பார்க்கலாம். அதாவது, ‘நல்வளர்ச்சி’ என்பதையும் நாம் அபிவிருத்தியாக ஏற்றுக்கொள்ள முடியும்.

அபிவிருத்தி என்ற இந்தச் சொல்லுக்குப் பலரும் பலவிதமான வரைவிலக்கணங்களைக் கொடுத்துள்ளனர். அதனடிப்படையில் மக்கள் ஒருவரிடம் ஒருவர் நேசமுடன் பழகி தத்தம் கடமையில் ஈடுபட்டு தக்க கல்வியும் கொண்டு நாட்டுப்பற்றுடன் அதன் வளங்களைப் பாதுகாத்து முன்னேறிச் சென்று இனிமையாக வாழ்வது ஓர் அபிவிருத்தி நிலையை உணர்த்துகிறது.

அதேபோன்று அபிவிருத்தி என்பது அரசு என்ற இயந்திரத்துடன் தொடர்புடையதாகும். அப்படியென்றால் ‘அரசு’ என்பது எவ்வாறு உருவானது என்ற கேள்வி நமக்குத் தோன்றுகிறது. அரசு பற்றிய கோட்பாடு ஆளும் வர்க்கங்களுக்குச் சார்பானதாகவும் அத்தகைய வர்க்கங்களின் ஆட்சி உரிமையை நியாயப்படுத்துவதாகவும் இருந்து வந்துள்ளதைக் காணமுடிகிறது.

அரசு தனித்தன்மை வாய்ந்த ஒன்று என்றும் அது தெய்வீகத்துடன் தொடர் புடையது என்றும் மக்கள் அனைவரும் அதற்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்றும் பயபக்தியுடன் பரப்புரை செய்யப்பட்டு வந்துள்ளதையும் நாம் கண்டிருக்கின்றோம். மேலும், அரசு அனைத்து மக்களினதும் தேவைக்கும் நன்மைக்கும் உரிய நடுநிலையானதும் ‘நீதியை’ப் பாதுகாக்கும் தூய்மையான நிறுவன வடிவமென்றும் கருத்துருவக் கட்ட மைப்பு தொடர்ந்து பேணப்பட்டு வருகிறது.

ஆனால், அரசு நிறுவனத்தின் உள்ளார்ந்த ரீதியில் காணப்படும் அதன் பக்கச்சார்பையோ அல்லது அதன் பலாத்கார சாராம் சத்தையோ எவரும் கோட்பாட்டு ரீதியான கேள்விக்கு உட்படுத்தவில்லை. அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பாரிய கேள்வியை வரலாற்றில் முதற்றடவையாகக் கிளப்பி அதற்கு கோட்பாட்டு ரீதியாக உறுதிமிக்க பதிலை வழங்கியவர்கள் மகத்தான மேதைகளான கார்ள் மார்க்ஸும் பிரடெக் ஏங்கெல்ஸுமே. இவ்விரு மேதைகளும் விஞ்ஞான அடிப்படையிலான வரலாற்றுப் பொருள் முதல்வாத ஆய்வின் மூலமாக அரசு பற்றிய தெளிவான கோட்பாட்டை முன்வைத்தார்.

மனிதகுலத்தின் வரலாற்று வளர்ச்சியில் தனிச்சொத்துடைமையின் தோற்றம் மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வையும் வர்க்கங்களையும் உருவாக்கியது. இத்தகைய வர்க்கங்களிடையிலான முரண்பாடுகளும் போராட்டங்களும் உருவாகின. மனிதகுலத்தின் வரலாறு வர்க்கப் போராட்டங்களின் வரலாறாகின.

இந்த வர்க்க முரண்பாட்டுச் சூழலில் ஒரு வர்க்கம் மற்றைய வர்க்கத்தை அடக்கியாள வேண்டிய தேவை ஏற்பட்டது. அத்தேவையை நிறைவுசெய்வதற்கு ஒரு ‘கருவி’ தேவைப்பட்டது. அதுவே அரசு என்ற வடிவம் பெற்றது.

இதையே மார்க்சியக் கோட்பாடு ஒரு வர்க்கம் மற்றைய வர்க்கத்தை அடக்கி ஆளுவதற்கான கருவியே அரசு என்று நிறுவிக் காட்டியது. மேலும், அரசு வேறு அரசாங்கம் வேறானது என்பதையும் அரசு வடிவத்தின் பிரதான அங்கம் பலாத்காரம்தான் என்பதையும் அது ஆளப்படும் வர்க்கத்தினருக்கு எதிராக பயன்படுத்தப்பட்டு வருவதையும் மார்க்சிசக் கோட்பாடு தெளிவாகக் கோடிட்டுக் காட்டியது.

வர்க்கங்களற்ற புராதன பொதுவுடைமைச் சமுதாயத்தில் அரசாங்க இயந்திரம் இருக்கவில்லை. அப்பொழுது வர்க்கங்களற்ற சமுதாயம் இருந்தமையால் ஒரு வர்க்கத்தை வேறோர் வர்க்கம் அடக்கி வைத்திருப்பதற்கு அவசியம் ஏற்படவில்லை. அவ்வாறானால் ஒழுங்கு எவ்வாறு நிலைநாட்டப்பட்டது? ஒவ்வொரு பூர்வீகக்குடியும் தம்முள் ஒருவரைத் தலைவராக அல்லது முக்கியஸ்தராகத் தெரிவுசெய்தனர்.

பொதுவாக அவன் வேட்டையாடு வதற்கும் யுத்தத்துக்கும் அவர்களைத் தலைமைதாங்கும் உடல் வலிமை பெற்றவனாயிருந்தான். ஆனால், அவன் தனது அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு அவனிடம் அரசாங்க இயந்திரமான ஓர் இராணுவத்தையோ அல்லது பொலிஸ் படையையோ கொண்டிருக்கவில்லை.

சுயமாகவே மக்கள் அவனுக்குக் கீழ்ப்படிந்தனர். ஒவ்வொருவரும் அவனது சொல்லை ஏற்றுக்கொண்டனர். ஒரு பூர்வீகக்குடியில் தலைவனுக்குக் கிடைத்த மனப்பூர்வமான மரியாதையும் கீழ்ப்படிவும் முதலாளித்துவ சமுதாயத்தில்



எந்தவொரு சக்திவாய்ந்த தலைவனுக்கும் கிடைக்கவில்லை.

புராதன பொதுவுடைமைச் சமுதாயத் தின் காலகட்டத்தில் அரசாங்க இயந்திரத்தைச் சிறிதளவாவது ஒத்ததாக ஏதும் இருக்கவில்லையென்பது மிகவும் தெளிவாகின்றது. எதிர் எதிர் வர்க்கங்கள் ஒரு வர்க்கத்தை ஒரு வர்க்கம் தனக்குக் கீழ்க் கொண்டுவரும் நிலைக்கு வளர்ச்சியடையும்போதே ஓர் அடக்குமுறை அரசு இயந்திரத்தின் தேவை ஏற்படுகிறது. அவ்வாறான முதற் சமுதாயம் அடிமைச் சமுதாயமாகும்.

அதன் சிறந்த உதாரணங்களை கிரேக்கத் திலும் உரோம சாம்ராஜ்யத்தின் காலப் பகுதியிலும் காணலாம். இந்தச் சமுதாயம் அடிமையை வைத்திருப்போன் அடிமை என்ற எதிர் எதிர் வர்க்கங்களாகப் பிளவுபட்டிருந்தது. வல்லமைமிக்க உரோம சாம்ராஜ்யத்துக்கு எதிராக ஸ்பார்ட்டகஸ் தலைமை தாங்கிய மிகப் பிரபல்யம் வாய்ந்த கிளர்ச்சிகள் உட்பட பல அடிமைக் கிளர்ச்சிகளை இந்தச் சமுதாயம் கண்டது.

இக்கட்டத்தில் அடக்குமுறை இயந்திரம் பெரியளவில் வளர்ச்சியடையவில்லை. அடிமைகள் மிகக் கடுமையான கசையடி மூலமும் பிரமாண்டமான சுதந்திர மனிதர்களின் படையுடனும் கோரமாக அடக்கியாளப்பட்டனர். ஆனால், வர்க்க முரண்பாடுகள் கூர்மையடைந்து சமுதாயம் அடுத்தகட்டமான பிரபுத்துவத்துக்கு வளர்ச்சியடைந்ததும் மேலும் மோசமான அடக்குமுறை அரசு இயந்திரத்தின் தேவை உணரப்பட்டது.

நிலையான இராணுவம் தாபிக்கப் பட்டது. ஒரு நீதித் துறையும் சிறைச்சாலை களும் தோன்றின.

சிறிது சிறிதாக அரசு இயந்திரம் வளர்ந்து வர்க்க முரண்பாடு மிக உச்சக்கட்டத்தில் கூர்மையடைந்துள்ள முதலாளித்துவ சமுதாயத்தில் உயர் இராணுவமயமாக்கப்பட்ட இன்றைய அரசாங்கம் தோன்றியது.

இப்படியே உலக முதலாளித்துவம் தோன்றி இந்த செல்நெறிகை முதலாம் உலக யுத்தம் பின்னர் இரண்டாவது உலக யுத்தம் போன்றவை தோன்றி யுத்தம் காரணமாக பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட நாடுகள் இவைகளின் அபிவிருத்தியை மேம்பாடு செய்ய ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதிச் சபை போன்ற அமைப்புகள் தோன்றின.

இவ்வாறு இலங்கையை நாம் நோக்குமிடத்து இங்கு சிங்களவர், இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர், பறங்கியர்கள் போன்றோர் வசித்து வருகின்றபோதிலும் இன்றைக்கு 201 வருடங்கள் இலங்கையில் வசித்து வரும் மலையகத் தமிழ் இனத்தவர்கள் நாட்டில் எல்லாப் பாகங்களிலும் வசித்து வந்தாலும் அவர்கள் தேசிய அபிவிருத்தியின் பங்காளிகளாக மாறவில்லை. இன்னமும் மாற்றான் தாய் மனப்பான்மையோடே அவர்கள் நடத்தப்பட்டு வருகின்றனர்.

தேர்தல் காலங்களில் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டாலும் பின்னர் அவை யாவும் பொய் வாக்குறுதிகளாகவே போய்வி டுகின்றது. இதுநாள்வரை பெருந்தோட்ட மக்களுக்கு நிலம் சொந்தமில்லை. இன்றுவரை அவர்கள் பிரித்தானியர்கள் கட்டிக்கொடுத்த அந்த 201 வருட பழைமை வாய்ந்த லயன்களில்தான் வாழ்ந்து வருகின்றனர். மாறி மாறி வந்த அரசாங்கங்கள் இந்த மக்களை ஏமாற்றியே வந்துள்ளன. இந்திய அரசாங்கத்தால் குறிப்பிட்ட சில வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டபோதிலும் அவை போதுமானதாக இருக்கவில்லை.

உலகில் பல்வேறு மாற்றங்கள் வந்த வண்ணமே இருந்தாலும் மலையக மக்கள் இன்னும் தேசிய நீரோட்டத்தில் இணைக்கப்பட வில்லை. மலையக மக்கள் எப்போது தேசிய அபிவிருத்தியின் பங்காளர்களாக மாறுவார்கள்?

காலம்தான் பதில் சொல்ல வேண்டும்!

---

(10ஆம் பக்கத் தொடர்ச்சி....)

சம்பந்தனுக்கு விடுதலைப் புலிகளுடன் முழுமையான உடன்பாடு இல்லாதுவிட்டாலும் முரண்பட்டுக்கொள்ளாமல் சமரச அரசியலை மேற்கொண்டு தன்னைத் தக்க வைத்துக் கொண்டார். அதன் விளைவாகவே இப்பொழுது தமிழரசுக் கட்சி இன்றைய வளர்ச்சி நிலையை எட்டியது. ஆகவே, இன்றைய தமிழரசுக் கட்சி, சம்பந்தனுக்கே நன்றி சொல்ல வேண்டும். சம்பந்தனுக்கே கடமைப்பட்டுள்ளது.

ஏனென்றால், செல்வநாயகம், அமிர்தலிங்கம் போன்றோரால் கைப்பற்ற முடியாமல் அழிந்த நிலையிலிருந்த கட்சியை சம்பந்தன் மீளுயிர்க்க வைத்தார்.

ஆனாலும் சம்பந்தனுடைய காலத்தில் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓர் அங்கமாகவே இயங்க வேண்டியிருந்தது. முதற்காலட்டத்தில் விடுதலைப் புலிகளோடு நிபந்தனையற்று அனுசரிக்க வேண்டியிருந்தது. அதைச் சம்பந்தன் செய்தார். அதாவது புலிகளிடம் பணிந்திருந்தார்.

இரண்டாவது காலகட்டத்தில், கூட்டமைப்பில் இணைந்திருந்த முன்னாள் இயக்கங்களான ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ மற்றும் காங்கிரஸ் என்பவற்றையும் தனக்குக் கீழே வைத்திருந்தார். அவற்றின் மீது மேலாதிக்கம் செலுத்தி வந்தார். அதற்கு வாய்ப்பாக அவருக்குத் தமிழரசுக் கட்சியின் சின்னத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பயன்படுத்தி வந்திருந்தது.

இதை உடைத்து தமிழரசுக் கட்சியைப் பலவீனப்படுத்துவதற்கு அல்லது சமனிலைப்படுத்துவதற்கு ‘‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பதிவு செய்ய வேண்டும்’’ என்று பங்காளிக் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ ஆகியவை அழுத்தம் கொடுத்தன. அதற்கு முன்பு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நெருக்கடியைக் கொடுத்தது. ஆனால், சம்பந்தன் அதையெல்லாம் பொருட்படுத்தவேயில்லை. இதனால் காங்கிரஸ் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. ‘‘சம்பந்தனுடைய பிடிவாதத்தால் கூட்டமைப்பு உடைகிறது – தமிழரின் பலம் சிதைகிறது” என்ற குற்றச்சாட்டும் விமர்சனமும் பலமாக முன்வைக்கப்பட்டன. சம்பந்தன் இறங்கவேயில்லை. அதுமட்டுமல்ல, கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சியின் கையை அவர் மேலுயர்த்தியே வைத்திருந்தார். இதனால் ஏனைய பங்காளிக் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ ஆகியவை கூட்டமைப்பைப் பதிவுசெய்ய வேண்டும் என்று பிடிவாதமாகவே நின்றன. இறுதியில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வெளியேறியது. அப்போதும் சம்பந்தன் எந்த விட்டுக்கொடுப்புக்கும் செல்லவில்லை. பதிலாக தமிழரசுக் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டார்.

இது சம்பந்தன் மீதான விமர்சனங்களை மேலும் கடுமையாக்கியது. கூடவே சம்பந்தனுக்கு ஆதரவாகச் செயற்பட்ட சுமந்திரனையும் எதிர்நிலையில் நோக்க வைத்தது. அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சம்பந்தனும் சுமந்திரனும் உடைத்துவிட்டனர். தமிழர்களுடைய பலத்தைச் சிதைத்துவிட்டனர். தமிழ் மக்களுக்குத் துரோகமிழைத்து விட்டனர் என்ற விதமாக இப்போதும் அந்த விமர்சனம் உண்டு.

ஆனால், தமிழரசுக் கட்சியின் பலத்திலும் செல்வாக்கிலும்தான் பங்காளிக் கட்சிகளான ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ போன்றவை உயிர்வாழ்கின்றன எனச் சம்பந்தனும் சுமந்திரனும் மதிப்பிட்டனர். அதையே இன்று வரலாறு நிரூபித்துள்ளது. இப்பொழுது தமிழரசுக் கட்சிக்கு எட்டு ஆசனங்கள் கிடைத்துள்ளன. சம்பந்தன் காலமாகிவிட்டார். சுமந்திரன் வெற்றியடைவில்லை. ஆனாலும், தமிழரசுக் கட்சியின் முகமாக சுமந்திரனே உள்ளார். சிங்கள மக்களுக்கும் தென்னிலங்கைக்கும் மட்டுமல்ல, சர்வதேச சமூகத்துக்கும் தமிழரசுக் கட்சியென்றால் அது சுமந்திரனின் கட்சியென்றே தெரியும். இதைப் புரிந்துகொண்டபடியால்தான் கட்சியின் பேச்சாளராக சுமந்திரன் இருப்பார் என்று சிவஞானம் சொன்னது.

பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியைத் தவிர்த்து, காங்கிரஸுக்கு ஓர் ஆசனம். ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் புளொட்டும் அவுட். ரெலோவுக்கு அரும்பொட்டில் ஒரு சிறு வாய்ப்பு.

இன்றைய தமிழ்த் தேசியவாத அரசியலை தமிழரசுக் கட்சியோடும் ஏனைய தமிழ்த் தேசியவாதக் கட்சிகளோடும் மதிப்பிட்டால், தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸும் வெற்றியடைந்துள்ளன. அப்படியென்றால், இந்த மூத்த கட்சிகளைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கின்றனரா? அவற்றின் தவறுகள், போதாமைகளுக்கு மத்தியிலும் அந்தக் கட்சிகளின் அரசியல்தான் தமிழ் மக்களுடைய அரசியலா என்ற கேள்வி எழும்.

சுருக்கமாகப் பார்த்தால், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் அரசியல் போதாமைகளிலிருந்து (1950 இல்) உருவாகியதே இலங்கைத் தமிழரசுக் கட்சியாகும். தமிழரசுக் கட்சியின் போதாமையிலிருந்து உருவாகியதே (1972) தமிழர் விடுதலைக் கூட்டணி. அதனுடைய போதாமையிலிருந்தே உருவாகியவையே (1970களின் பிற்பகுதி) ஈழ விடுதலை இயக்கங்கள். அவற்றின் போதாமைகளிலிருந்து உருவாகியதே (2001) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இப்படியெல்லாம் நிகழ்ந்து வந்த வரலாற்று வளர்ச்சி, இப்பொழுது திரும்பி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிடமும் இலங்கைத் தமிழரசுக் கட்சியிடமும் சென்றிருக்கிறது என்றால், தமிழர்களின் அரசியலும் பின்னோக்கிச் சென்றுள்ளது என்றே அர்த்தமாகும்.

ஏனென்றால், முப்பது ஆண்டுகளுக்கு முன், தோற்றுப்போன அரசியல் சித்தாந்தத்துக்கு இன்னும் குறைந்தளவேனும் மதிப்பிருக்கிறது – செல்வாக்கிருக்கிறது என்றால், இதை வேறு எப்படிச் சொல்வது?

தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸும் 1970கள் வரையில் பிராந்திய அரசியலையே மேற்கொண்டன. பிராந்திய அரசியல் அதிகாரத்தையே கோரின. இப்பொழுதும் அவற்றின் நிலைப்பாடு அதுதான். அவற்றின் பெயரோ ‘அகில இலங்கை‘ என்ற அடையாளத்தையும் எண்ணக் கருவையும் சுட்டுவதாகும்.

‘‘ஒரு நாடு இரு தேசம்” என்று கூறும் தமிழ்க் காங்கிரஸ் (கஜேந்திரகுமார் பொன்னம்பலம்) “அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி”யின் உத்தியோக பூர்வமான தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாவார். அப்படித்தான் ‘இலங்கைத் தமிழரசுக் கட்சி”க்காரர்களும் இவர்கள் கொழும்பில் (மையத்தில்) உறவும் வடக்கு, கிழக்குப் பிராந்தியத்தில் எதிர்ப்புமாக தோற்றம் காட்டுவர்.

இந்த அடையாள முரணே அவற்றின் அரசியல் முரணுமாகும். இதனால்தான் அவற்றின் அரசியல் கடந்த காலத்தில் தோற்றுப்போனது. அதாவது, வடக்கு, கிழக்கில் வாக்குகளைப் பெற்றுக்கொள் வதற்காக பிராந்திய அரசியலை – தமிழ்த் தேசிய அரசியலை – பிரிவினைவாத அரசியலைத் தீவிரமாகக் கொதிநிலையில் பேசுவது. நடைமுறையில் கொழும்பு மையத்தோடு உறவைப் பேணுவது. இந்த இரட்டை நிலைப்பாடே அவற்றின் அரசியல் தோல்வியாகும்.

புலிகள் இருந்தபோது இவற்றைத் தமது கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருந்தனர். விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பிறகு, அந்த வெற்றிடத்தைப் பயன்படுத்தி, தம்மை மீண்டும் மீள்நிலைப்படுத்திக்கொண்டன இவை இரண்டும். அதனால்தான் இரண்டு கட்சிகளும் இப்போதும் உயிர்வாழ்கின்றன. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பிறகு எழுச்சியடைந்திருக்க வேண்டிய ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, ஈரோஸ் போன்றவற்றின் அரசியல் பலவீனமும் இதற்கப்பாலான புதிய அரசியல் தரப்புகளுடைய இயலாமைகளும் தமிழரசுக் கட்சியையும் தமிழ்க் காங்கிரஸையும் உயிரூட்டி வளர்த்துக்கொண்டேயிருக்கிறது.

ஒரு காலம் இந்தக் கட்சிகளால் பயனே இல்லை. இந்தக் கட்சிகள் மக்களுக்குத் துரோகமிழைத்துவிட்டன. இவற்றின் தலை வர்களை விட்டுவைக்கவே கூடாது என்று கடும்போக்கைப் பின்பற்றிய விடுதலைப் புலிகளும் ஏனைய இயக்கங்களும் பின்னர் இந்தக் கட்சிகளுடன் சமரசத்துக்குச் சென்றது வரலாற்றின் விசித்திரமும் சோகமு மாகும். இதில் இன்னும் சில படிகள் முன்னே சென்று தமிழரசுக் கட்சியே கதி என்ற நிலைக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ போன்றவை தள்ளப்பட் டுள்ளமை இன்னொரு துயரமாகும்.

இந்த வரலாற்றுப் பின்னணியில், விழுந்தும் சிதைந்தும் எழுந்து நிற்பது தமிழரசுக் கட்சியே. உண்மையில் இது தமிழ் மக்களின் இயலாமையும் தோல்வியும் பின்னடைவுமேயாகும். இந்தத் தோல்வியே அவர்களை போருக்கு முந்திய 1970களில் கொண்டுபோய் நிறுத்தியுள்ளது.

அப்படியென்றால், சமகாலச் சூழலுக்கு வருவதற்கு தமிழ் மக்கள் 55 ஆண்டுகாலம் முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். அதற்கிடையில் தாண்டவேண்டிய தடைகள் ஏராளம். அந்தத் தடைகளைத் தாண்டுவதற்கு இந்த ஓட்டைப் படகுகளும் உக்கிப்போன ஏணியும் பயன்தராது. ஆட்களை மாற்றுவதாலோ அடையாளத்தை மாற்றுவதாலோ பயனில்லை. பொருத்தமான அரசியல் நிலைப்பாட்டை எடுத்துச் சாத்தியப்படுத்துவதே பயனுடையதாகும். அது ஒரு போராட்டத்துக்குரிய வித்து.

நன்றி - தமிழ் பக்கம்

# துரிதமாக புனர்நிர்மாணமாகுமா கல்முனை கிட்டங்கிப் பாலம்?

றாசிக் நபாயிஸ்



அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் பெய்த பலத்த மழையால் தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டது. கல்முனை, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, பாண்டிருப்பு, மருதமுனை, துரைவந்தியமேடு, பெரியநீலாவணை, அண்ணாமலை மற்றும் கொலனி போன்ற பகுதிகள் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகின.

நாவிதன்வெளி பிரதேசத்தையும் கல்முனை தொகுதியையும்



இணைக்கும் கிட்டங்கி தாம்போதியில் வெள்ளப்பெருக்கால் பொதுமக்கள் பயணம் செய்யமுடியாது தடைப்பட்டது. இது வருடா வருடம் நடக்கும் ஒரு தொடர் செயற்பாடாக இருப்பது பெரும் கவலையை பிரதேச மக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ளதுடன், அதனை விரைவாக புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டுமென மக்கள் தங்களது ஆதங்கங்களை வெளிப்படுத்துகிறார்கள்.

கல்முனை நகரிலிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிட்டங்கி என்று அழைக்கப்படும் தாம்போதி இதுவரைக்கும் ஏராளமான உயிர்களைக் காவுகொண்டிருக்கிறது. இந்த வெள்ள அனர்த்தத்தால் கிட்டங்கி வீதியைக் கடக்க முயன்ற பாண்டிருப்பைச் சேர்ந்த ஒருவர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு சடலமாக மீட்கப்பட்டார் என்பது நாடறிந்த தகவலாக உள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இப்பாலம் இருந்து வருகின்றது. கல்முனை தொகுதியைச் சேர்ந்த மக்களுக்கு உரித்தான மேற்கண்டம், கீழ்க் கண்டம், வடநடுக்கண்டம் மற்றும் கொளனி கண்டங்களிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் சுமார் 5,000க்கும் அதிகமான நெற்காணி சடயந்தளாவ நீர்ப்பாசனத் திட்டத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இக்காணியிலிருந்து அறுவடை செய்யப்படும் விளைச்சல் பொருட்களும் கிட்டங்கி பாலத்தினூடாகவே உரிய பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

இப்படி கொண்டுவர முடியாவிட்டால் 15 கிலோமீற்றர் தூரத்தைச் சுற்றி சம்மாந்துறை ஊடாக கல்முனை தொகுதியைச் சேர்ந்த சாய்ந்தமருது, கல்முனைக்குடி, மருதமுனை, நற்பிட்டிமுனை மற்றும் சேனைக்குடியிருப்பு போன்ற கிராமங்களுக்கு விவசாய அறுவடை பொருட்களைக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். இதனால் காலநேர விரயமும் மேலதிக பணச் செலவும் ஏற்படும். கொளனி குடியேற்ற பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் மருதமுனை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு மற்றும் பெரியநீலாவணை போன்ற கிராமங்களிலிருந்து சென்று கல்வி கற்பிக்கும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அதேபோன்று நாவிதன்வெளி பிரதேசத்தில் கடமை புரியும் அரச ஊழியர்கள் மேலும் சவளக்கடை கமநல சேவை நிலையத்தில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் தமது கடமைகளுக்கும் விவசாய நிலங்களுக்கும் செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுகின்றது.

அந்த வகையில் கிழக்கு மாகாணத்திலுள்ள பெரும் வாவிகளில் கல்முனை கிட்டங்கி வாவியும் ஒன்றாகும். இது அம்பாறை மாவட்டத்தில் கல்முனை தேர்தல் தொகுதியிலுள்ள சேனைக்குடியிருப்பு கிராமத்தையும் சம்மாந்துறை தொகுதியிலுள்ள சவளக்கடை கிராமத்தையும் இணைக்கும் இடத்தைக் குறுக்கறுத்து 400 அடி பரப்பில் சென்று பட்டிப்பாளை ஆற்றில் விழுகின்றது.

> கிழக்கு மாகாணத்திலுள்ள பெரும் வாவிகளில் கல்முனை கிட்டங்கி வாவியும் ஒன்றாகும். இது அம்பாறை மாவட்டத்தில் கல்முனை தேர்தல் தொகுதியிலுள்ள சேனைக்குடியிருப்பு கிராமத்தையும் சம்மாந்துறை தொகுதியிலுள்ள சவளக்கடை கிராமத்தையும் இணைக்கும் இடத்தைக் குறுக்கறுத்து 400 அடி பரப்பில் சென்று பட்டிப்பாளை ஆற்றில் விழுகின்றது.

அக்காலந்தொட்டு கிட்டங்கி வாவிக்கு மேலாக பாலம் போடாத காரணத்தால் இப்பிரதேச மக்கள் பலதரப்பட்ட போக்குவரத்துக் கஷ்டங்களை அனுபவித்து வந்துள்ளதுடன், அவசர தேவைகளுக்கு தோணி, வள்ளம் போன்றவற்றைப் பாவித்து மக்கள் கிட்டங்கி வாவிகளைக் கடந்து சென்றார்கள்.

1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் கல்முனைத் தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த எம்.சி.அஹமதுவின் பெருமுயற்சியால் கிட்டங்கி பாலம் முதல் தடவையாக 100 மீற்றர் தூரத்துக்கு அமைக்கப்பட்டது. இறுதியாக சுமார் 10 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. 1991ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தால் இப்பாலத்தில் உடைவு ஏற்பட்டபோது அக்காலப்பகுதியில் வர்த்தக, வாணிபத் துறை அமைச்சராக இருந்த ஏ.ஆர்.மன்சூர் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து புனர்நிர்மாணம் செய்வதற்கு உதவினார்.

இதனைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப், பிரதி அமைச்சர் மர்ஹூம் யூ.எல்.எம்.முகைதீன், முன்னாள் அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப் ஆகியோர் காலத்துக்குக் காலம் பெய்து வந்த பெரும் மழையால் ஏற்படும் வெள்ளப்பெருக்கு காரணமாக கிட்டங்கி தாம்போதி சேதமடைந்து போக்குவரத்து தடைப்பட்டு மக்கள் கஷ்டப்படும் சந்தர்ப்பங்களிலெல்லாம் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து புனரமைப்புச் செய்ய உதவினார்களே தவிர, கிட்டங்கி வாவிக்கு மேலாக நிரந்தரமான பாலத்தை அமைப்பதற்கு அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் , சிங்கள, தமிழ் அரசியல்வாதிகள் எவரும் ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ளாது இருந்துவந்தமை கவலையளிக்கின்றது.

2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெய்த பெரும் மழையால் கிட்டங்கி பாலத்தின் ஊடாக வாகனங்களும் மக்களும் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி இப்பாலத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடுசெய்து மக்கள் பிரச்சினையின்றி போக்குவரத்து செய்வதற்கு உதவி புரியுமாறு அப்போதைய நெடுஞ்சாலை அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவுக்கு முன்னாள் கல்முனை பிரதேச சபை உறுப்பினர் ஏ. அப்துல் கபூர் எழுதிய கடிதத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இக்கோரிக்கையை கவனத்தில் எடுத்துக்கொண்ட அமைச்சர் அதாவுல்லாவின் முயற்சியால் கிட்டங்கி பாலம் கட்டுவதற்குத் தேவையான உபகரணங்கள் கொண்டுவரப்பட்டு கிட்டங்கிப் பாதை இருமருங்கிலும் அடுக்கி நீண்ட காலமாக வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த இடத்தில் வைக்கப் பட்டிருந்த உபகரணங்கள் மற்றும் பொருட்களும் வேலைகள் ஆரம்பிக்கப்படாத நிலையில் சில மாதங்களுக்குப் பின் மாயமாக மறைந்து விட்டது.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தில் வெளிநாட்டு உதவியுடன் நாடுபூராவும் 222 பாலங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. இதில் கிழக்கு மாகாணத்தில் நவோதய வேலைத் திட்டத்தின்கீழ் 20 பாலங்கள் நிர்மாணிக்கப்படுவதற்காக முடிவெடுக்கப்பட்டு அவற்றின் ஒன்றாக கல்முனை கிட்டங்கி வாவிக்கு மேலாக 300 அடி நீளமான பாலம் 30 கோடி ரூபா செலவில் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அப்போது ஏற்றுமதி ஊக்குவிப்பு அமைச்சராக இருந்த (மர்ஹூம்) எம்.எச்.சேகு இஸ்ஸதீனின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பெருந்தெருக்கள் அமைச்சராக இருந்த ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கொள்கையளவில் கிட்டங்கி பாலத்தைப் புனரமைக்க தீர்மானித்திருந்தார். இருந்த போதிலும் அது கைகூடவில்லை.

2007.11.26ஆம் திகதி காலப்பகுதியில் வீதி அபிவிருத்தி பிரதி அமைச்சராக இருந்த எம்.எச்.சேகு இஸ்ஸதீன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உயரதிகாரிகள் சகிதம் கிட்டங்கி வாவியைப் பார்வையிட வருகை தந்திருந்தார். அப்போது நாவிதன்வெளி பிரதேச செயலாளராக இருந்த வீ. கோபாலரத்தினம் இக்குழுவினரை வரவேற்று கிட்டங்கி பாலத்தைக் காண்பித்தார்.


இதன்பின்னர் நெக்கோட் அமைப்பின் உயரதிகாரிகள் கொண்ட குழுவினர் இப்பாலத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து பார்வையிட்டபோதிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கலையரசன் நாவிதன்வெளி கிராமத்திலேயே வசித்து வந்தவர். தினசரி கிட்டங்கி பாலத்தைக் கடந்து கல்முனை பிரதேசத்துக்கும் நாவிதன்வெளி கிராமத்துக்கும் சென்று வந்தவர். இவரை நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாய அமைப்புகளின் உறுப்பினர்கள் சந்தித்துக் கிட்டங்கி பாலம் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியதன் அவசியத்தையும் கரவாகுவட்டை வடிச்சல் பிரச்சினைகளையும் எடுத்துக்கூறப்பட்ட போது அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் வாக்களித்திருந்தார்.

கடந்த காலங்களில் கல்முனை, சம்மாந்துறை தொகுதி மக்களுக்கு மட்டும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்த இக்கிட்டங்கி போக்குவரத்துப் பாதை இன்று அம்பாறை மாவட்ட சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய மூவின மக்களின் விவசாய உற்பத்திப் பொருட்களை ஏற்றி இறக்கும் பிரதான தரைவழிப் பாதையாக விளங்குகிறது.

இலங்கையின் மொத்த நெல் உற்பத்தியில் 16 வீதமான பங்கை அம்பாறை மாவட்ட விவசாயிகள் உற்பத்தி செய்து நாட்டுக்குப் பங்களிப்புச் செய்து வருகின்றார்கள். இவர்களுடைய விவசாய தேவைகளையும் போக்குவரத்துப் பிரச்சினைகளையும் இந்த நாட்டின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் பெரும்பான்மையான ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த தற்போதைய ஜனாதிபதியும் அரசாங்கமும் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளும் கிட்டங்கி பாலத்தின் அவசியத்தை முன்னுரிமைப்படுத்தி புனர்நிர்மாணம் செய்ய உரியவர்கள் முன்வரவேண்டும்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 49



### இடமிருந்து வலம்

01. சிறு காப்பியம்.
02. விஷ்ணுவின் ஓர் அவதாரம் (குழம்பியுள்ளது).
08. வெளியிடம்.
09. திறவுகோலைக் குறிக்கும். (குழம்பியுள்ளது).
11. குள்ளனிலும் சற்று உயரமானவன்.
12. சில்லு (குழம்பியுள்ளது) ஓரெழுத்து இல்லை.
13. காதல் (குழம்பியுள்ளது).
21. கஞ்சியை ஒத்த சொல்.
23. சகதி.

### மேலிருந்து கீழ்

01. மன வைரம்.
02. கிளை ஒத்த சொல்.
03. சுழற்சி(குழம்பியுள்ளது).
05. வீட்டின் பின்புறம்.
09. சுரங்கம்.
11. தலை ஒத்த சொல்.
14. பிடிவாதம்.
15. தன்மை (குழம்பியுள்ளது).
16. மாலுமி.
17. பெற்றுக்கொள் என்பது பொருள்.
18. தெளியச் செய்தல் எனலாம்.
19. பிடுங்கி நடும் பயிர்.


### கீழிருந்து மேல்

06. கோயிலுக்கு அளிக்கும் கொடை (குழம்பியுள்ளது).
07. ஒவ்வாதது.
10. நவமணிகளுள் ஒன்று. (குழம்பியுள்ளது).

### வலமிருந்து இடம்

04. நெருக்கம் என்பர்.
06. இது இல்லாப் பண்டம் குப்பையிலே என்பது பழமொழி. (குழம்பியுள்ளது).
14. அளவுமுறை.
19. பெயர் என்பதை ஒத்த சொல். (குழம்பியுள்ளது).
20. சட்டை. ஓரெழுத்து இல்லை.
22. கைகொட்டிப் பாடி ஆடுதல்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 48க்கான விடைகள்



மூளைக்கு வேலை பகுதியில் தரப்படுகின்ற ஆக்கங்களுக்கான சரியான விடைகளை thamilanweekly@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி அனுப்பலாம்.

# 2025இல் எதிர்பார்க்கப்படும் திரைப்படங்கள்



இந்த ஆண்டு முன்னணி ஹீரோக்களின் பெரும் பட்ஜெட் படங்கள் ரசிகர்களுக்கு அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன.

**விடாமுயற்சி, குட் பேட் அக்லி:** கடந்த வருடம் அஜித்குமார் நடித்து ஒரு படம் கூட வெளியாகாத நிலையில், இந்த வருடம் அதற்கும் சேர்த்து 2 படங்கள் வெளியாகின்றன.

'விடா முயற்சி'யை மகிழ் திருமேனியும் 'குட் பேட் அக்லி'யை ஆதிக் ரவிச்சந்திரனும் இயக்கியுள்ளனர். பொங்கலுக்கு வெளியாவதாக இருந்த 'விடாமுயற்சி' தள்ளிப் போயிருக்கிறது.

**கேம் சேஞ்சர்:** ஷங்கர் இயக்கத்தில் ராம் சரண் ஹீரோவாக நடித்துள்ள படம். கியாரா அத்வானி, எஸ்.ஜே.சூர்யா, ஜெயராம், சுனில், அஞ்சலி என பலர் நடித்துள்ளனர். இந்தப் படத்தின் 5 பாடல்களுக்கு மட்டும் ரூ.75 கோடி செலவழித்திருப்பதாகச் சொல்கிறார்கள். 'விஷுவல் ட்ரீட்'டுக்கு நூறு சதவிகிதம் உத்தரவாதம் என்கிறது படக்குழு. எதிர்வரும் 10ஆம் திகதி வெளியாகிறது.






**இந்தியன் 3:** ஷங்கரின் 'இந்தியன் 2' ஏமாற்றத்தைத் தந்த பிறகு வருகிறது 'இந்தியன் 3'. இதில் கமல்ஹாசனுக்கு இருக்கும் பிளாஷ்க் பேக் காட்சி 'கூஸ்பம்ப்' உணர்வைத் தரும் என்கிறார்கள், இன்டஸ்ட்ரியில்.

**வணங்கான்:** பாலா இயக்கத்தில் சூர்யா நடித்துத் தொடங்கப்பட்ட படம். அவர் திடீரென விலகிக்கொள்ள, அருண் விஜய் நடித்து, எதிர்வரும் 10ஆம் திகதி வெளியாகிறது. நீண்ட இடைவேளைக்குப் பிறகு வரும் பாலா படம் என்பதால் அதிக எதிர்பார்ப்பு இருக்கிறது.





**கூலி:** லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிக்கும் படம். சத்யராஜ், ஆமிர்கான், நாகார்ஜுனா, உபேந்திரா, சவுபின் சாஹிர், ஸ்ருதிஹாசன் என 'ஸ்டார் காஸ்ட்'டே மிரட்டுகிறது. வெளியான டீஸர் ஏகப்பட்ட எதிர்பார்ப்பைக் கிளப்பியிருப்பதால், லோகேஷின் திரைக்கதை ட்ரீட்மென்ட்டுக்கு ஆவலுடன் காத்திருக்கிறார்கள் ரஜினி ரசிகர்கள்.




**தக் லைஃப்:** 'நாயகன்' படத்துக்குப் பிறகு மணிரத்னமும் கமல்ஹாசனும் இணையும் படம். கமல் மகனாக சிம்பு நடித்திருக்கிறார் என்கிறார்கள். த்ரிஷா, ஜோஜு ஜோர்ஜ், அபிராமி, ஐஸ்வர்யா லட்சுமி என பலர் நடித்துள்ளனர். ஜூன் 5இல் வெளியாகும் இந்தப் படத்துக்கு இசையமைக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான்.

**விஜய் 69:** 'தி கோட்' படத்துக்குப் பிறகு அரசியலுக்கு வந்துவிட்ட விஜய்யின் கடைசிப் படம் என்கிறார்கள் இதை. ஹெச்.வினோத் இயக்குகிறார். படத்திலும் அரசியல் கருத்துகள் அமோகமாக இருக்கிறது என்கிறது கோலிவுட். நாயகி பூஜா ஹெக்டே, வில்லனாக இந்தி நடிகர் பாபி தியோல் என பரபரப்பைக் கிளப்பியிருக்கிறது. பூஜை வீடியோ.


**ரெட்ரோ, சூர்யா 45:** 'கங்குவா' ஏமாற்றத்தைத் தந்தாலும் இந்த வருடம் வெளியாக இருக்கும் கார்த்திக் சுப்புராஜின் 'ரெட்ரோ' அதிக நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது சூர்யாவுக்கு. படத்தின் டீஸருக்கு எக்கச்சக்க வரவேற்பு என்பதால் 'ரெட்ரோ'வுக்கு எதிர்பார்ப்பு இருக்கிறது. அடுத்து ஆர்ஜே பாலாஜி இயக்கத்தில் அவர் நடிக்கும் 'சூர்யா 45'உம் இந்த வருட எதிர்பார்ப்பு லிஸ்ட்டில் இருக்கிறது.



**வீர தீர சூரன், சீயான் 63:** அருண்குமார் இயக்கத்தில் விக்ரம், சுராஜ் வெஞ்சரமூடு, துஷாரா விஜயன் மற்றும் பலர் நடிக்கும் படம். ஆக்ஷனுடன் வெளியான முன்னோட்ட வீடியோ எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியிருக்கிறது. இதையடுத்து மடோன் அஸ்வின் இயக்கும் படத்தில் நடிக்கிறார் விக்ரம். 'சீயான் 63' என தற்காலிகத் தலைப்பு வைக்கப்பட்டுள்ள இந்தப் படம். இந்த வருட இறுதியில் வெளியாகும் என்று தெரிகிறது.

**எஸ்கே 23:** ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிக்கும் படம். ருக்மணி வசந்த், வித்யூத் ஜாம்வல், பிஜுமேனன் என பலர் நடிக்கின்றனர். அனிருத் இசை அமைக்கும் இந்தப் படத்தை லட்சுமி மூவிஸ் தயாரிக்கிறது. 'அமரன்' மெகா ஹிட்டுக்கு பிறகு சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியாக இருக்கும் படம் என்பதால் இதற்கு எதிர்பார்ப்பு இருக்கிறது.

**குபேரா, இட்லிகடை:** தனுஷின் பான் இந்தியா படம், 'குபேரா'. சேகர் கம்முலா இயக்கியிருக்கும் இந்தப் படத்தில் ராஷ்மிகா மந்தனா, நாகார்ஜுனா மற்றும் பலர் நடித்துள்ளனர். தனுஷ் இயக்கி நடிக்கும் அடுத்த படம் 'இட்லி கடை'. இதில் நித்யா மேனன், ஷாலினி பாண்டே நாயகிகளாகவும் அருண் விஜய் வில்லனாகவும் நடிக்கின்றனர்.




ஏப்.10-ம் திகதி வெளியாகும் என அறிவித்திருக்கிறது படக்குழு.

**சிம்பு:** 'தக் லைஃப்' படத்தில் கமல்ஹாசனுடன் நடிக்கும் சிம்பு, அடுத்து தேசிங் பெரியசாமி இயக்கும் படத்தில் நடிக்கிறார். மெகா பட்ஜெட்டில் உருவாகும் இந்தப் படம் பீரியட் கதையை கொண்டது என்கிறார்கள்.

**டிரெய்ன், ஏஸ்:** விஜய் சேதுபதி நடித்து கடந்த வருடம் வெளியான 'மகாராஜா' சூப்பர் ஹிட்டானதால் அவர் நடிப்பில் இந்த வருடம் வெளியாகும் 'டிரெய்ன்', 'ஏஸ்' படங்களுக்கும் எதிர்பார்ப்பிருக்கிறது.

**காதலிக்க நேரமில்லை, ஜீனி:** ஜெயம் ரவி நடிப்பில் கிருத்திகா உதயநிதி இயக்கியுள்ள 'காதலிக்க நேரமில்லை' வித்தியாசமான காதல் கதையைக்கொண்ட படம் என்கிறார்கள். அவர் நடிப்பில் மெகா பட்ஜெட்டில் உருவாகும் படம், 'ஜீனி'. இந்த வருடம் இந்த இரண்டு படங்களும் எதிர்பார்ப்புப் பட்டியலில் இருக்கின்றன.




**வா வாத்தியாரே, சர்தார் 2:** நலன் குமரசாமி இயக்கத்தில் கார்த்தி நடித்துள்ள 'வா வாத்தியாரே', மித்ரன் இயக்கத்தில் நடித்துவரும் 'சர்தார் 2' படங்கள் இந்த வருட எதிர்பார்ப்பு லிஸ்ட்டில் இருக்கிறது.

இதெல்லாம் டொப் ஹீரோ படங்களுக்கான எதிர்பார்ப்பென்றாலும் எந்த எதிர்பார்ப்பும் இன்றி 'லப்பர் பந்து' போல அமைதியாக வந்து கொண்டாடப்படும் படங்கள் ஒவ்வொரு வருடமும் வந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்த வருடமும் அப்படி சில படங்கள் வரலாம் என்கிறார்கள் கோலிவுட்காரர்கள்.




## 'உசுரே' பெர்ஸ்ட் லுக் வெளியீடு

நடிகர் டீஜே அருணாச்சலம் நடித்துள்ள 'உசுரே' படத்தின் பெர்ஸ்ட் லுக்கை இயக்குநர் லோகேஷ் கனகராஜ் வெளியிட்டுள்ளார்.

பாடராக அறிமுகமாகி, பல அல்பங்களில் நடித்து பிரபலமானவர் டீஜே அருணாச்சலம். தமிழ்ச் சினிமாவில் நடிகராக அடியெடுத்து வைத்துள்ள இவரது முதல் படமான 'அசுரன்' படத்துக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்புக் கிடைத்தது. நடிகை ஆண்ட்ரியாவுடன் இணைந்து பாட்டு பாடியுள்ளார். சிம்புவின் பத்து தல படத்திலும் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

தற்போது அறிமுக இயக்குநர் நவீன் டி கோபால் இயக்கியுள்ள 'உசுரே' படத்தில் நடித்துள்ளார். ஸ்ரீ கிருஷ்ணா புரடக்சன்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தில் பிக்பொஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்டதன்மூலம் பிரபல்யமான நடிகை ஜனனி நாயகியாக நடித்துள்ளார்.

இயக்குநர் லோகேஷ் கனராஜ் தனது எக்ஸ் பக்கத்தில் இந்தப் படத்தின் முதல் பார்வை போஸ்டரை வெளியிட்டு படக்குழுவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இயக்குநர் லோகேஷ் தற்போது 'கூலி' படத்தை இயக்கி வருகிறார்.




## காதல் குறித்து மனம் திறந்த கீர்த்தி சுரேஷ்



நடிகை கீர்த்தி சுரேஷ் தனது நீண்டநாள் காதலரான ஆண்டனி தட்டிலை கடந்த வருடம் கோவாவில் வைத்து திருமணம் செய்துகொண்டார். திருமணத்தை முடித்த கையோடு 'பேபி ஜான்' படத்தின் ப்ரோமோஷனில் மும்முரமாக ஈடுபட்டார்.



ஆண்டனியைப் பொறுத்தவரை கொச்சி, சென்னை, டுபாய் உள்ளிட்ட பல இடங்களில் வெற்றிகரமான தொழிலதிபராக வலம் வந்துகொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் அவர் அளித்த பேட்டியொன்றில் தனது காதல் அனுபவம் குறித்து மனம் திறந்து பேசியிருக்கிறார்.

இந்நிலையில், கீர்த்தி சுரேஷ் சமீபத்தில் அளித்த பேட்டியொன்றில், "நாங்கள் இரண்டு பேரும் முதன்முறையாக ஆர்குட்டில்தான் பேச ஆரம்பித்தோம். ஒரு மாதம் பேசியிருப்போம் என்று நினைக்கிறேன். பிறகு ரெஸ்டூரண்ட் ஒன்றில் முதலில் சந்தித்தோம். அப்போதும் நான் எனது குடும்பத்தினருடன் இருந்ததால் ஆண்டனியிடம் பேச முடியவில்லை. பிறகு ஒரு நாள் உனக்கு தைரியம் இருந்தால் எனக்கு புரோபோஸ் செய் என்று கூறினேன். 2010ஆம் ஆண்டு என்னிடம் அவர் காதலை சொன்னார். 2016இல் தீவிரமாக காதலிக்க ஆரம்பித்தோம்.

அவர் அந்த சமயத்தில் எனக்குக் கொடுத்த மோதிரத்தை இன்றுவரை நான் கழற்றவில்லை. அது என்னுடைய திருமணத்திலும் இருந்தது. நாங்கள் முதலில் வீட்டை விட்டு ஓடிப்போக நினைத்தோம். நான் 12ஆவது படித்தபோது அவர் கட்டாரில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். ஆறு வருடங்கள் நாங்கள் தூரமாக இருந்தே காதலித்து வந்தோம். எங்களை ரொம்பவே நெருக்கமாக்கியதென்றால் கொரோனா காலகட்டம்தான்.

என்னுடைய காதல் குறித்து யாருக்கும் தெரியாது. என்னுடைய நெருங்கிய நண்பர்களுக்கு மட்டும் தெரியும். மேலும் நடிப்புத் துறையில் சமந்தா, ஜெகதீஷ் (ஆரம்பத்தில் இருந்தே என்னுடன் பயணித்து வருகிறார்), அட்லீ, ப்ரியா, கல்யாணி, ஐஸ்வர்யா லெஷ்மி, விஜய் சார் என வெகுசிலருக்கு மட்டுமே தெரியும். 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் எங்களின் திருமணத்துக்குத் திட்டமிட்டோம்.

எங்கள் காதல் விவகாரம் முன்பே வெளிவரும் என்று நான் நினைத்தேன். ஆனால், நாங்கள் எப்படியோ சமாளித்துவிட்டோம். நாங்கள் இருவரும் எங்கள் தனிப்பட்ட விஷயங்களை முடிந்தவரை தனிப்பட்ட முறையில் வைத்திருக்க விரும்புகிறோம்.

2017ஆம் ஆண்டு ஜெகதீஷ் எங்களை பாங்கொக் அழைத்துச் சென்றதுதான் எங்கள் முதல் வெளிநாட்டுப் பயணம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் முதல் முறையாக தனிப்பயணம் சென்றோம்'' - என்றார்.

## வெண்ணிற ஆடை நிர்மலா!





ஸ்ரீதர் தயாரித்த 'வெண்ணிற ஆடை' திரைப்படத்தின் மூலம் ஜெயலலிதா, ஸ்ரீகாந்த், மூர்த்தி, நிர்மலா போன்றோரை தமிழில் அறிமுகப்படுத்தினார்.

இப்படத்தில் அறிமுகமானவர்களில் இருவரின் பெயர்கள் மட்டும் இப்படத்தின் பெயரோடு ரசிகர்கள் அழைத்தனர். வெண்ணிற ஆடை மூர்த்தி, வெண்ணிற ஆடை நிர்மலா. இவ்வர்ணப்படத்தின் மூலம் அறிமுகமான நிர்மலா பல நடிகர்களுடன் அதிக படங்களில் நடித்துள்ளார். இவர் நடித்த படங்களில் 'பூவா தலையா?', 'அன்புச் சகோதரர்கள்', 'பத்துமாத பந்தம்', 'எடுப்பார் கை பிள்ளை', 'நீதி தேவன்', 'பாபு', 'வெகுளிப்பெண்', 'அன்புக்கோர் அண்ணன்' போன்ற படங்கள் சில.

இவர் எம்.ஜி.ஆருடன் முதன் முதலில் 1968ஆம் ஆண்டு நடித்த 'ரகசியப் பொலிஸ் 115' என்ற படத்தில் துணை நடிகையாக – கவர்ச்சியாக நடித்திருந்தார். ஹிந்தியில் வெளிவந்த 'தோரஹா' (அவள்) என்ற படம் தயாரிக்கப்பட்டது. இப்படத்தில் வெண்ணிற ஆடை நிர்மலா படுவிரசமாக நடித்தார். இதைக் கேள்விப்பட்ட எம்.ஜி.ஆர். நிர்மலாவை அழைத்து இப்படியாக நடிக்கக் கூடாது என அறிவுரை வழங்கினார்.

1975ஆம் ஆண்டுகளில் வெளிவந்த 'நாளை நமதே', 'இதயக்கனி' போன்ற படங்களில் ஒருசில காட்சிகளில் தோற்றினார். 1976ஆம் ஆண்டு வெளிவந்த 'ஊருக்கு உழைப்பவன்' படத்தில் எம்.ஜி.ஆர். இரு வேடங்களில் நடித்தார். எம்.ஜி.ஆருடன் இணை ஜோடியாக வாணிஸ்ரீயும் மற்ற பாத்திரத்துக்கு வெண்ணிற ஆடை நிர்மலாவும் சேர்ந்து இரு கதாநாயகிகள் நடித்தார்கள்.

தொடர்ந்து 1977ஆம் ஆண்டுகளில் வெளிவந்த எம்.ஜி.ஆரின் 'இன்றுபோல் என்றும் வாழ்க', 'மீனவ நண்பன்' போன்ற படங்களில் தோன்றி நடித்தார் வெண்ணிற ஆடை நிர்மலா. சிவாஜி நடித்த 'தங்கச் சுரங்கம்' (1969), 'எங்க மாமா' (1970), 'தங்கைக்காக' (1971) போன்ற படங்களில் நடித்திருந்தார். 1979இல் வெளிவந்த 'குரு' படத்தில் கமல்ஹாசனின் தாயாராக நடித்தார்.

**கலாபூஷணம்**
**கல்லொளுவை பாரிஸ்**

# என் தாயைத் திட்டாதீர்

எப்பசிக்கு பலியானாளோ
என்னையொன்றும் கேளாதீர்
ஏமாந்து போனாளே பாவம் அவள்
வீண் சொல்லால் குத்தாதீர்.

என்னையவள் வெறுத்திருந்தால்
ஈரைந்து மாதங்கள் சுமந்திருப்பாளா
இடுப்பு வலி பொறுத்திருப்பாளா
உண்ண வாந்தி எடுத்திருப்பாளா.

ஊரார் தூற்ற சகித்திருப்பாளா
உள்ளம் புண்பட அழுதிருப்பாளா
கருவறையில் நானிருக்கையில்
கலைத்திருப்பாளே - அவளை
ஒருபோதும் திட்டாதீர்.



பச்சைப் பழந்துணியால் போத்தி எனை
குப்பைத் தொட்டியில் வைக்கையில்
நெஞ்சோடு அணைத்திருப்பாள்
தொட்டுத் தொட்டுப் பார்த்திருப்பாள்
கொஞ்சிக் கொஞ்சி அழுதிருப்பாள்.

திரும்பித் திரும்பி பார்த்தபடி
இறைவனிடம் கொடுத்துவிட்டு
விம்மி விம்மி அழுதபடி
என்னைவிட்டுப் போயிருப்பாள்.

இன்றும் எனை நினைத்தபடி
எங்கோ இருந்துகொண்டு
எனைப் பிரிந்த வேதனையில்
துடிதுடியாய் துடித்திருப்பாள்.

எந்தன் விதி இதுவென்றால்
அவளின் மீது குற்றமில்லை
என் தாயென்றானவளை
இழித்துப் பழித்துப் பேசாதீர்.

- இம்தியாஸ் -

# நான் பிறந்துவிட்டேன் – 2025

நான் பிறந்துவிட்டேன்
பழையவர் இறந்து விட்டார்
சிலருக்கு என்னில் சந்தேகம்
சிலருக்கோ அளவு கடந்த சந்தோஷம்.

முன்னையவர் போல இனி
வருபவரும் நல்லவரோ
இல்லை – கெட்டவரோ
சமயச் சடங்குகளை என்னில்
நடத்த உத்தேசம்.

பலதையும் திறந்தனர்
வேறு பல தொடங்கினர்
குறிப்பாக என்னையே நம்பி
எதிர்பார்த்திருந்தனராம்.

நான் வந்தபோது அமோக வரவேற்பு
வெடியென்ன, வாணவேடிக்கை வேறு
மேளதாளங்கள் என்ன
சங்கு சக்கரங்கள் வேறு

புத்தாடை அணிந்தனர்
புதுப்பொங்கல் செய்தனர் - ஏன்
எனக்கும்தான் படைத்தனர்
குதூகலித்தனர்
நான் வேறுயாருமல்ல.

உங்களை வாழவைக்கப் பிறந்த
ஐந்தே நாட்கள் கொண்ட
வருடம் – 2025

ரூபி - கல்கிஸை

# கல்வி

கற்று விடுங்கள்
பெற்று விடுங்கள்
கற்பது யாருக்கு
சிறப்பாகிடப் போகிறது.
உம்மை உதாசினமா?
செய்திடும் கல்வி ...

பொறுமையோடு
கற்றுக்கொள்ள
பெருமை படுமளவில்
உன்னை உயர்த்திடுமே ...

இன்று; நீ நின்று நிதானித்து
கற்பது தான்
நாளை; உன்னை உயர்த்தி
நிலைநிறுத்தும்...

இளமை துடிப்பில்
விடலை கூத்தில்
காதலென வீழ்ந்து
சிதையாதே மாணவா..!

நாளொன்றும் பெறுமதி
உணர்ந்திடு
மீண்டும் வருமா கடந்த நாள் தான் ...

உணர்ந்தால் உருப்படியாய்
நீ நாளை பயன்படுத்தி
கொள்வாயல்லவா ....

உணர்ந்து உன்னை நீ
நிலையேற்ற உன்னில்
கல்வியை ஏற்று ..

பெற்றவர்களை போற்றி
கற்றவைகளை
மற்றவர்களுக்கும் கற்று
கொடுத்தால் நீயும் நிலைத்து
வாழ்வாயே ...

சஹ்னாஸ் பேகம்,
முதலைப்பாளி,
புத்தளம்.


# இலட்சியம்

எட்டிப் பார்க்கும் சூரியன்
சில நாட்களாகவே குளிரில் போர்வை
போர்த்தி, உறங்கி பழக்கப்பட்டதால்
என்னவோ
சூரியனை காணவில்லை - இருந்தும்
ஒளிக்கீற்று மட்டும்
ஆசுவாசப் படுத்துகிறது.

என் சிந்தனைகளும் இலட்சியங்களும்
போர்வையை வாடகையெடுத்தாற் போல்
உறங்கி கிடந்த என்னையும்
ஒரு நெருப்பு, ஒரு பிரகாசமான ஒளிக்கீற்று
இனி ஒருபோதும் உறங்காமல்,
உறங்கினாலும் கண் விழிக்கும்போது.

இலட்சியங்களை
நாளுக்கு நாள் முன்னேற்றங்களை
தந்து போகும் சூரியனை விடாது
துரத்திக் கொண்டிருப்பேன்
எது வரையோ அது வரை.

ஷிவ்ரா பாரூக்,
நாச்சியாதீவு.



# மண் வீடு

நினைவின் ஓரத்தில் நின்று
நாள்களை கட்டிப் பிடித்த
நாளொன்றின் வரலாறு அது.

சிரமத்தின் துளி துளியால்
சிக்கனத்தின் கரம் தொடுதலில்
பண்டைய கலைகள் வாழ்ந்தது
மண் வீடு என்ற கவிதை வழியாக.

மண் வாசனையில் நிறைந்த
மரங்களின் துணைவேல்
நெருப்பின் மணம் கொண்ட
அடுப்படி கதைகள்.

தெருவோர அம்மா கைகள்
தாயின் அரிசித் தூள் நுணைகள்
தண்ணீரின் சுகத்தோடு
வாழ்வின் இயல்பு ஓரமாகும்.

காற்றின் உறவோடு சுவாசிக்க
வெயிலின் கொடுமையைக் கடக்க
மண்ணின் குளிர்ச்சியோடு
மண் வீடு அருமை பேசும்.

சிவப்புச் சுவரின் சிற்பம்
இயற்கையின் இசையாய்
இன்று மாறிவிட்டாலும்
மண் வீடு – மரபின் நினைவாய் நிற்கும்!

கவிஞர் த.ரூபன்,
ஈச்சிலம்பற்று,
திருகோணமலை.

## தூறல்கள்


# 237 கோடியில் ஒரு செருப்பு



அமெரிக்க நடிகையும் பாடகியுமான ஜூடி கார்லன்ட், 1939ஆம் ஆண்டில் ‘தி விசார்ட் ஒவ் ஓஸ்’ படத்தில் நடித்தார். அப்போது விதவிதமான செருப்புகளை அணிந்திருந்தார். அதில் ஒன்று மாணிக்கக்கற்கள் பதிக்கப்பட்ட ரூபி செருப்பாகும். இந்தச் செருப்பு மின்னசோட்டா அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. அப்போது இந்தச் செருப்பு திருட்டுப் போய் பின்னர் மீட்கப்பட்டது. இதைத்தொடர்ந்து அமெரிக்காவில் சமீபத்தில் இந்தச் செருப்பு ஏலம் விடப்பட்டது. அதில், பலரும் மிரளும் வகையில் சுமார் 237 கோடி ரூபாவுக்கு இந்தச் செருப்பு ஏலம் போனது. இதன்மூலம், திரையுலக நினைவுச் சின்னங்களில் அதிக விலைக்குப் போன செருப்பு என்கிற பெயரையும் இது பெற்றுள்ளது.




# என் வழி தனி வழி



1999ஆம் ஆண்டு வெளியான படையப்பா படத்தில் வில்லியாக வரும் ரம்யா கிருஷ்ணனிடம் சவால் விடும்போது, ரஜினிகாந்த் ஸ்டைலாக பேசும் "என் வழி தனி" என்ற ‘பஞ்ச்’ டயலொக் மிகவும் பிரபலம்.

இதே ‘பஞ்ச்’ டயலொக்கை 24 ஆண்டுகளுக்கு முன்னரே எம்.ஜி.ஆர். பேசியிருக்கிறார். இது பலருக்கும் ஆச்சரியமாக இருக்கலாம்; ஆனால், உண்மை.

1975இல் வெளியான ‘நாளை நமதே’ படத்தில் ஒரு காட்சியில் வில்லன் நம்பியாரின் மகன் கோபத்தில் எம்.ஜி.ஆரைத் தாக்கி விடுவான். பதிலுக்கு "நான் கொடுத்துத்தான் பழக்கம்; வாங்கி பழக்கம் இல்லை"என்று கூறியபடி அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு குத்துவிடுவார். பின்னர் தந்தையையும் மகனையும் அலட்சியமாகப் பார்த்தபடி, "என் வழியே தனி வழி" என்று கிளம்புவார்.


இதே வசனத்தை பின்னர் ரஜினியும் பேசியது ஆச்சரியமான ஒன்றுதான்...

# ஒரு வாரத்தில் மாற்றம்

**பெண்மணி:** டாக்டர்! என் கணவர் நல்லாத்தான் இருந்தார். இந்த ஒரு வாரத்தில் அவருக்கு என்ன நேர்ந்ததுன்னு தெரியலே. நீங்கதான் வந்து அவரைக் குணப்படுத்தணும்.

**டாக்டர்:** என்ன நடந்ததுன்னு விளக்கமாகச் சொல்லுங்கள்.

**பெண்மணி:** டாக்டர்! திங்கட்கிழமை என் கணவருக்கு அரிசிப் புட்டு செய்து வைத்தேன். மேலும் மேலும் கேட்டு விரும்பிச் சாப்பிட்டார். செவ்வாய்க்கிழமையும் அதையே சமைத்து வைத்தேன். விருப்பத்துடன் சாப்பிட்டார். புதன்கிழமையும் அதையே செய்தேன். ஏதும் பேசாமல் சாப்பிட்டார். வியாழக்கிழமையும் அதையே செய்தேன். முணுமுணுத்துக் கொண்டே சாப்பிட்டார். வெள்ளிக்கிழமையும் அதையே செய்தேன். வெறுப்புடன் சாப்பிட்டார். சனிக்கிழமையும் அதையே செய்தேன். "இன்றைக்கும் அதே அரிசிப் புட்டா?" என்று என்னைத் திட்டிக்கொண்டே எழுந்தார். ஏதும் சாப்பிடவில்லை. இப்பொழுது அவருக்கு அரிசிப் புட்டு பிடிக்கவே இல்லை. இந்த ஒரு வாரத்தில் அவருக்கு என்ன நேர்ந்தது என்று தெரியவில்லை.





# பால் கெடாதிருக்க உதவிய தவளை

பால் கெட்டுப்போகாமல் இருக்க என்ன செய்வோம். குளிர்சாதனப்பெட்டிக்குள் வைப்போம். அல்லது நீண்ட நாட்கள் கெடாமல் இருக்கக்கூடிய பாலை வாங்கி வைப்போம். இந்த வசதிகள் ஏதும் இல்லாத காலத்தில் பால் கெட்டுப்போகாமல் இருக்க ரஷ்யர்கள் பின்பற்றிய ஒரு வழக்கம் இணையத்தில் வைரலானது.

ரஷ்யாவின் சீதோஷண நிலை குளிர்ச்சியாக இருந்தாலும் அறை வெப்பநிலையில் பாலை நீண்ட நாட்கள் கெடாமல் பாதுகாப்பது சவாலாக இருந்துள்ளது. இதற்குத் தீர்வாக, ‘ரானா டெம்போரேரியா’ (Rana temporaria) என்ற ஒருவகை தவளையைப் பிடித்து, தண்ணீர் ஊற்றி கழுவி சுத்தம் செய்து, பாலில் போட்டு விடுவார்களாம். அந்தத் தவளை ஒரு வாரம் பாலில் நீந்திக்கொண்டே இருக்குமாம். அவ்வப்போது ஓய்வெடுக்க அதை வெளியே எடுத்து கண்ணாடி ஜாடியில் போட்டு வைப்பார்களாம். இப்படி தவளையை பாலில் போட்டு நீந்தச் செய்வதால், எத்தனை நாட்கள் ஆனாலும் பால் கெடாது என்று நம்பினர் ரஷ்யர்கள். இதுபற்றி ரஷ்யா நாட்டுப்புறக் கதைகள் சொல்லப்பட்டுள்ளதாம்.

நவீன காலத்தில் இந்த நடைமுறையை ரஷ்யர்கள் பின்பற்றுவதில்லையென்றாலும், 2012ஆம் ஆண்டு ரஷ்யாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சிலர் தவளையைப் பிடித்து பாலில் நீந்தச் செய்து சோதனை செய்தார்கள். அப்போது அவர்கள் ஆச்சரியப்படும் விதத்தில் பால் கெட்டுப்போகாமல் இருந்துள்ளது. இதன் பின்னணியை ஆய்வுசெய்தபோது, தவளையின் உடலில் உற்பத்தியாகும் ஒருவகையான திரவம், பாலில் வளரும் பக்றீரியாக்களை அழிக்கும் தன்மை கொண்டதாக இருந்ததும் தவளையின் குளிர்ச்சியான உடல் அமைப்பு, பாலை எப்போதும் பிரஷ்ஷாக வைத்திருக்க உதவுகிறது என்பதும் தெரியவந்ததாம்.

ஆச்சரியமா இருக்குதல்ல?

# பீதியாக்கிய செல்போன் பேச்சு!



**சலூனில் ஷேவிங் செய்துகொள்ளச் சென்றிருந்தேன். கடைக்காரர் ஷேவ் செய்துகொண்டிருந்தபோது அவரது செல்போனுக்கு அழைப்பு வந்தது. செல்போனை காதில் வைத்தவர், அது கீழே விழுந்துவிடாதபடி தோளை முட்டுக்கொடுத்து ஒருபக்கமாக சாய்ந்தபடியே பேசினார். அப்படியே ஷேவிங் செய்யத் தொடங்கினார். நானோ பீதியில் அமர்ந்திருந்தேன். உடனே பேசி முடித்துவிடுவார் என்று பார்த்தால் தொடர்ந்து சிரித்தபடி பேசிக்கொண்டிருந்தார்.**

**ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த நான், "கையில் கத்தியை வைத்துக்கொண்டு இப்படி போன் பேசுவது சரியில்லை. போன் பேசி முடிச்சுட்டு அதுக்கப்புறம் ஷேவிங் செய்யுங்க. நான் அதுவரைக்கும் காத்திருக்கிறேன்" என்று கூறினேன்.**

**தன் தவறை உணர்ந்த அவர் உடனடியாக போனை கட் செய்து விட்டு ஷேவிங் செய்யத் தொடங்கினார். ஷேவிங், கட்டிங் போன்ற வேலைகளில் ஈடுபடுபவர்கள் வேலை நேரத்தில் செல்போன் பேசுவதை தவிர்ப்பது இரு தரப்புக்குமே நல்லது.**

# 1 மணி நேரம் தூக்கம் கோடி இழப்பீடு



அலுவலகத்தில் தன்னையும் அறியாமல் கண்ணயர்வது இயல்புதான். அப்படித்தான் சீனாவின் ஜியாங்சு மாகாணத்திலுள்ள இரசாயன நிறுவனமொன்றில் 20 ஆண்டுகளாக வேலை பார்த்துவந்த ஜாங்குக்கும் ஒரு நாள் தூக்கம் கண்ணைக் கட்டியது. தனது மேசையில் சாய்ந்து ஒரு மணிநேரம் தூங்கி விட்டார். இதை சிசிரிவி கெமராவில் பார்த்த நிறுவன உரிமையாளர், ஜாங்கை உடனே பணிநீக்கம் செய்திருக்கிறார்.

இதனால் அப்செட்டான ஜாங், "20 ஆண்டுகள் இந்த நிறுவனத்துக்காக இரவு பகல் பாராமல் உழைத்திருக்கிறேன். ஒரு மணிநேரம் தூங்கியதற்காக பணிநீக்கம் செய்து மன உளைச்சலுக்கு ஆளாக்கிவிட்டனர்" என்று கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த கோர்ட், "அவரது பணிக்காலத்தை கருத்திற்கொள்ளாமல் நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கை கொடுமையானது. அவருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும்" என்று அதிரடி தீர்ப்பு வழங்கியது. இழப்பீடு தொகை இலங்கை ரூபாமதிப்பில் எவ்வளவு தெரியுமா? ஒரு கோடி ரூபா.



# விமானிகள் அவசர சூழல்களில் எப்படி முடிவெடுப்பார்கள்?

"வேகமாகவும் அதேசமயம் பதற்றமின்றியும் முடிவுகளை எடுக்க வேண்டும். என்ன நடந்தாலும், பயணிகளின் பாதுகாப்புக்குத்தான் முன்னுரிமை அளிக்கவேண்டும்" என்கிறார் சென்னையைச் சேர்ந்த விமானி அன்பு.

அன்பு போன்ற விமானிகளால் பல சமயங்களில் மிகவும் பொறுமையாக அமர்ந்து முடிவெடுக்க முடியாது. அவசர நேரங்களில் இவர்கள் எடுக்கும் துரிதமான முடிவுகள், நூற்றுக்கணக்கான மக்களின் உயிருடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. அதேசமயம், அவர்கள் எடுக்கும் உடனடி முடிவுகள், புறச்சூழல் தரும் அழுத்தத்தாலோ பதற்றத்தாலோ விளைந்ததாக இருக்கக் கூடாது. அனைத்தையும் யோசித்து விவேகமான முடிவுகளை எடுக்க வேண்டியவர்கள் விமானிகள்.

தென் கொரியாவில் ஞாயிற்றுக்கிழமை (டிச.29) ஏற்பட்ட விமான விபத்தில் 179 பேர் உயிரிழந்த சம்பவம், ஒட்டுமொத்த உலகத்தையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இத்தகைய விபத்துகள் உள்ளிட்ட அவசர காலங்களில் விமானிகளின் எண்ண ஓட்டம் என்னவாக இருக்கும்? அச்சமயங்களில் அவர்கள் எப்படி முடிவெடுப்பார்கள்.

தனியார் விமான நிறுவனம் ஒன்றில், கடந்த ஏழு ஆண்டுகளாக விமானியாக பணியாற்றிவரும் அன்பு பிபிசி தமிழிடம் பேசினார்.

"அவசர காலங்களில் உடனடியாக முடிவெடுக்க வேண்டும். அந்தச் சூழல்களை சமாளிக்க என்னதான் பயிற்சியெடுத்தாலும் உரிய நேரத்தில் சரியான முடிவை எடுக்காவிட்டால் பெரும் விபத்து நிகழ்வதற்கான ஆபத்துண்டு" எனக் கூறியவர், சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த சவாலான தருணத்தை விவரித்தார்.

### பிடிவாதம் கூடாது

பிலிப்பைன்ஸில் நிகழ்ந்த அச்சம்பவம் இன்றுவரை தனக்கு நேர்ந்த சவாலான தருணம் எனக் குறிப்பிடுகிறார் அன்பு.

பிலிப்பைன்ஸில் ஒரு குறிப்பிட்ட தீவில் விமானத்தைத் தரையிறக்கும்போது காற்றின் வேகத்திலும் திசையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனை விண்ட் ஷியர் (Wind shear) என குறிப்பிடுகின்றனர். இந்தச் சூழல், பல விமானிகளுக்கும் இக்கட்டான சூழலாகவுள்ளது.

"விண்ட் ஷியர் ஏற்படும்போது குரல் எச்சரிக்கை தொடர்ந்து வரும். அப்போது, விமானிதான் விமானத்தைத் தரையிறக்கலாமா, வேண்டாமா என்பதை முடிவெடுக்க வேண்டும். அந்த சமயத்தில் விமானத்தைத் தரையிறக்கலாம் என்பது என்னுடைய முடிவாக இருந்தது. ஆனால், என் சக விமானி (Co-pilot) திரும்பி சென்றுவிடலாம் என்று கூறினார். உடனேயே அவர் கூறிய அந்த முடிவைத்தான் செயற்படுத்தினோம்" என்கிறார் அன்பு.

அவர் குறிப்பிட்ட விமானத்தில் 170 பயணிகள் இருந்துள்ளனர். தன் முடிவின்படி தரையிறக்கியிருந்தால் விமானம் பெரும் விபத்துக்குள்ளாகி, உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கும் என்பதையும் அன்பு குறிப்பிடுகிறார்.

விமானிகள் தன்னுடைய முடிவில் பிடிவாதமாக இருக்கக் கூடாது என்பது தங்களுக்கான முக்கிய படிப்பினை என்கிறார் அவர்.

"சக விமானி என்ன சொல்கிறார் என்பதை கேட்க வேண்டும். ஒரு முடிவில் பிடிவாதமாக இருக்கக் கூடாது" என்றார்.

ஒரு விமானத்தில் விமானியை decision in command எனக் கூறுகின்றனர். அவர்கள் முடிவெடுப்பதுதான் இறுதி. ஆனாலும், அவசர சமயங்களில் சக விமானியின் முடிவும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதற்கு இந்தச் சம்பவம் ஓர் உதாரணமாக திகழ்கின்றது.

கடந்த 2017இல் பயிற்சி விமானியாகவும் சில இக்கட்டான தருணங்களை அவர் சந்தித்துள்ளார்.

"முதன்முதலில் விமானத்தை செலுத்தியபோது எஞ்ஜின் செயலிழந்துவிட்டது. இம்மாதிரியான சமயங்களில் அதே இடத்தில் 180 டிகிரி விமானத்தைத் திருப்பி தரையிறக்க வேண்டும். அப்படிச் செய்வது கடினமானது. எப்போதும் காற்று எதிர்த்திசையில் அடிக்கும்போதுதான் விமானம் புறப்பட வேண்டும். இதனால், விமானம் லேசாக சாய்ந்து உயர பறக்கும். அதேபோன்றுதான் தரையிறங்கும்போதும் இருக்க வேண்டும். ஆனால், காற்று எதிர்த்திசையில் அடிக்கவில்லையென்றால் விமானம் நிலையாக இருக்காது" என்கிறார் அன்பு.

அன்பு மட்டுமல்லாமல், அவருடைய சக விமானிகளும் இத்தகைய சவாலான சூழல்களை கடந்துவந்திருக்கின்றனர்.

### சக விமானியின் அனுபவம்

இந்தோனேசியாவில் அப்படி சக விமானி ஒருவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை விவரித்தார்.

இந்தோனேசியாவில் காற்று எப்படி, எந்த திசையில் அடிக்கும் என்பதை எப்போதும் சரியாக கணிக்க முடியாது எனக்கூறிய அவர், ஒரு தீவிலிருந்து மற்றொரு தீவுக்கு செல்லும்போது வானிலை மோசமாகிவிட்டதாக தெரிவித்தார்.

அப்போது, அவர் குறிப்பிட்ட விமானியால் விமானத்தைத் தரையிறக்க முடியவில்லை.

"நம்முடைய வலது, இடது என இருபுறத்திலும் காற்று அடித்தால் அதனை cross wind என்கிறோம். அந்த காற்றை எவ்வளவு தூரம் தாங்க முடியும் என்பது ஒவ்வொரு விமானத்தையும் பொறுத்தது. அந்த குறிப்பிட்ட விமானம் 20 நாட்ஸ் அளவு காற்றைதான் தாங்க முடியும் என்றால், அந்த வானிலையில் அது 120 நாட்ஸ் அளவுக்கு சமம். இன்ஜின் மிகுந்த சேதமாகிவிட்டது. அப்படியொரு இக்கட்டான சூழலில் அந்த விமானி தரையிறக்கினார்", என விவரித்தார் விமானி அன்பு.

விமானம் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குச் செல்கிறதென்றால், நடுவில் முக்கியமான பகுதி (critical point) ஒன்று இருக்கும். அந்தப் பகுதிக்குள் விமானத்தில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால், விமானத்தைப் புறப்பட்ட இடத்துக்கே கொண்டுவந்து விட வேண்டும் என்பது நடைமுறையாக இருக்கிறது. ஆனால், அந்தப் பகுதியைத் தாண்டிவிட்டால் விமானம் எங்கு செல்லவேண்டுமோ அந்த இடத்தை அடைந்துதான் ஆக வேண்டும் - என்கிறார் அவர்.

விமானத்தை இயக்குவது நவீனமாகிவிட்ட காலகட்டத்தில் அதன் பெரும்பாலான பணிகளை ஓட்டோ-பைலட் கருவி கவனித்துக்கொள்கிறது. எரிபொருள் கணக்கிடுவது, விமானத்தின் எடை, பயணிகள் எத்தனை பேர், விமான நிலையம் குறித்தத் தகவல்கள், விமானத்தின் மற்ற கருவிகளின் நிலையை கண்காணித்தல் ஆகிய பணிகளை விமானி அறையிலிருந்து (cockpit) விமானிகள் கவனிக்கின்றனர்.

### பறவைகள் மோதினால் என்ன நடக்கும்?

பறவைகள் விமானத்தின் மோதி விபத்து ஏற்படுவது பரவலாக



அறிந்த ஒன்றாகவே உள்ளது. தென் கொரியா விமான விபத்திலும் அதுகுறித்து விசாரிக்கப்படுகிறது.

"விமானத்தின் மேல் பகுதியில் பறவைகள் மோதினால் அவ்வளவாக பாதிப்பில்லை. ஆனால், எஞ்ஜினில் மோதினால் பாதிப்பு ஏற்படும். எஞ்ஜின் 7,000 ஆர்.பி.எம். (Revolutions per minute) அளவில் சுற்றிக்கொண்டிருக்கிறது. அதில் சிறிய கல்லைத் தூக்கிப் போட்டால்கூட உள்ளே எல்லாமே சேதமாகிவிடும். 2,000 டிகிரி செல்சியஸில் அதன் வெப்பநிலை இருக்கும். சிறிதாக உராய்வு ஏற்பட்டால்கூட பெரும் வெடிப்பு ஏற்படுமென பறவைகள் ஏன் பெரும் விபத்துக்குக் காரணமாக அமைகின்றன என்பதை விளக்கினார் விமானி அன்பு.

### நடுவானில் டிராபிக் ஏற்பட்டால் என்ன செய்வார்கள்?

நடுவானில் மற்ற விமானங்களால் டிராபிக் ஏற்படக்கூடும். இது சமீப காலமாக பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. அப்படியான சமயங்களில் திரும்பிச் செல்வதற்கான அறிவிப்பே எங்களுக்கு வரும்.

அம்மாதிரியான சமயங்களில் எரிபொருள் கூடுதலாக தேவைப்படும். வசதியான விமான நிறுவனங்கள், கூடுதலாக எரிபொருளை வைத்திருக்கும். ஆனால், குறைவான பட்ஜெட்டில் செயற்படும் நிறுவனங்கள் சரியான அளவிலேயே எரிபொருளை கொண்டுவரும். அப்போது, நிறுவனங்கள் நாங்கள் சரியாக தரையிறக்க வேண்டும் என்பதில்தான் கவனம் செலுத்தும் என்கிறார் அன்பு.

### பணிநேரமும் தூக்கமின்மையும்

இந்தியாவின் விமானப் போக்குவரத்து கண்காணிப்பு ஆணையத்தின் (டிஜிசிஏ) விதிகளின்படியும் சர்வதேச விதிகளின்படியும் விமானி ஒருவர், ஒருநாளைக்கு 8 மணிநேரம்தான் விமானத்தை இயக்க வேண்டும். ஒரு வாரத்துக்கு 30 மணிநேரமும் ஒரு மாதத்துக்கு 100 மணிநேரமும் ஒரு வருடத்துக்கு 1,000 மணிநேரங்கள் என்று வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால், பல சமயங்களில் அதிக நேரம் பணி செய்யவேண்டியிருக்கும். இது ஒவ்வொரு நிறுவனத்துக்கும் மாறுபடும் என்கிறார் அன்பு.

"இதனால் உடல்நலம் கெடும். மன அழுத்தம், தூக்கமின்மை ஏற்படும். சரியான முடிவுகளை எடுக்க முடியாது. உடல்நலப் பிரச்சினைகளும் ஏற்படும். இதனால் ஆரம்பத்தில் எனக்கு தனிப்பட்ட ரீதியாக பிரச்சினைகள் ஏற்பட்டன" என பகிர்ந்துகொண்டார் அன்பு.

நீண்டநேரம், உதாரணத்துக்கு 16 மணிநேரம் விமானப் பயணம் என்றால் விமானிகள் இருவர், சக விமானிகள் இருவர் என நான்கு பேர் இருப்பார்கள். அவர்கள் எட்டு மணிநேரத்துக்கு தங்கள் வேலையை பிரித்துக்கொள்வார்கள் என்கிறார் அவர்

### விபத்து தொடர்பான செய்திகளை பார்க்கும்போது எப்படி இருக்கும்?

"எங்கள் குடும்பத்தை விமான விபத்து செய்திகள் நிச்சயம் பாதிக்கும். அடுத்த நிமிடமே நம்மை அழைத்துப் பேசுவார்கள். விமானிகளான எங்கள் நண்பர்களுடன் நாங்கள் அந்த விபத்தை எப்படி தவிர்த்திருக்கலாமென எங்களுக்குள் ஆய்வு செய்துபார்ப்போம். பயிற்சிக் காலத்தில் பயம் இருந்தது. அதன்பின்பு, பயம் இல்லை" என்கிறார் அன்பு.

### பதற்றம் கூடாது

முன்னாள் விமானி பயிற்சியாளரும் (instructor pilot ) விமான பாதுகாப்பு ஆலோசகருமான மோகன் ரங்கநாதன், "எஞ்ஜின் பழுதானால் என்ன செய்ய வேண்டும், மோசமான வானிலையை எப்படி சமாளிக்க வேண்டும் என எல்லா பயிற்சிகளும் விமானிகளுக்கு வழங்கப்படுகின்றன. அமைதியாக முடிவெடுக்க வேண்டும். பரபரப்பாகி விடக்கூடாது. முன்பு எல்லாமே விமானிதான் முடிவெடுப்பார். இப்போது, பெரும்பாலான விமானங்களில் சக விமானியும் ஒருவர் இருக்கிறார்" என்கிறார் மோகன் ரங்கநாதன்.

விமானத்தின் செயற்பாடு தற்போது அதிநவீனமாகி விட்டதாக அவர் குறிப்பிடுகிறார்.

‘‘நாங்கள் தொடங்கிய சமயத்தில் விமானத்தில் ரேடார் இருக்காது. பின்னர், கறுப்பு-வெள்ளை ரேடார், | இப்போது வண்ண ரேடார்கள் வந்துவிட்டன’’ என்கிறார் அவர்.


மழை, புயல் போன்ற வானிலைகளில் வெளியே எப்படி இருக்கிறது என்பது தெரியாது என்றும் அப்போது காட்சி மயக்கம் (optical illusion) ஏற்படும் என்றும் குறிப்பிடுகிறார் அவர்.

"அம்மாதிரியான சமயங்களில் தரையிறக்கும்போது கவனமாக இருக்க வேண்டும். அதற்கு சிறப்புப் பயிற்சி தேவை" என்கிறார் அவர்.

விமானிகளுக்ப் பணியால் ஏற்படும் சோர்வு மிகப்பெரிய பிரச்சினை என்றும் அவர்களுக்கு தேவையான ஓய்வை அளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

**நந்தினி வெள்ளைச்சாமி**
**நன்றி பிபிசி தமிழ்**

# பேசவேண்டியவை மூடியே கிடக்கின்றன



– ஷாமிலா ஷெரீப்

நினைவு 25

***நான் கடமையாற்றிய பாடசாலையில் ஆசிரியர்களுக்கும் பாடசாலை நிர்வாகத்தினருக்கும் இடையே இருந்த முரண் பாட்டை எழுத எனது பெயரில் அநாமதேய முகநூல் பக்கம் தொடங்கி எழுதப்பட்டிருந்தது.***

***அப்போது கடமையாற்றிய அதிபர் தொழில்நுட்ப அறிவோ சமூக வலைத்தள அறிவோ இல்லாதவராதலால் வேறு வேறு யாரோ ஒருவர் எனது பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்த செய்த வேலையெனத் தெரிந்திருக்கவில்லை.***

***அதிபர் விளக்கம் கோரினார். அதை எழுதியது நான் இல்லை என நிரூபிக்க பகீரதப் பிரயத்தனப்பட வேண்டியதாயிற்று.***

***குழந்தை கிடைத்து 40 நாட்கள் நிரம்பாத நிலையில் கொட்டஹேன பொலிஸ் நிலையம் சென்று முறையிட்டேன்.***

***கல்விப்பரப்பில் முன்பெல்லாம் ஒருவரை பழிவாங்க மொட்டைக் கடிதம் போடுகின்ற வழக்கம் இருந்தது. தற்காலங்களில் போலி முகநூல் பக்கங்களூடாக எழுதுகின்றனர். கல்வியலாளர்களுக்கு இது குறித்த தெளிவில்லாமல் இருப்பதும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்கின்ற சுற்றுநிருபங்கள் இல்லாமல் இருப்பதும் கவலைக்குரிய விடயமாகும்.***

***ஊகங்களின் அடிப்படையில் ஆசிரியர்களை நடத்துகின்றபோது மன உளைச்சலுக்காளாகின்றனர். பின்னர் அவர்களே மற்றுமொரு போலிப்பக்கத்தை ஆரம்பிக்கின்றனர்.***

***வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரபலமான மொட்டை கடிதம் என்று சொல்லாடல் சிங்களப் பிரதேசங்களிலும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது, பெரும்பாலும் பாடசாலைகளில் ஆசிரியர்களை பழிவாங்குவதற்கு சக ஆசிரியர்களே இவ்வாறான வேலைகளைச் செய்கின்றனர். கல்வி அமைச்சுக்கு ‘மொட்டை காகிதம்’ எனப்படும் அநாமதேய கடிதங்கள் கிடைக்கப்பெறுகின்றபோது அது தொடர்பாக விசாரிப்பதற்கு வருகை தருகின்றனர். அவர்களுடைய நேரம், காலத்தை செலவழித்து விசாரித்துவிட்டு அறிக்கை சமர்ப்பிக்கின்றனர்.***

***உண்மையில் இவ்வாறான சம்பவங்களின் போது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டு மென்பது தொடர்பான எந்தவிதமான முன்னேற்பாடுகளும் எழுத்துமூலம் கல்வி அமைச்சால் வெளியிடப்படவில்லை. ஆக யார் வேண்டுமென்றாலும் எதனையும் எழுதக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது.***

***சமூக வலைத்தளங்களினுடைய பரவலாக்கத்தின் பின்னர் மிகச் சுதந்திரமாக பழிவாங்கலெனும் சுய இன்பம் அனுபவிக்கின்றனர்.***

***பழிவாங்கல் போலவே உண்மையை எழுதவும் இந்த அநாமதேய கடிதம் முகநூல் பக்கங்கள் பயன்படுவதாக ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். பணிப்பாளர் என்று சொல்லிக்கொண்டு ஆசிரியர்கள் இருவர் செயற்படுவதை அறிந்தும் அது தொடர்பில் உண்மையை தெளிவுபடுத்த முடியாத அப்பாவிகளாக இருந்துள்ளனர். மாகாண சபைகளின் தலையீடு இதற்குக் காரணமாகவுள்ளது.***

**தொடர்வாள்...**

# தப்பெண்ணம்

தமிழன் சிறுகதை



வரக்காமுறையூர் ராசிக்

அன்று ஞாயிற்றுக்கிழமை காலையிலேயே பரபரப்பாக இயங்கிக்கொண்டிருந்தார் நிசாயா ரீச்சர். இரண்டு மூன்று நாட்களாக பெய்த மழை காரணமாக கழுவிய உடுப்புகளைக் காயவைக்க முடியாமல் அவர் அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். இன்று இலேசாக சூரியன் எட்டிப் பார்ப்பதுபோல் தெரிந்தது.

எப்படியாவது அனைத்து உடுப்புகளையும் உலர்த்தி எடுத்துவிட வேண்டுமென நினைத்துக்கொண்டார். அதனாலேயே அவர் வழமைக்கு மாறாக மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தார். என்னதான் விரைவாக வேலைகளை முடிக்க நினைத்தாலும் முன்புபோல் அவரால் வேகமாக செயற்பட முடியவில்லை. சின்னதொரு வேலையை செய்தாலும் அவருக்கு மூச்சுத் தட்டியது. ஏனெனில், அவர் ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியை.

தற்போது அறுபத்தைந்து வயதை எட்டிப்பிடித்துக் கொண்டிருந்தார். அவருடைய இரு பிள்ளைகளும் திருமணம் முடித்து தனித்தனியாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். நிசாயா ரீச்சர் மட்டும் அவரது கணவரோடு அந்த வீட்டிலே வாழ்ந்துகொண்டிருந்தார். பிள்ளைகள் தம்மோடு வந்துவிடுமாறு கூறியபோதும் நிசாயா ரீச்சரும் அவருடைய கணவரும் பிள்ளைகளுக்குப் பாரமாக இருக்க விரும்பவில்லை. தமது வேலைகளை தாமே செய்துகொண்டு மிகவும் சந்தோஷமாக நாட்களை நகர்த்திக்கொண்டிருந்தார்கள்.

தற்போது வானம் மேலும் பிரகாசமாக வெளுக்கத் தொடங்கியது. சூரியக் கதிர்கள் சுள்ளென சுட்டன. உடனே கழுவிய உடுப்பு மூடையைத் தூக்கிக்கொண்டு வீட்டின் மேல்மாடிக்கு போனார் நிசாயா ரீச்சர். அவருக்கு மூச்சிரைத்தது. இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் உடுப்புகளைக் கொடி மீது விரித்துப் போட்டுக்கொண்டிருந்தார்.

அப்போது வீட்டு வளவின் நுழைவாயிலை யாரோ தட்டும் சத்தம் கேட்கவே கடும் எரிச்சலோடு கீழிறங்கி வருகிறார். வீட்டின் முன்கதவைத் திறந்து நுழைவாயிலுக்கு வெளியே எட்டிப்பார்த்தபோது அங்கு வாட்டசாட்டமான ஓர் உருவம் தொய்ந்துபோய் நின்றிருந்தது. கேட்டைத் திறந்து உள்ளே அழைப்பதற்கு எத்தனித்த ரீச்சர் வந்திருக்கும் நபரின் தோற்றத்தைப் பார்த்ததும் தனது எண்ணத்தை மாற்றிக்கொண்டார்.

ஏனென்றால் பல நாள் பராமரிக்கப்படாத முகம், நொறுங்கி அழுக்காய்ப்போன ஒரு ஜுப்பா, நிறம் மாறிப்போன ஒரு தொப்பி, கையில் ஓர் அழுக்கடைந்த பை. இவற்றோடு நின்றிருந்த அந்த நபரைப் பார்த்ததும் யாசகம் கேட்டு வந்த ஒருவர் என நினைத்துக்கொண்டு தனது முந்தானையில் முடித்து வைத்திருந்த ஐம்பது ரூபாவை எடுத்து நீட்ட எத்தனிக்கிறார். அப்போது அந்த நபரின் முகம் மாறியது. அவர் சங்கடத்தோடு பேசத் தொடங்கினார்.

''நீ.. நீங்க நிசாயா ரீச்சர்தானே..?''

''ஆமா நான் நிசாயா ரீச்சர்தான். நீங்க?''

''அப்ப என்னய உங்களுக்கு ஞாபகமில்லயா ரீச்சர்? நான்தான் அஸ்லம். நான் யுனிவர்சிட்டியல படிக்கிற நேரம் மாசா மாசம் எனக்கு உதவி செஞ்சீங்களே. அந்த அஸ்லம்தான் ரீச்சர் நான்.''

''அட நம்ம அஸ்லம் இன்ஜினியரா? என்னால நம்பவே முடியல. வாங்க தம்பி உள்ள வாங்க.''

மிகுந்த சந்தோஷத்தோடும் அடையாளம் காண தவறிவிட்டோமே என்ற குற்ற உணர்வோடும் அஸ்லமை அழைத்து வந்து சோபாவில் அமரச் செய்தார் நிசாயா ரீச்சர். ஆமாம். இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன்னர் அஸ்லம் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்திலே கற்றுக்கொண்டிருந்தார். அப்போது நிசாயா ரீச்சர் அவருடைய குடும்ப உறுப்பினர்களின் உதவியோடு ஒரு பொது நிதியத்தை ஆரம்பித்து நடத்தி வந்தார். உயர் கல்வி கற்க வசதியற்ற மாணவர்களுக்கு உதவி செய்வதுதான் அந்த நிதியத்தின் நோக்கம். அதிலிருந்து நிதியுதவி பெற்ற ஒருவர்தான் அஸ்லம் என்பதை உணர்ந்துகொண்ட நிசாயா ரீச்சர் மகிழ்ச்சியடைந்தார்.

''என்ன ரீச்சர் ஒரு மாதிரியா இருக்கிறீங்க..? நீங்க இன்னும் என்ன யாருன்னு மதிக்கலயா?'' பரிதாபமாகக் கேட்டார் அஸ்லம்.

''இல்ல இல்ல உங்கள எனக்கு நல்லாவே ஞாபமிருக்கு. ஆனா, உங்கள இந்த கோலத்துல பார்த்ததுதான் கொஞ்சம் மனசுக்கு கஷ்டமா இருக்கு தம்பி.''

வெளிப்படையாகவே தனது ஆதங்கத்தை வெளியிட்டார் நிசாயா ரீச்சர்.

''அப்படி ஒன்னுமில்ல ரீச்சர். நான் நல்லாதான் இருக்கேன். உங்கள பார்த்து பத்து வருஷத்துக்கு மேலாச்சு. அதுதான் சும்மா ஒருக்கா பார்த்துட்டு போகணும்னு தோணிச்சு ரீச்சர். எப்படி ரீச்சர் நீங்க. எல்லாரும் சுகமா ஈக்கிறீங்களா?''

நன்றியுணர்வோடு நலம் விசாரித்த அஸ்லமை கேள்விக்குறியோடு நோக்கிய ரீச்சர்.

''நாங்க எல்லாரும் சுகமா ஈக்கிறம். நீங்க எப்படி தம்பி? இது என்ன கோலம்? இன்ஜினியரிங் முடிச்சுட்டு ஒரு பெரிய ஜொப்ல இருப்பீங்கன்னு நெனச்சன். ஆனா இப்படி வந்து நிக்கிறீங்களே..'' என்று ஆச்சரியத்தோடு நிறுத்தினார்.

''எனக்கு தொழில் ஒன்றும் சரியா செட் ஆகல ரீச்சர். அதனால ஒரு நாலு மாசம் அல்லாஹ்ட பாதையில போயிட்டு நேத்துதான் வீட்டுக்கு வந்தன். இனி ஜொப் ஒன்று கிடைக்குமென்ற நம்பிக்க எனக்கு இல்ல ரீச்சர். அதுதான் என்ன செய்றன்டு விளங்குதில்ல'' - விரக்தியின் உச்சத்திலிருந்து பேசினார் அஸ்லம்.

''என்ன தம்பி இவ்வளவு படிச்சிட்டு லூசு மாதிரி கதக்கிறீங்க..? முதல்ற நீங்க ஏதாவது ஜொப்புக்கு முயற்சி பண்ணினீங்களா? எப்லிகேஷன் போட்டீங்களா?'' சற்று கோபமாகப் பேசினார் நிசாயா ரீச்சர்.

'''இதுக்கு பொறகு யாரு ரீச்சர் எங்களுக்கு வேல தரப் போறாங்க..?'' மீண்டும் அஸ்லமின் முகத்தில் அசடு வழிந்தது.

''தாரதும் தராததும் பொறவு. முதல்ற நீங்க ஏதாவது முயற்சி பண்ணி நாலு இடத்துக்கு எப்லிகேஷன் போட்டு இன்டர்விவுக்கு போனீங்களா?'' மீண்டும் ஆவேசப்பட்டார் நிசாயா ரீச்சர்.

''இல்ல ரீச்சர். முதல்ற ரெண்டு மூணு இடத்துக்கு எப்லிகேஷன் போட்டன். இப்ப ஒன்டுக்கும் போடுறதில்ல ரீச்சர். இதுக்குப் பின்னாடி எங்களுக்கெல்லாம் ஜொப் கிடைக்காதுன்னு எங்கட அமீர் சாஹிபும் சொல்லிட்டாரு. அதனால அல்லாஹ்ட பாதையில காலத்த கழிச்சிடலாம்னு நெனக்கிறன் ரீச்சர்.''

அஸ்லமின் உரையைக் கேட்டு அதிர்ந்துபோனார் நிசாயா ரீச்சர்.

''யாரு அந்த அமீர் சாஹிப்? அவருக்குத்தான் தல இல்லேன்னா இன்ஜினியரிங் படிச்ச உங்கட தல எங்க போச்சு..? தொழிலொன்டும் அப்படியே வானத்துல இருந்து விழுந்துடாது. நாங்கதான் முயற்சி பண்ணனும். நாலு இடத்துல தேடணும். நீங்க இந்த லட்சணத்துல போனா யாரு ஜொப் தருவாங்க. தொப்பி போடுங்க, ஜுப்பா போடுங்க, தாடியும் வைங்க. அதுல ஒன்னும் பிரச்சின இல்ல. ஆனா உடுக்குற உடுப்ப நல்லா கழுவி அயன் பண்ணி போடுங்க. கொஞ்சம் ஸ்மார்ட்டா இருக்க முயற்சி பண்ணுங்க. அல்லாஹ் மிகவும் அழகானவன். அழக விரும்புறான். நம்ப நபியவங்களும் அழகானவங்க. ரொம்ப நேர்த்தியா அழகாத்தான் இருந்தாங்க. அந்த அல்லாஹ் ரசூலப்பத்தி அதிகமா பேசுற நீங்க இப்படி அலங்கோலமா இருக்கிறீங்களே. கொஞ்சம் கூட யோசிக்க மாட்டீங்களா? நீங்க நாலு மாசம் போங்க, ஒரு வருஷம் போங்க அதுல தப்புன்னு நான் சொல்ல வரல்ல. ஆனா தொழில் செய்றதும் படிக்கிறதும் கூட வணக்கம் என்கிறத புரிஞ்சு கொள்ளுங்க தம்பி. உங்கள போன்றவங்க செய்ற பிழையாலதான் அல்லாஹ்ட பாதையில போறதென்ட இந்த முயற்சிய எல்லாரும் விமர்சிக்கிறாங்க. தயவு செஞ்சு உங்கள மாத்திகொள்ளுங்க.''

படபடவென பொரிந்து தள்ளிய நிசாயா ரீச்சரை நேரே பார்க்க முடியாமல் தலைகுனிந்தார் அஸ்லம். அவருடைய கண்கள் இலேசாகக் கலங்கின. எதையெதையோ பேச நினைக்கிறார். ஆனால், அவரால் பேச முடியவில்லை. அஸ்லமின் மௌனம் நிசாயா ரீச்சரின் உரைக்கான அங்கீகாரமாக அமைந்தது. அதனால் மீண்டும் அவரே தொடர்ந்தார்.

''தம்பி, நான் உங்கள தரக்குறைவா நெனக்கல. நீங்களும் நாலு பணம் உழைக்கணும்னு நெனக்கிறன். யாருக்கிட்டயும் கையேந்தாம சொந்த கால்ற வாழணும். ஒரு தொழில் கிடைக்கிற வரைக்கும் டியூசன் வச்சா கூட நல்லா உழைக்கலாம் தம்பி. போங்க இப்ப போய் முதல்ற உங்கட தோற்றத்த மாத்திக்கிட்டு ஒரு பயோ டேட்டாவோட நாளக்கி என்னய வந்து பாருங்க.''

ஒரு தொழிலதிபரைபோல் பேசிய நிசாயா ரீச்சரை மரியாதையுடன் நோக்கினார் அஸ்லம். நிசாயா ரீச்சரின் சிபார்சு மூலம் நிச்சயம் தனக்கு நல்லதொரு தொழில் கிடைக்கும் என்ற நம்பிக்கை முதன் முறையாக அஸ்லமின் உள்ளத்தில் தளிர்விடுகிறது. ஒரு புது மனிதராக அவர் வெளியேறிச் செல்கிறார்.

தனது மகனுடைய கம்பனியில் அஸ்லமுக்கு வேலை வாங்கிக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் நிசாயா ரீச்சரின் உள்ளமெல்லாம் பரவிச் செல்கிறது.

## மலையகத்தின் சொல்ல மறந்த கதை

வந்த இடமும்
நிலைக்கவில்லை
போகும் இடமும்
நிலைக்கவில்லை
நிலை இல்லா
வாழ்க்கையது
இன்னும் எத்தனை
காலத்துக்கோ...

லட்சுமி வாழ்ந்து விட்ட
பொன்னான
வாழ்க்கையது
கண்ணு முன்னே
வந்து போக
கால் போன
போக்கினிலே
ஆறுகாலும் புறப்படுது...

அந்த மாத்தளை
சந்தியிலே
பிரிந்து போன
மக்கள் சனம்
நானு ஓயா என்று
சொல்லும்
இந்த நீலகிரி
தோட்டத்திலே
மீண்டும் சேர்ந்திடுமா...

பொடிநடையா புறப்படும்
நேரம் எல்லாம்
ஆங்காங்கே கோப்பி
மரம் பிடுங்குவதும்
தேயில மரம் நாட்டுவதும்
வாடிக்கையாக்கியது...

என்னதான் இந்த
கோப்பிக்காடு
எத்தனையோ
துன்பங்கள
தந்து விட்டுப்போனாலும்
சோறு தந்த பயிராச்சே
பாசம் இல்லாமல்
இருக்குங்களா...

வளர்ந்து வரும்
தேயிலைக்கு
இந்த சொல்ல மறந்த
தேசத்திலே
சொல்ல மறந்ததுவாய்
சோகங்கள் பல இருக்கு...

கொலரா நோவினிலே
ஆளுகெல்லாம்
அங்கங்கே
மரம் போல சாய்ந்து விட
அப்படி இறந்து போன
ஆளுகளை
ஆளுயர குழியை வெட்டி

அதற்குள்ளே ஆள
போட்டு
அதற்கு மேலே
தேயிலையை
நட்டு வச்ச வரலாறு
இந்தக் கரை படிந்த
தேசத்திலே
கரையாக தான் இருக்கு...

செருப்புகள கண்டிராத
மூக்காயி காலு அது
கோப்பி கறைகளில்
பத்தாக பிடிச்சிருக்கு...

உண்மைக்குமே அந்த
அழகான பாதங்கள்
ஆதியிலிருந்துதான்
எத்தனை கதைகள்
கொண்ட
அற்புத பாதம் அது...

பொறந்துவிட்ட
அந்த ஊரு
ஒன்னுக்கும் ஆகாதுன்னு
உசுர அங்கு விட்டு
உடம்பை மட்டும்
தள்ளிக்கிட்டு
உதறி தள்ளிவிட்டு
கப்பலேறி வந்துருச்சு

வந்த இடம் என்னமோ
வாழ்க்கையே மாத்திடுச்சு
எடுத்து வந்த உடலை
கூட
மொத்தமா
பொறுக்கியாந்து
சஞ்சீவி மலையதுவோ
அனுமாருதூவி விட்டுப்
போன மாதிரி...

சிலோனில் சிதறவிட்டு
வேடிக்கை தான்
பார்த்திருச்சு
அதுக்குக் கூட மசியாம
முன்னோக்கி நடந்து
வந்த
வீரமிக்க பாதமது
கொஞ்சமும் ஓய்வு இன்றி
இன்னமும் நடக்கிறது.....

மூச்சுக்காற்று
பலமாக வீசி விட
நீண்ட தும்மலும்
சளியோடு வந்தடைக்க
காய்ச்சலும் தலைவலியும்
உடம்பை வாட்டியது
நம்ம மூக்காய்க்கு...

உசுரு போவது கூட
இப்போது கவலை
இல்லை
சின்னப்பொண்ண
எப்படியும் சுத்தி சரி
அவ அப்பன் கிட்ட
கொடுத்து விட்டா
மூக்காயி மூச்சியது
அமைதியாய்
போய்விடும்.....

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

எம்.ராமதாஸ்,
இறம்பொடை.

# புலரும் பொழுது

தமிழன் தொடர்கதை

அத்தியாயம் 03

கலாபூஷணம் சபீனா வைத்துல்லாஹ்

கவிதாவும் அன்று தன் எண்ணத்தை அண்ணி மாலாவின் செவிகளில் மெல்லப் போட்டுவிட்டாள்.

''இந்த விஷயம் எனக்கென்றால் சந்தோஷம்தான் கவிதா. எல்லோரும் விருப்பப் பட்டாங்க என்றால் நல்லது நடக்கும்" என்றதும்

''நீங்க கதைச்சுப் பாருங்க அண்ணி. நீங்க சொன்னாச் சரி தானே!''

''ஆனந்தனிடம் ஒரு வார்த்த கேட்போமே.'' கவிதா இப்ப அவசரப்பட வேணாம்.''

''சரி அண்ணி. நல்ல முடிவு கெடைக்கட்டும்" என்று கூறிவிட்டு வீட்டுக்குச் சென்றுவிட்டாள் கவிதா.

அன்று இரவு முழுக்க மாலாவுக்குத் தூக்கம் வரவே இல்லை. கவிதாவின் ஆசை நியாயமானதுதான். என்றாலும், ஆனந்தனின் சம்மதம் தேவைதானே. அவனிடம் இதனைக் எவ்வாறு கூறுவது? என்றெல்லாம் யோசித்து யோசித்தே விடிந்து விட்டது.

கணவனிடம் திடீரென்று கூறாமல் சந்தர்ப்பம் பார்த்துத்தான் சொல்ல வேண்டுமென எண்ணிக்கொண்டாள்.

தன்னோடு பிறந்த ஐந்து சகோதரிகளையும் கரை சேர்த்து விட்டுத்தான் தனது வாழ்வைப் பற்றிச் சிந்தித்தவர் நாதன். சகோதரிகள் அவரின் ஆசைப்படி ஓஹோ என்று மிகவும் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். கடந்த காலங்களில் அவர்கள் நாதனை ஒரு பொருட்டாக எண்ணியதே இல்லை. ஆனாலும், நாதன் தன் பிள்ளைகளையும் மனைவியையும் கூட்டிக்கொண்டு அவர்களின் வீடுகளுக்குச் சென்று உறவை முறிக்காமல் நடந்துகொள்வார்.

மண்ணை நம்பி வாழ்ந்தார் நாதன். மழையில்லாது மண் வறண்டு போனபோது, அவரை வறுமை தொடர்ந்து துரத்தியது. அந்தக் காலங்களில் மாலாவின் உழைப்புத்தான் கை கொடுத்தது. தன் மக்களை உயர்கல்விக்காக நகரத்துக்கு அனுப்பியிருந்த வேளையில் பட்ட கஷ்டங்கள் கொஞ்சநஞ்சமல்ல. துன்பங்கள் தொடர்கையில் தூர விலகிடும் உறவுகளை எண்ணி மிகுந்த வேதனையுடன் இருந்தார் நாதன். அக்காலங்களில் மாலாவின் அன்புத் தேனைச் சுவைத்து ஆறுதலடைவார் அவர்.

தன் பிள்ளைச் செல்வங்கள் கல்வியில் உயர்ந்திருக்கும் வேளையான இன்று எல்லோருக்கும் அவர் தேவைப்படுபவராக உள்ளார்.

கடந்த காலங்களில் நடந்தவைகளை அவர் மறந்துவிட்டு தன் உறவுகளோடு சேர்ந்து வாழவே எத்தனித்துக்கொண்டிருக்கின்றார்.

நாதனின் தந்தையாரும் அவர் வாழ்ந்த பொன்னான மண்ணில் உழுதுண்டு வாழ்ந்தவர்தான். இல்லற வாழ்வில் ஐந்து பெண்களையும் ஓர் ஆண்மகனையும் இறையருளாகப் பெற்றவர்.

தன் குடும்பத்தை அன்பால் பிணைத்து வாழ்ந்தவர். பிள்ளைகளைக் கரைசேர்க்க முன்னரே காலன் அவரை அணைத்துக்கொண்டான்.

அந்தக் குடும்பத்தில் விதியின் திருவிளையாடல்கள் தொடர்ந்தன. நாதன் கல்வியை விட்டு விலகினார். விவசாயமும் கால்நடை வளர்ப்பும் அவரின் தொழிலாகியது.

மரக்கறிப் பயிர்களும் அவரின் தோட்டத்தில் விளைந்தன.

படர்ந்திடக் கொழு கொம்பின்றித் தவித்திடும் முல்லைக்கொடியாய் இருந்த அன்னையின் தலைமகனான நாதன், குடும்பம் பற்றிப் படரும் பந்தலானார். தன் குடும்பச்சுமையைத் தலைமேல் ஏற்றினார். இரவு பகலாகப் பாடுபட்டு உழைத்தார். தங்கைமார் ஐவரையும் ஒவ்வொருவராகக் கரைசேர்த்தார். பல தியாகங்களுடன் துன்பக் கடலில் நீந்தினார்.

"மாலா மாலா வயற்பக்கம் போயிட்டு வரட்டா" என்ற சத்தம் கேட்டுச் சிந்தனை கலைந்தார் மாலா.

"இஞ்சருங்க கொஞ்சம் நில்லுங்க."

"தேத்தண்ணி குடிச்சிட்டுப் போங்க" என்றதும்,

"சரி சரி கொஞ்சம் கெதியாத் தாங்க மாலா" என்றார். புலரும் பொழுதிலே, பசும்பால் கலந்து கொடுத்த தேநீரை அருந்திக் கொண்டிருந்த தன் தலைவனிடம், "என்னங்க, எப்ப வெள்ளாம வெட்டப் போறீங்க. வெளஞ்சிட்டுத் தானே!"

"வெளஞ்சிட்டு மாலா. இன்னும் ரெண்டு நாள் கழிச்சு வெட்டலாம் மாலா'' என்றார்.

"வானம் குழப்பிடுமோ என்ற பயமாக் கெடக்குதுங்க."

"கடவுளின் உதவியாலே அப்படி வராது. பயப்படாதீங்க மாலா'' என்றார்.

தேநீர் அருந்திக்கொண்டிருந்த அமுதன், "அப்பா நில்லுங்கப்பா நானும் வாறேன்" என்றான்.

இருவரும் தங்கள் வயலை நோக்கி நடந்தனர்.

முற்றி விளைந்த செந்நெல்லின் வாசம் அவர்களின் நாசியினூடாகச் சென்று நாடி நரம்புகளையும் தடவிக்கொண்டது. அந்த நெற்பயிர்கள் அங்கு வருவோரைத் தலை வணங்கி வரவேற்பதுபோலச் சாய்ந்து கிடந்தன. கண்ணுக் கெட்டிய தூரம் வரை பரந்து விரிந்து கிடந்தது நாதனின் வயல்.

அப்பாவும் மகனும் வயலினுள் இருந்த நீரை மண்வெட்டி பிடித்துக் கொத்தி வடிய விட்டனர்.

"அப்பா இனி நீங்க கஷ்டப்பட வேணாமப்பா. யாரையும் கூலி குடுத்துச் செய்விக்கலாம் தானேயப்பா" என்றான் மகன் அமுதன்.

கடின உழைப்பின் வலியை உணர்ந்துகொண்ட அவன், அப்பா மீது பரிதாபப்பட்டான்.

"இனி நாங்களும் ஒழைக்கத் தொடங்குவோம் தானே. நீங்க இனி ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கப்பா! இவ்வளவு கஷ்டப்படுறீங்களேயப்பா" என்று வருத்தப்பட்டான்.

வழமையா மணியத்தார்தான் வந்து வேலை செய்யிறவர். அவர்ர பொஞ்சாதிக்குச் சுகமில்லையாம். அதுதான் அவர் வரல்ல.

"சரி அமுதா. இனி ரெண்டுபேரை வெச்சி வேலையைச் செஞ்சிகொள்ளுவோம் மகன்'' என்று நாதன் சமாதானம் பேசினார்.



# பண்ட் முதல் பாண்டியா வரை 2024இல் மீண்டு வந்த வீரர்கள்

(ரமணி)

**ஒரு விளையாட்டு வீரர் அல்லது விளையாட்டு அணியாக இருப்பதென்பது போட்டிகளை வெல்வது மட்டுமல்ல, கடினமான சூழ்நிலைகளில் உங்களை எப்படிச் சமாளிப்பது என்பதும் அது பல நேரங்களில் பலருக்கும் ஊக்கமளிக்கும் விஷயமாக இருக்கலாம். அந்த வகையில் 2024ஆம் ஆண்டில் பல விளையாட்டு வீரர்களின் - விளையாட்டு அணிகளின் கதை முடிந்ததெனக் கருதப்பட்டபோது மீண்டும் வந்து சாதித்தார்கள்.**






### ரிஷப் பண்ட்

இந்திய விக்கெட் கீப்பர்-பேட்டரான ரிஷப் பந்த், 2022 டிசம்பரில் டெல்லியிலிருந்து ரூர்க்கிக்கு கார் ஓட்டிச் சென்ற போது பயங்கர விபத்தில் சிக்கினார். இதன் காரணமாக பலத்த காயமடைந்தார். இதனால் காலில் பெரிய அறுவைசிகிச்சை செய்து 2023ஆம் ஆண்டு முழுவதும் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடமல் இருந்தார். 2024ஆம் ஆண்டில் காயத்திலிருந்து மீண்டும் கிரிக்கெட் களத்துக்குத் திரும்பினார். பண்ட் ஐ.பி.எல். - 2024இல் ஐ.பி.எல்லில் டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியை வழிநடத்தினார். 2024 ஐ.பி.எல். சீசனில் 13 போட்டிகளில் விளையாடிய ரிஷப் பண்ட் மூன்று அரைச்சதங்களுடன் 446 ஓட்டங்கள் எடுத்தார்.

### இலங்கை கிரிக்கெட் அணி

''ஒரு காலத்தில் எப்படி இருந்த பங்காளி நீ'' என்று கேட்குமளவுக்கு இலங்கை அணி சர்வதேச கிரிக்கெட் தொடரில் படுமோசமாக விளையாடி வருகிறது. 2011ஆம் ஆண்டில் 50 ஓவர் உலகக் கிண்ணத்தின் இறுதிப்போட்டி வரை சென்ற அணி, 2014ஆம் ஆண்டு ரி20 உலகக்கிண்ணத்தை வென்ற அணி, சீனியர் வீரர்கள் பலர் ஓய்வு பெற்றதால் சர்வதேச கிரிக்கெட்டில் மிக மோசமாக விளையாடி வந்தது. பல கெப்டன்கள் மற்றும் பயிற்சியாளர்களை மாற்றிய போதும் அணியில் எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இருந்தது. ஆனால், இந்த ஆண்டின் பிற்பகுதியில் முன்னாள் வீரர் சனத் ஜயசூரிய இலங்கை அணிக்குப் பயிற்சியாளராக வந்தார்.

முதலில் இந்தியாவுக்கு எதிரான ரி20 தொடரை இழந்தாலும் அடுத்து வந்த ஒரு நாள் தொடரை 3-0 என்கிற கணக்கில் வென்றது. இதன்மூலம் 27 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கை மண்ணில் இந்திய அணிக்கு எதிரான தொடரை இலங்கை அணி வென்றது. அதன் பின்னர் நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரையும் இலங்கை அணி வென்றிருந்தது. இந்த வருடத்தில் இலங்கையின் சிறந்த ஆண்டாக அமைந்தது.

### ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு

இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடரில் ஆர்.சி.பி. அணியின் கம்பேக்யாரலையும் மறக்க முடியாது. முதல் எட்டு ஆட்டங்களில் ஒரேயொரு வெற்றியுடன் இருந்த ஆர்.சி.பி. அணி எப்படியும் பிளே ஒவ் சுற்றுக்குத் தகுதி பெறாது என்று அனைவரும் எதிர்பார்த்த நிலையில், அடுத்த ஆறு போட்டிகளில் வரிசையாக வெற்றிபெற்று பிளே ஒவ் சுற்றுக்கும் தகுதி பெற்றது.



குறிப்பாக, மே 18 ஆம் திகதி சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தினால்தான் பிளே ஒவ் சுற்றுக்குத் தகுதி பெற முடியும் என்கிற நிலையில், அந்தப் போட்டியில் சென்னை அணியை 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பிளே ஒவ் சுற்றுக்குள் நுழைந்தது மட்டுமல்லாமல் சென்னை அணியையும் தொடரிலிருந்து வெளியேற்றியது.



### ஹர்திக் பாண்டியா

இந்திய அணி வீரரான ஹர்திக் பாண்டியாவுக்கு கடந்த ஏப்ரல், மே மாதங்கள் கசப்பான மாதங்களாக அமைந்தன. மும்பை இந்தியன்ஸ் அணிக்கு அவர் கெப்டனாக நியமிக்கப்பட்டார். ஆனால், ரோஹித் சர்மாவுக்குப் பதிலாக மும்பை அணிக்குக் கெப்டனாக நியமிக்கப்பட்டமை சொந்த அணி ரசிகர்கள் மைதானத்தில் வைத்து அவரை அவமதித்துக்கொண்டே வந்தனர்.மறுபுறம் மும்பை அணியின் சீனியர் வீரர்கள் அவரை மறைமுகமாக சாடி வந்தனர். இந்த சீசனில் மும்பை இந்தியன்ஸ் அணி பிளே ஒவ் சுற்றுக்குத் தகுதி பெறாமல் போனது.

இது ஒருபுறமிருக்க, பாண்டியாவின் சொந்த வாழ்விலும் இடி இறங்கியது. பாண்டியாவும் அவரது மனைவியும் தங்கள் திருமண வாழ்வை முறித்துக்கொண்டனர். இதனால் மனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டார் ஹர்திக் பாண்டியா. இப்படிப்பட்ட மனநிலையுடன் ரி20 உலகக்கிண்ணத்தில் களமிறங்கினார் ஹர்திக் பாண்டியா. அந்தத் தொடரில் சிறப்பான ஆட்டத்தை பாண்டியா வெளிப்படுத்தினார். இந்திய அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. இறுதிப்போட்டியின் பரபரப்பான இறுதி ஓவரை ஹர்திக் பாண்டியா வீசினார். சிறப்பாக பந்து வீசிய பாண்டியா கடைசி ஓவரில் இந்திய அணியின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தார்.

இரண்டு மாத காலமாக விளையாட்டிலும் சொந்த வாழ்க்கையிலும் பெரிய மன உளைச்சலுக்கு ஆளானலும் தன்மீது நம்பிக்கை வைத்து மிகப்பெரிய கம்பேக் கொடுத்தார் ஹர்திக் பாண்டியா.

### வினேஷ் போகத்

30 வயதான வினேஷ் போகத் பாரிஸ் 2024இல் ஒலிம்பிக் போட்டியின் இறுதிப் போட்டிக்கு முன்னதாக அதிக எடை காரணமாக வெள்ளியை தவறவிட்டார். இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் பிரிஜ் பூஷன் சரண் சிங்குக்கு எதிராக பல மாதங்களாக தெருக்களில்



போராட்டம் நடத்தியும் நீண்ட காலம் பயிற்சியிலிருந்து விலகி இருந்தபோதிலும், பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற யுய் சுசாகியை தோற்கடித்து அசத்தியிருந்தார். ஆனால், தகுதி நீக்கம் அவரை பெரியளவில் பாதித்த நிலையில், அவர் அரசியலில் இறங்கி, ஹரியானா சட்டமன்றத் தேர்தலில் ஜூலானா தொகுதியில் வெற்றி பெற்றார். பல பெண்களுக்கு வினேஷின் இந்தப் பயணம் ஒரு சிறந்த பயணமாக இருந்தது.

# இந்தியாவுக்கு வெளியே அஸ்வின் விளையாடியிருக்க வேண்டும்

## அனில் கும்ப்ளே




இங்கிலாந்து, தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் விளையாட அஸ்வினை அணி நிர்வாகம் தொடர்ந்து தெரிவுசெய்யாதது வருத்தமளிக்கிறது. இது என்னை எப்போதும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது - என்கிறார் அனில்.

ரவிச்சந்திரன் அஸ்வின் ஒரு மேட்ச் வின்னர். அவர் தனது தொழில் வாழ்க்கை முழுவதும் சிறந்து விளங்கிய ஒரு முழுமையான தொழில்முறை. ஒவ்வொரு முறையும் நீங்கள் அவர் பந்து வீசுவதைப் பார்க்கும்போது, அவர் சிறப்பாக வர விரும்புவதையும் எந்தச் சூழ்நிலையிலும் போட்டியை தன் வசமாக்க முயற்சிப்பதையும் நீங்கள் பார்க்கலாம். எதிரணியினரிடமிருந்து முக்கிய அச்சுறுத்தல்கள் யாராக இருக்கக்கூடும் என்பதை அவர் அடையாளம் கண்டுகொண்டிருக்கிறார். மேலும் செயலின் தடிமனாக மாறாமல் இருக்கிறார். அவர் வைத்திருக்கும் ஐந்து ஃபோர்களின் எண்ணிக்கையைப் பாருங்கள். அவர் அணிக்கு எவ்வளவு முக்கியம் என்பதை இது உங்களுக்குச் சொல்கிறது. அஸ்வின் முன்னோடியாகவும் ஒரு படி மேலே இருக்கவும் நம்புகிறார். இதைத்தான் நான் செய்ய முயல்கிறேன் - என்கிறார்.

2011 ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸுக்கு (சிஎஸ்கே) எதிராக ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருக்கு (ஆர்சிபி) எதிராக அந்த விக்கெட்டுகளை நான் முதல்முறையாகப் பார்த்தேன். அவர் நிச்சயமாக அவரது கைவினைப்பொருளைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் வகையில் உருவாகியுள்ளார். அந்த மாதிரியான எதிர்பார்ப்பு அணியிலிருந்தும் மற்ற அனைவரிடமிருந்தும் இருக்கும்போது அது எளிதல்ல. ஒவ்வொரு நாளும், அவர் ஐந்து விக்கெட்டுகளை எடுப்பார் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். அவர் தொடர்ந்து அதைச் செய்கிறார் - என கும்ப்ளே தெரிவித்தார்.



# பயிற்சியாளர் பதவியிலிருந்து ரூனி வெளியேற்றப்பட்டார்

இங்கிலாந்து முன்னாள் ஜாம்பவான் வெய்ன் ரூனி, செவ்வாய்க்கிழமை பிளைமவுத் ஆர்கைலால் பதவி நீக்கம் செய்யப்பட்டதையடுத்து, அவரது பயிற்சியாளர் வாழ்க்கை பாழடைந்து வருவதாகத் தெரிகிறது.

ரூனி கோடையில் கையெழுத்திட்ட மூன்று ஆண்டு ஒப்பந்தத்தின் ஏழு மாதங்களுக்குப் பிறகு கிளப்பை விட்டு வெளியேறினார், அவரது பயிற்சியில் பிளைமவுத் 23 போட்டிகளிலிருந்து வெறும் 18 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

அது தனது கடைசி ஒன்பது போட்டிகளில் ஆறில் தோல்வியடைந்தது. 51 கோல்களை விட்டுக் கொடுத்தது, அதேநேரத்தில் வெறும் 22 கோல்களை மட்டுமே அடித்தது.

பிளைமவுத் சமூக ஊடகங்களில் ரூனி வெளியேறுவதை அறிவித்தார். கிளப்பும் பயிற்சியாளரும் "உடனடி நடைமுறைக்கு வருவதற்கு பரஸ்பரம் ஒப்புக்கொண்டனர்" என்று கூறினார்.

ரூனி பொறுப்பேற்ற 15 ஆட்டங்களில் வெறும் இரண்டு வெற்றிகள், ஒன்பது தோல்விகள் அவரை வெளியேற்றும் முடிவை ஏற்படுத்தியது.

பேர்மிங்காமுக்கு முன், அமெரிக்க அணியான DC யுனைடெட் அணிக்கு ரூனி பயிற்சியாளராக இருந்தார்.

14 வெற்றிகள், 14 டிராக்கள் மற்றும் 25 தோல்விகளுடன் அவரது முதல் பயிற்சியாளர் பணி டெர்பி கவுண்டியில் இருந்தது.



தற்போது விற்பனையில்...

புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி மாதாந்த வெளியீடுகள்

ஜனவரி மாத

சஞ்சிகைகளை பெற்றுக்கொள்ளலாம்

பிரதிகளை பெற்றுக்கொள்ள அழையுங்கள்

0777 983308 / 074 1684643



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7